பிரேமானந்த்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பிரேமானந்த்

பிரேமானந்த் அனந் நாத் சென்
எனும் திருத் தொண்டரின்
சுய சரிதை

All India
Christian Book Club

தமிழ் கிறிஸ்தவப் புத்தகச் சங்கம்
c/o சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
158, புரசைவாக்கம் ஹை ரோட்
சென்னை-7

Published by the kind permission of the
I·S·P·C·K

மொழி பெயர்த்தவர்

தா. கோயில்பிச்சை

அர்ப்பணம்

என்னருமைத் தாயாருக்கு

பிரசுரிப்பவர்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்

158, புரசைவாக்கம் ஹை ரோட்

சென்னை-7

PREMANAND

The Autobiography of

PREMANAND ANATH NATH SEN

Translated by **D. KOILPITCHAI**

PUBLISHED:

Under the auspices of the
ALL INDIA CHRISTIAN BOOK CLUB
by the
EVANGELICAL LITERATURE SERVICE
158, Purasawalkam High Road, Madras-7
for the
TAMIL CHRISTIAN BOOK CLUB

PRINTED AT
BAPUJI PRESS
187, MOUNT ROAD, MADRAS-2

முகவுரை

பிரேமானந்த் அனத் நாத் சென் வட இந்தியாவில் ஒரு சிறந்த வைதிக இந்துக் குடும்பத்தில் பிறந்தவர். செல்வத்தில் பிறந்த அவர் ஆடம்பரத்தில் வளர்ந்தார். எனினும், இளமையிலிருந்தே இந்து சமயத்தில் பெரும் பற்றுப் படைத்தவராகத் திகழ்ந்தார். அதன் காரணமாகத் தனது நகர்தனில் இரத உற்சவத்தின்போது கிறிஸ்தவப் பிரசாரம் செய்த கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கூடாரங்களையும் கிறிஸ்தவ நூல்களையும் நெருப்புக்கு இரையாக்கத் திட்டமிட்டார். அதற்கு முன்னர் இரகசியமாக இரவு நேரத்தில் கிறிஸ்தவக் கூடாரத்தை வேவு பார்க்கச் சென்றிருந்தபோது, ஒரு கிறிஸ்தவ வேதாகமத்தைக் களவு செய்து வந்து, இரவில் அந்தரங்கமாகத் தமது அறையில் வைத்து வேடிக்கையாக அதனைப் படித்துப் பார்த்தார். அதில் கூறப்பட்டுள்ள கிறிஸ்துநாதர் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்; அவரை ஆட்கொண்டார். கிறிஸ்தவ வேதாகமத்திற்கு அவர் வைக்க வேண்டுமென்றிருந்த தீ கிறிஸ்தவப் பக்தித் தீயாக மாறி அவரது அகத்தே கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. பிரேமானந்த் கிறிஸ்தவர் ஆனார். கிறிஸ்துவின் சிந்தை கொண்டார். சிலுவைத் தியாகத் தீ அவரது இதயத்தைப் பற்றிக்கொண்டது. தன்னலங் கருதாப் பிறர்க்குரியாளர் ஆனார். கிறிஸ்துவின் புனித நாமத்தில் திருப்பணி செய்து கிடப்பதையே தம் திருக் கடனாகக் கொண்டார். தொழு நோயாளிகட்கு இயேசுவின் தூய நாமத்தில் திருத் தொண்டாற்றினார். இயேசுவின் திருத் தொண்டராகத் திகழ்கின்றார். அச் சிலுவைத் தியாகத் தீ நம் இதயத்திலும் சுடர்விட்டு எரிவதாக!

கல்கத்தா,
8–10–1955

† அரபிந்தா அத்தியட்சர்

பொருளடக்கம்

★

அதிகாரம்		பக்கம்
1.	அதன் பொருளும் கிரயமும்	1
2.	வேலை தேடல்	39
3.	கிறிஸ்தவ வாலிபர் சங்கச் சேவை	63
4.	ஹிந்தி திருப்பணி	82
5.	குஷ்டரோகிகளுக்குத் தொண்டுசெய்தல்	107
6.	ஓய்வு பெறல்	117

அதிகாரம் 1

அதன் பொருளும் கிரயமும்

பிரேமானந்த் அனத்நாத் சென், என்ற பெயர் கொண்ட நான் கல்கத்தாவில் எனது தந்தையார் திரு. உமா நரேன் சென் குப்தா அவர்களது இல்லத்தில் 1876ம் ஆண்டில் பிறந்தேன். எனது முன்னோர்கள் மேற்கு வங்காளத்து ஹூக்ளி மாவட்டத்திலுள்ள குப்த பரா என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவ் ஊரைச் சுதந்தரித்து, அதில் குடியேறிய குடும்பத்தின் பெயரால் இவ்வூர் அழைக்கப்படுகின்றது. நான் பிறந்த சமயத்தில் எனது தந்தையார் பெரும் செல்வமும், செல்வாக்கும் பெற்றிருந்தார்; கல்கத்தாவில் பிரபல வணிகரும் நிலச் சுவான்தாருமாகத் திகழ்ந்தார். கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய ஆங்கில வர்த்தக சாலையின் பங்குதாரராகவும் இருந்தார். அதோடுகூட ஐரோப்பிய நாடுகள், லண்டன், மான்செஸ்டர் போன்ற மாநகரங்களோடு வர்த்தகத் தொடர்பும் பெற்றிருந்தார்.

டாட்டா ராம் சென் என்பவர் எனது பாட்டனாருக்குப் பாட்டனார் ஆவர். கிர்த்தி சந்தர் சென் என்பவர் எனது பாட்டனார் ஆவர். அவருக்கு ஆனந்தா சந்தர் சென் என்ற ஒரு சகோதரர் உண்டு. எனது பாட்டனாருக்குப் பிறந்த பத்து ஆண் பிள்ளைகளுள் எனது தந்தையார் ஒன்பதாவது பிள்ளை ஆவார். அவருக்கு ஒரு சகோதரியும் உண்டு. ஆகவே, எனக்கு அநேகப் பெரிய அப்பாமார்களும் சகோதர சகோதரிகளும் உண்டு. இந்து ஐக்கியக் குடும்ப முறைமையின்படியான சட்டதிட்டங்களால் எங்கள் குடும்பம் இயங்கிவந்தது. குடும்பம் முழுவதையும் சேர்த்து

ஆண்டு நடத்துவதற்குக் குப்த பராவில் ஓர் ஆட்சியாளர் உண்டு. நான் இளைஞனாக இருக்கையில், இவ்வித ஆட்சியாளராக அமைந்தது சந்திரமோகன் என்ற எனது பெரிய அப்பாவின் துணைவியாரான ஒரு வயது சென்ற அம்மையார்தாம். குப்த பராவில் இன்னும் சென் குடும்ப மாளிகை மகத்தாகக் காட்சி தந்து நிற்கின்றது! அதற்குச் சொந்தமாக அதைச் சுற்றிலும் அநேக ஏக்கர் நிலம் உண்டு; அநேக இரண்டு மாடிக் கட்டடங்களும் உண்டு; பூசை செய்வதற்குச் சிவன் கோவில்களும், மற்றும் அநேகக் கோவில்களும் ஆங்குண்டு; கச்சேரிகளும் உண்டு; மாபெரும் விளையாட்டு மைதானமும் அங்குண்டு.

பெரும் குடும்பத்தின் ஒவ்வொரு தனித் தனி பகுதியினருக்குக் கல்கத்தாவில் தனித் தனியாகச் சொத்தும் வீடும் வியாபாரத்துறையும் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், ஆண்டுக்கு இருமுறை கோடை விடுமுறையிலும், பூசை விடுமுறையிலும் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா மக்களும், ஆணும் பெண்ணுமாகக் குப்த பராவுக்கு வருவது வழக்கம். அப்பொழுது 200க்கும் மேற்பட்ட குடும்பத்தின் மக்கள் ஒன்றாகக் கூடியிருந்து விருந்து உண்ணும் காட்சியைக் காண்பது மிக மிக மகிழ்ச்சியாயிருக்கும்! படித்தவர்களோ, படியாதவர்களோ, ஆணோ பெண்ணோ, அனைவரும் ஒரே குடும்பமாக ஒரே ஆட்சிக்குட்பட்டு, ஒரு பெரும் சமூகம்போல் கூடி, பேசி, உண்டு, உறங்கி, அன்புற்று இன்புற்று வாழ்வதைக் காண்பது எத்துணை பூரிப்பாயிருக்கும்! ஒரே நிர்வாகம், ஒரே நிதிக் களஞ்சியம், ஒரே ஒருவரது அன்பின் ஆணை, ஒரு குடையின் கீழ் குடும்பம் முழுவதும் அன்போடு கட்டுப்பட்டு நடத்தல், குடும்பக் கூட்டாட்சி முறை, தன்னயமற்ற பொதுநலம், சம உரிமை, சமதர்மம், பொது உடைமை, தன்னைப்போல் தன் குடும்ப

அங்கத்தினரை அன்போடு கௌரவமாக நடத்துதல், பிறருக்காகத் தியாகம் செய்ய முந்திக்கொள்ளுதல், அத்தனையும் சேர்ந்து குடும்ப குடியாட்சிபோல் காட்சி அளித்து நிற்கும். இக்காலத்தில் இவ்வாறு ஒன்றுபட்ட குடும்பக் குடியாட்சியைக் காண்பது அரிதாய்ப் போய்விட்டது. தற்காலத்தில் தன்னயம் அரிபிளவையைப் போல் குடும்பக் கூட்டாட்சி முறையை அரித்து சீரழித்து வருகின்றதன்றோ! அந்தோ பரிதாபம்! ஒரு குடும்பத்திலுள்ள ஒருவர் பாரத்தை இன்னொருவர் அன்போடு சுமந்து, குடும்பத்தின் பொது நலத்தையும் வாழ்வையும் காப்பாற்றி வந்த சுயநலமற்ற அப் பொற்காலம் மலையேறிவிட்டது போலும்!

இத்தகைய குடும்பக் கூட்டாட்சி முறைப்படி பாரதத்தில் குடும்பங்கள் இயங்கி வந்தால், ஆயுள் நல சேமிப்புத் திட்டங்கூட அவசியம் இருக்காது. இம்முறைப்படி குடும்பத்திலுள்ள விதவைகளையும், அனாதைகளையும் அக் குடும்பத்து பிற அங்கத்தினர் பராமரித்துக்கொள்வர். தற்காலத்தவரோ இக்குடும்பக் கூட்டாட்சி முறையை அனுசரித்தால் சில அங்கத்தினர்கள் சோம்பேறித்தனமாய் வாழ இடம் உண்டாகிவிடுமே என்று அஞ்சுகின்றனர். ஆனால், நான் எனது குடும்பக் கூட்டாட்சி முறையில் கண்டுள்ள அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன்: என் குடும்பத்தில் ஒருவரும் சோம்பேறியாக இருந்ததில்லை. தங்கள் குடும்பத்திலுள்ள விதவைகளைக் காப்பாற்றுவதிலும், அவர்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதிலும் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினபடியால், அவர்கள் அதிகம் முயன்று பாடுபட்டு, அல்லும் பகலும் சுறுசுறுப்போடு அயராது உழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. குடும்பத்திலுள்ள யாருக்கேனும் சுகம் இல்லாமல் போய்விட்டால் நாங்கள் உடனே வெளியேயுள்ள மருத்துவர்களையோ, மருத்துவச்சிகளையோ அவசரம் அவசரமாக அழைத்து

வருவதில்லை. குடும்பத்திலுள்ள மற்ற அங்கத்தினர்கள் வியாதியுற்றோரைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொள்வர். அச்சேவையை இந்து நெறிப்படி பெருந் தர்ம மாகக் கொள்வர். குடும்பக் கூட்டாட்சி முறையில் காணப் படும் இத்தகைய தியாகத் தொண்டெல்லாம் இப்பொழுது பண்டைக்காலத்து சொப்பனக் காட்சிபோல் காணப்படு கின்றது. தன்னயமற்ற தங்கப்போன்ற அக்காலம் இனி எக்காலம் வருமோ? எளிய முறையில் கொஞ்சம் பொருள் வருவாயைக் கொண்டு, ஆடம்பரமற்ற எளிய வாழ்வு நடாத்தின அக்காலம் பறந்தே போய்விட்டது போலும்!

எம் குடும்பத்தில் எம் குல தெய்வங்கட்கு நாட்பூசை தவருது நடைபெறும். நாராயணன், சிவன் கோவில் வணக்கம் சிறப்புற நிகழும். எம் இல்லத்திலுள்ள கோவில் களுக்குச் சென்று நாங்கள் பக்தி ததும்ப பூசை செய்வது வழக்கம். எம் குடும்பத்திலுள்ளவர் கோவில் பூசைகளில் பெரும் பங்கெடுத்துக் கொள்வர். துர்க்கை விழாவுக்கு ஆங்காங்குப் பல்வேறு இடங்களில் வேலை பார்த்துவரும் எம் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களும் குப்த பராவில் வந்து கூடிவிடுவர். கோலாகலக் காட்சியோடு ஒருமாதக் காலமாக இவ்விழா வெகு விமரிசையுடன் நடை பெறும். இறுதியில் காளி பூசை, ஜகத் தாத்ரி பூசையுடன் தான் இவ்விழா ஒரு முடிவுக்கு வரும். துர்க்கை பூசை நிகழும் ஐந்து நாட்களிலும் மகமதியர்கள் உட்பட எல்லா அடுத்துள்ள சாதியினருக்கும் அன்ன தானம் செய்யப்படும். குப்த பராவிலுள்ள பிற ஏழைமக்கட்கும், அடுத்துள்ள ஏழை கிராமவாசிகட்கும் இனிப்புப் பண்டங்களும், பண மும், ஒருநாள் தானமாக வழங்கப்படும். இராமாயணம், மகாபாரதம், போன்ற இதிகாசங்களிலிருந்து நாடகக் கச்சேரிகள் நடைபெறும். கிராமவாசிகளுக்கு இத்தகைய நாடக நிகழ்ச்சிகளைக் காண்பதென்ருல், பெரும் கொண்

டாட்டந்தான். இந்நாடக விழா, எப்பொழுது வரும் என்று ஆண்டுதோறும் எதிர்பார்த்து அதற்காக ஏங்கிக் கிடப்பார்கள். துர்க்கை பூசையின் இறுதி நாளன்று எங்கள் கிராமத்தருகே ஓடும் ஹூக்ளி நதியில் துர்க்கா தேவியின் உருவச் சிலைகளை ஆழ்த்தும் விழா வெகு விமரிசையாய் நடைபெறும். அப்பொழுது படகுப்போட்டியும் நடைபெறும். படகுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சங்கு ஊதி, முரசு கொட்டி., பெரும் ஆரவாரம் செய்வது வழக்கம். அவர்கள் எழுப்பும் இவ்வெற்றிஒலி விண்ணையும் கிழித்துச் செல்லும். அதன் எதிரொலி திக்கெல்லாம் அதிர முழங்கும். வாகை சூடியவர்களின் மகிழ்ச்சியின் ஆழத்தை அளக்க வல்லார் யார்? மூழ்கு விழா முற்றுப்பெற்றதும் நூற்றுக்கணக்கான அம்மக்கள் துர்க்கா தேவியின் கோயிலுக்குச் சென்று பூசாரியின் ஆசீர்வாதம் பெறுவதோடு சாந்தித் திருநீரும் தெளிக்கப் பெறுவர். பின்னர், பெரியோர்கள் ஆசீர்வாதத்தோடு அனைவரும் தத்தம் இல்லம் ஏகுவர்.

எம் குடும்பம் பிரபல வழக்கறிஞர்களையும், மருத்துவர்களையும், வர்த்தக நிபுணர்களையும், அரசியல் அறிஞர்களையும், தியாகத் தொண்டர்களையும், பாரதத்துக்கு வழங்கியுள்ளது.

எனது தந்தையார் தனது முதல் மனைவியை இழந்த பின்னர், எனது தாயாரை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார். அவரது முதல் மனைவிக்குப் பாரிஷ்நாத், பிரேநாத் என்ற இரு ஆண் மக்கள் பிறந்திருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மகனும் இரு பெண் பிள்ளைகளும் பிறந்தார்கள். இவர்களுள் மூத்தமகள் கீர்த்தி வாய்ந்த அமிர்தலால் ராய் என்பவருக்கு வாழ்க்கைத் துணைவியானாள். அவர் அநேக ஆண்டுகளாக இங்கிலாந்தி

லும் அமெரிக்காவிலும் கல்வி கற்றவர் ஆவர். பின்னர், அவர் கல்கத்தாவிலுள்ள நம்பிக்கை என்ற பத்திரிகைக்கும் லாகூரிலுள்ள திர்ப்பு என்ற பத்திரிகைக்கும் ஆசிரியரானார். மாக்ராவிலிருந்து ஓடும் வங்காள மாகாண புகை வண்டி போக்குவரவுக்கு இவர் பெரும் காரணமாய் இருந்தார்.

எனது தாயாருக்கு நான்கு ஆண் மக்கள் உண்டு. அதில் ஒருவர் இளமையிலே இறந்துவிட்டார். அதோடு எனக்கு ஐந்து சகோதரிகளும் உண்டு. அவர்களில் நான்கு பேர் மரித்து போய்விட்டார்கள். நான் எனது தாயாருக்கு மூத்த மகன். எனது தந்தைக்கு மூன்றுவது மகன். எனது ஒரு தம்பி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். இன்னொரு தம்பி கல்கத்தா ஷம்பு நாத் பண்டிதர் வைத்தியசாலையில் மருத்துவராகச் சேவை செய்தார்.

வழக்கறிஞரான என் தம்பி தனது வேலையினின்று சீக்கிரம் ஓய்வு பெற்று, இந்து சமயத் தத்துவங்களைக் கற்று, பக்தி நெறியில் ஈடுபட்டார். குடும்பச் சமய விவகாரங்களிலெல்லாம் ஜட்டிந்தரநாத்சன் என்ற இந்தத் தம்பியும், வைத்தியரான தேவேந்திரநாத்சன் என்ற தம்பியும் எங்கள் தந்தையார் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்தனர். குப்த பராவில் நடக்கும் பூசை திருவிழாக்களிளெல்லாம் இவர்கள் பெரும் பங்கெடுத்துக்கொள்வர். அங்குள்ள ஒரு கோவிலை எனது தம்பி, மக்கள் எல்லாரும் வந்து சமயக் கல்வி பெறும் மதக் கல்லூரி ஆக்கினார். இந்துச் சமயமும் பண்பாடும் அதன் மூலம் வளர்ந்தோங்கின. குப்த பராவிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணநந்தா என்ற ஒரு இந்து சந்நியாசி அங்குப் பெரிதும் போற்றப்பட்டார்.

வழக்கறிஞரான அந்தத் தம்பிக்கு ஒரு பெண் பிள்ளை

யும் இரு ஆண் பிள்ளைகளும் உண்டு. இவ்விரு ஆண் மக்களும் பெருத்த தொழிற்செல்வம் படைத்தவராவர். இரவீந்தரா என்ற மூத்த மகன் ஐரோப்பாவிலிருக்கும் பொழுது ஒரு ஸ்விட்சர்லாந்து கிறிஸ்தவ மாதை மணந்து கொண்டார். தற்காலத்தில் இந்துமத ஆசாரங்கள் பெரிதும் மாறுதல் அடைந்துள்ளன. ஆனால், அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தீண்டா சாதியினராகக் கருதப்பட்டனர். ஒரு வைதிக இந்துக் குடும்பத்தில் ஒரு கிறிஸ்தவ மனைவி புகுவதென்றால் அக்காலத்தில் அது தீட்டாகக் கருதப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தில் சம்பந்தப்படுவோர் இந்துக் குடும்பத்தை விட்டுத் துரத்தப்பட்டனர்.

வைத்தியரான எனது தம்பிக்கு இரு பெண் மக்களும் மூன்று ஆண் மக்களும் உண்டு. அவர்களில் இரு ஆண் மக்கள் அரசாங்க அதிகாரிகள். எனது இரண்டாவது தங்கையான தாரு லாட்டா என்னிடம் அதிகப் பாசம் கொண்டவள். காலஞ் சென்ற அவளது கணவர் வங்காள நாகபுரி இரயில் போக்குவரத்தில் பெரும் தொண்டாற்றியுள்ளார். கடந்த நூற்றாண்டில் பூருலியாவிலிருந்து லோகார்த்தாவுக்குப் புகை வண்டிப் பாதையமைக்க வழி வகுத்தவர் இவர்தான்.

நான் செல்வத்தில் பிறந்து, ஆடம்பர வாழ்வில் வளர்க்கப்பட்டேன். உலகப் பிரகாரமாக எனக்கு ஒரு குறையும் இருந்ததில்லை. வாழ்க்கை வசதிகளெல்லாம் வளமாகப் பெற்றுள்ளேன். எனது இளமையிலிருந்தே தர்ம சிந்தை எனக்குண்டு. நான் சிறுவனாக இருக்குங்கால், ஏழைகட்கும் பிச்சைக்காரர்களுக்கும் எனது வீட்டுப் பண்டங்களை வாரி வழங்கும் பண்பு படைத்தவனாகத் திகழ்ந்தேன். ஏழைகட்கு இரங்கும் எனது ஈகை குணத்தை எனது தாயார் வெகுவாய்ப் பாராட்டுவதுண்டு. எனக்கு அனத்நாத்

என்ற பெயர் சரியாய் வாய்த்துவிட்டது என்று வாயார வாழ்த்துவார்கள் எனது தாயார். அனத்நாத் என்ருல் அனுதைகளின் நாதன் எனப் பொருள்படும். இன்றைக்கும் பக்தசிரோமணியான எனது தாயாரை நான் நினைத்துவிட்டால் எனது கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தோடும். எனது தாயாரும் எனது உற்ருர் உறவினரும் என்னைச் செல்லப் பிள்ளையாகக் கொண்டாடுவர். பிணியுற்ருேரைக் கவனிப்பதென்ருல், எனக்கு இளமையிலிருந்தே பெரும் விருப்பமாகும். எனது குடும்பத்தில் யாரேனும் நோயுற்ருல் அவர்களை நான் வெகு அக்கறையுடன் சேவிப்பதுண்டு. எனது இளமையில் அடிக்கடி எனக்கு மலேரியாக் காய்ச்சல் வந்ததால், எனது கல்வியைத் தொடர்ந்து கருத்தூன்றிக் கற்க முடியாமற்போய்விட்டது. எனினும் வீட்டில் வைத்து தனியே எனக்குக் கல்வி அமுது ஊட்டப்பட்டது. சிறந்த ஆசிரியர்கள் எனது இல்லத்திற்கு வந்து கல்வி ஊட்டிச் செல்வர். இம் மலேரியாக் காய்ச்சல் என் வாழ்வின் பிற்காலத்திலும் என்னை வாட்டி வதைத்தது. நான் சில தடவைகளில் மாதக் கணக்காக மலேரியாக் காய்ச்சலால் அவதியுறுவதும் உண்டு. சிலவேளைகளில் சுகத்திற்காக வங்காள மாகாணத்தை விட்டு பிற ஆரோக்கியத் தலங்களுக்குச் செல்வதும் உண்டு.

எனக்கு இளமை தொட்டு எமது இந்து சமயத்தில் ஆழ்ந்த பக்தியுண்டு. கிருஷ்ண பகவானிடம் நான் பெரும் பற்றுப் பூண்டவன். இந்து தரும ஆசாரங்களை ஒழுங்காக ஆசரித்து வந்தேன். தவருது சாமி பூசை செய்துவருவேன். திருப்பூணூல் பூண்டேன். குல குருவிடமிருந்து மந்திர உபதேசம் பெற்றேன். எனது இளமையில் வைராக்கிய இந்துவாயிருந்தேன். ஷரி சபாவில் சேர்ந்து ஷரி சங்கீர்த்தனம் செய்து கிருஷ்ணபகவானைப் போற்றிப் புகழ்ந்துவந்தேன். குப்தபராவில் வடமொழிக் கலைக்கூடங்கள் இருந்தன. சிறு

வடமொழி பேராசிரியர்களுக்குத் தங்குவதற்கு அங்குச் சிறு மண் குடிசைகளும் கட்டப்பட்டிருந்தன. மாணவர்கள் குருவுக்கும் அவரது குடும்பத்திற்கும் சேவை செய்வதைப் பெரும் கண்ணியமான காணிக்கையாக எண்ணினர். கலியாணங்கள், பூசைகள், சவச் சடங்குகள், ஞாபகார்த்த விழாக்கள், போன்ற உற்சவங்களில், இக் குருக்கள், பண்டிதர்கள், சீடர் குழாத்துடன், பெரும் பங்கெடுத்துக் கொள்வர். இத்தகைய உற்சவக் காலங்களில் கொடுக்கப்பட்ட சன்மானங்கள், இந்து நிலச்சுவான்தார்கள் அளித்த பொருளுதவி, பிற காணிக்கைப் பொருள்கள் போன்ற வருவாயால் இவ் வடமொழி கலாசாலைகளும் அதன் ஆசிரியர்களும் ஆதரிக்கப்பெற்றனர். குருவுக்கும் சீடருக்கும் இருந்த கண்ணியமான உறவு என்றும் போற்றற்பாலது. இத்தகைய குருகுல கலாசாலைகள் இப்பொழுது அழிந்து போய்விட்டன. அவைகளுக்குப் பதிலாக ஆங்கிலப் பள்ளிகளும் கல்லூரிகளும் தலைதூக்கி உள்ளன.

பிருந்தாபவன் சந்திர கோயில்கள், ஜகத்நாத், கிருஷ்ண பகவான், இரதிகா தேவர்கள் இரத உற்சவம் போன்றவற்றிற்கு எங்கள் மாவட்டத்திலே பேர்போனது எங்கள் கிராமந்தான். தூர இடங்களிலிருந்து ஆண்டு தோறும் நடக்கும் இந்த இரத உற்சவத்திற்கு ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் வந்து பூரிப்படைவர். மழைக்காலத் துவக்கத்தில் இவ் வுற்சவம் கொண்டாடப் படுகின்றது. கண்கவர் கடைகளும், நெஞ்சம் அள்ளும் நிலையங்களும், இருவாரக் காலமாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கும். இக் கோலாகலக் காட்சி காணச் சுற்றிலும் இருந்து எண்ணிறந்த மக்கள் இங்குக் கூடுவர். இப்பெருந் திரள் மக்களுக்கு அப்பொழுது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டி மிஷினெரிமார்களும் இங்கு வருவதுண்டு. ஆங்கில இந்திய கிறிஸ்தவத் தொண்டர்கள், இந்த உற்சவத்திற்கு

வந்து சிறு சிறு குடிசை அமைத்துக்கொண்டு பரிசுத்த வேதாகமங்களை விற்பனை செய்வர்; சுவிசேடக் கைப்பிரதிகளை வழங்குவர். கிறிஸ்தவ நற்செய்தியை எடுத்துக் கூறுவர். அன்னிய மதத்தைப் போதித்த இக்கிறிஸ்தவர்கள்பால் நான் சீற்றம் கொண்டேன். எனது வயதுள்ள பையன்களைச் சேர்த்துக்கொண்டு இக் கிறிஸ்தவர்களுக்கு இடையூறு விளைவித்து வந்தேன். கிறிஸ்தவர்கள் பாட்டுப் பாடிப் பிரசங்கம் செய்யும் வேளையில் நாங்கள் எட்டிக்குப் போட்டியாக ஹரி கீர்த்தனம் உரத்த சத்தத்தில் பாடி ஏகமாய் முழக்குவதுண்டு. கிறிஸ்தவர்களுடைய சத்தம் கூட்டத்தில் எடுக்காதவாறு ஆவன செய்து அதைத் தடுக்கும் முறைகளை எல்லாம் வெகு மும்முரமாகச் செய்து வந்தோம். சில வேளைகளில் கிறிஸ்தவத் தொண்டர்கள்பால் கல்கட்டிகளை எடுத்து எறிவதும் உண்டு. இவ்வித அட்டூழியங்களை எல்லாம் நானும் என் தோழரும் செய்தபோதிலும் கிறிஸ்தவர்கள் அவற்றை எல்லாம் அன்போடும், பொறுமையோடும் சகித்துக்கொண்டு விடாமுயற்சியோடு சுவிசேஷத் தொண்டு ஆற்றிவந்தார்கள். எனது முயற்சி தோல்வியுற்றுப்போகவே நான் மேலும் அதிக மூர்க்கம் அடைந்து, அவர்களைத் தொலைக்க இன்னொரு படுமோசமான உபாயத்தைக் கைக்கொண்டேன். அதாவது வேத ஆகமங்களையும் சுவிசேஷப் பிரதிகளையும், பாட்டுப் புத்தகங்களையும் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிப் பின்னர் அவற்றை அவர்கள் கண் முன்னாலேயே எரித்துவிடும் கொடிய செயலில் ஈடுபட்டேன். இவற்றோடும் திருப்தி கொள்ளாது, நானும் எனது தோழரும் சேர்ந்துகொண்டு மிஷனெரிமார்கள் சுவிசேஷ பிரசாரத்திற்காகப் பயன்படுத்திய குடிசையை இரவிலே இரகசியமாகத் தீக்கொளுத்திப் போடத் திட்டமிட்டோம். இந்தக் குடிசையில்தான் மிஷனெரிமார்கள் தங்கள் சுவிசேஷ புத்தகங்கள் எல்லாம் வைத்துக்கொண்டு,

வந்தவர்களுக்குக் கிறிஸ்தவப் பிரச்சாரம் செய்துவந்தனர். இக்காரியத்தை எங்கள் வீட்டைப் பாதுகாத்துவரும் ஒரு முகமதிய காவல்காரனுக்கு மாத்திரம் இரகசியமாக அறிவித்தேன்.

கிறிஸ்தவப் பிரச்சாரக் குடிசையைத் தீயிட்டுக்கொளுத்தத் திட்டமிட்டிருந்த இரவுக்கு முந்தின இரவு படிப்பகமாகவும் பயன்பட்ட அக் குடிசைக்கு நான் சென்று வேறொருவரும் இல்லாத சமயத்தில் ஒரு கிறிஸ்தவ வேதாகமத்தைக் களவு செய்துகொண்டு வந்தேன். ஒருவரும் அப்பொழுது என் களவைக் கண்டுபிடிக்கவில்லை. புத்தகம் கையிலிருந்ததால் அதை வாசிப்பதற்கு ஒரு சோதனை ஏற்பட்டது. ஆகவே எனது படுக்கையறையைப் பூட்டிக்கொண்டு அந்த இரவு நேரத்தில் ஒருவருக்கும் தெரியாது, அந்தரங்கமாகக் கிறிஸ்தவ வேதாகமத்தை வாசிக்கத் தூண்டப்பட்டேன். வேதாகமத்தைத் திறந்ததும் முதலாவது என் கண்கள் பரி. மத்தேயு சுவிசேஷம் 5ம் அதிகாரம் 43–48 வசனங்கள் மீது பாய்ந்தன.

"உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தம்முடைய சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்

பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களை நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அதைச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராய் இருக்கக் கடவீர்கள்.''

அதன் பின்னர் அதே அதிகாரத்தின் 39ம் வசனத்தை நான் வாசித்தேன.

''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு.''

எவ்வளவு கோழையாகக் கிறிஸ்து இருந்திருக்க வேண்டும்! என்று எண்ணினேன். எனினும் அவ்வசனங்கள் என்னை அவ்விரவில் சிந்திக்க வைத்தன. மேலும் மத்தேயு 9ம் அதிகாரத்திலுள்ள 13ம் வசனத்தை நான் வாசித்தேன். ''நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்.'' கிறிஸ்துவின் மொழிகள் என் இதயத்தைக் கவ்விக்கொண்டன.

நான் ஒருஉயர்ஜாதி இந்து, வைராக்கிய இந்து, பூணூல் தரித்தவன். ஏழைகளையும் தாழ் குலத்தவர்களையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளியவன். இழிகுலத்தோரையும் தாழ்த்தப்பட்டவரையும், தீண்டுகிறதற்கும் அஞ்சுகின்றவன். நான் நீதிமான்களை விரும்பி அண்டினேன். ஆனால், பாவிகளையோ வெறுத்துப் புறக்கணித்துத் தள்ளினேன். அவர்களைத் தீட்டாகவே கருதினேன். ஒரு மனிதனாகிய

நானே பாவிகளை இவ்வாறு வெறுத்துத் தள்ளுங்கால் பரிசுத்தமான கடவுள் எவ்வளவு தூரம் அவர்களை வெறுத்து ஒதுக்கித் தள்ளவேண்டும்? ஆனால் கிறிஸ்துவோ பாவிகளை நேசிக்கிறாரே! அவர்களைத் தேடி வந்தாராமே! அங்ஙனமாயின் அவர் ஓர் கடவுள் அல்லர். ஏன் ஓர் மனிதன்கூட அல்லர். அவர் ஒரு பாவியாகவே இருக்கவேண்டும் என்று எண்ணினேன். 'இனம் இனத்தோடு வெள்ளாடு தன்னோடு' என்பார்களே. பாவிகளை நேசித்து, அவர்களையே தேடிவந்த கிறிஸ்துவும் ஒரு பாவியாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினேன்.

எனது கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருச்சுனனோடு செய்யும் நான்காவது உரையாடலிலே நான்காம் வசனம் சொல்லுகிறபடி,

"துஷ்டர்களை நிக்கிரகம் செய்து சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்யவும், தர்மத்தைக் காக்கவும் நான் அவ்வப்போது அவதாரம் எடுக்கின்றேன்". இவரல்லவா தெய்வம்! துஷ்டர்களை அழித்துப் பக்தர்களைப்பாதுகாப்பது அல்லவா பகவானுடைய கடமை! இதற்கு நேர்மாறாகத் துஷ்டர்களைப் பாதுகாத்து இரட்சிக்க அவர்களைத் தேடி ஒருவர் அவதாரம் செய்தால் அவரைத் தெய்வம் என்று எண்ணலாமா? அவர் மனிதரிலும் கீழான படுபாவியின் அவதாரமாக இருக்கவேண்டும் என்று தீர்ப்பிட்டேன். மீண்டும் என் கண்கள் மத். 9: 12-ம் வசனத்தை நோக்கின.

"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகம் உள்ளவர்களுக்குவேண்டியதில்லை". இது உண்மை தான். பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதுதான். மறுபடியும் என் கண்கள் லூக்கா 19-ம் அதிகாரம் 10-ம் வசனத்தைப் பார்த்தன.

"இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்".

இப்பொழுது நடுநிசியாகிவிட்டது. நான் லூக்கா 23-ம் அதிகாரத்தில் கண்டுள்ளபடி கிறிஸ்துவின் விசாரணையும் அவர் சிலுவையில் அறையப்படப் போவதைப்பற்றியும் வாசித்தேன். கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்ட பொழுது சொன்ன வசனம் என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டது. அது லூக்கா 23 : 34இல் காணப்படுகின்றது.

அப்பொழுது இயேசு "பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார்.

என்ன ஆச்சரியம்! தன்னை அநியாயமாகச் சிலுவையில் அறைந்து கொலைசெய்யும் கொலை பாதகர்களைச் சபித்து சாம்பலாக்காது, "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கருணையோடு மன்றாடும் இவர் யாராய் இருக்கக்கூடும்? நான் முதலாவது வாசித்தபடி "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று தாம் உபதேசித்தபடியே நடைமுறையில் தமது வாழ்க்கையில் சாதித்துக் காட்டியுள்ளார். தாம் சொன்னதைத் தாமே செயலாற்றியும் காட்டியுள்ளார்! இவர் உண்மையுள்ளவர்தாம். அஹிம்சா தர்மத்தையும் சத்தியாகிரகத்தையும் போதித்த இவர் அவற்றை முன் மாதிரியாகத் தாமே செயல்படுத்தியும் உள்ளார்! ஆகவே இவர் ஒரு பாவியாய் இருக்கமுடியாது!

நல்லது, நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்? நாளை இரவு கிறிஸ்தவத் தொண்டர்களது குடிசையைத் தீக்கொளுத்த வேண்டுமா? வேண்டாமா? எனது மனச் சாட்சியோ அதைச் செய்யவேண்டாம் பிரேமானந் என்று கூறியது. அடுத்த நாள் காலையில் எனது தோழர் களையும் முகம்மதிய காவற்காரனையும் இரகசியமாக அழைத்தேன். கிறிஸ்தவக் குடிசையை நெருப்புக்கு இரை யாக்க வேண்டாம் என்று வேண்டிக்கொண்டேன். அவர் கள் என்னைக் கோழை என்று தீர்ப்பிட்டார்கள். எனினும் எனது உரைக்கு மறுப்புரைகூற அவர்களுக்கு மனதில் லாது போயிற்று. காரணம், நான் ஒரு மாபெரும் ஜமீன் தார் வீட்டுப் பிள்ளையல்லவா ?

நான் கிறிஸ்தவக் குடிசையினின்று கொள்ளையிட்ட வேதாகமம் என் இதயத்தையே கொள்ளைகொண்டு விட் டது. கிறிஸ்தவக் குடிசையில் பற்றியெரிய இருந்த தீ என் இதயத்திலே பற்றியெரிய ஆரம்பித்துவிட்டது. எதை எரிக்கவேண்டும் என்று துடித்தேனோ, அதே !என் இதயந் தனில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது.

தேர்த் திருவிழாவின் இறுதி நாளிலே ஜகத்நாதர் இரதத்தை இழுத்துவிட்டு இல்லத்திற்குத் திரும்பிய இர விலே வேதாகமத்தை மீண்டும் இரகசியமாக எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். யோவான் எழுதின சுவிசேஷம் நான்காம் அதிகாரத்திலுள்ள இருபத்திமூன்று இருபத்தி நான்காம் வசனங்கள் என் கண்ணில் பட்டன.

“உண்மையாய்த் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக் கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாய்

இருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்''.

இவ்வசனங்கள் என் சிந்தனையைக் கிளறிவிட்டன. இரவின் அமைதியான நேரத்திலே நான் மீண்டும் வேதத்தைப் புரட்டவே 139 சங்கீதத்திலுள்ள 23, 24ம் வசனங்கள் என் கருத்தைக் கவர்ந்தன.

''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.''

மறுபடியும் நான் வேதத்தைப் புரட்டிப் பார்க்கவே 27-ம் சங்கீதத்தின் 8-ம் வசனம் என் கவனத்தை ஈர்த்தது.

''என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே. உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று''. இச்சங்கீதத்தின் 14-ம் வசனம், என் சிந்தையை இழுத்தது. ''கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாய் இருந்து கர்த்தருக்கே காத்திரு.''

அக்கணத்திலிருந்து ஆவியாய் இருக்கும் உண்மைக் கடவுளைப்பற்றி அறிய ஆசைப்பட்டேன்.

எனது இளமையிலேயே புண்ணிய ஸ்தலங்களான காசி, கயா, பிரயாகை, பிருந்தாபன், ஹரித்துவார், ரிஷிகேஷ் போன்ற இடங்களுக்கு யாத்திரை செய்துள்ளேன். ஆங்காங்கு அநேக சாதுக்களையும், சந்நியாசிகளையும் சந்தித்து உள்ளேன். எனினும் இவைகள் எனக்குச் சாந்தி

யளிக்கவில்லை. இந்து சிசு விதவைகள் படும்பாடு என் உள்ளத்தை உறுத்தின. நான் இரகசியமாக பிரம்ம சமாஜத்தில் சேர்ந்துகொண்டு விக்கிரக வணக்கமின்றி ஒன்றுன மெய்ப் பரம்பொருளை வழிபட நினைத்தேன். அரை நூற்றுண்டு முன்னர் பிரம்ம சமாஜ இயக்கமும், கிறிஸ்தவ மார்க்கமும் இந்துக்களான அநேகரைத் தம்பால் இழுத்துக் கொள்ள ஆவன செய்தன. இச்சமயத்தில் ஆக்ஸ்போர்ட் இயக்கம் வட கல்கத்தாவிலுள்ள மூக்தாராம்பாவு தெருவில் தொண்டாற்றத் தொடங்கியது. அங்குதான் எனது பெற்றோரும் வசித்தனர்.

வாலிபனுக இருக்கும் இப்பருவத்தில் நான் ஆக்ஸ்போர்ட் இயக்கத்தைச் சேர்ந்த சில பரிசுத்தவான்களான மிஷனெரிமார்களோடு பழக்கங்கொள்ள வாய்ப்பு கிட்டியது. அப்பரிசுத்த மிஷனெரிமார்களில் ஒருவரது பெயர் தந்தை உவாக்கர். இவரது நட்பு எனக்குப் பெரிதும் நலன் விளைத்தது. அவரது புனித வாழ்க்கை என் உள்ளத்தைத் தொட்டது. நான் இரகசியமாக மறுபடியும் மறுபடியும் வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்க வாசிக்க என் உள்ளம் எழுப்புதல் அடைந்தது. எனது உற்றுர் உறவினர், நான் கிறிஸ்தவ மிஷனெரிமார்களோடு பழகி வருவது நல்லதல்ல என்று கண்டித்தபோதிலும், எனது தந்தையாரோ என்னைக் கடிந்து கொள்ளவேயில்லை. தனது மகன் நல்லவர்களின் நட்புறவைத்தான் கொண்டுள்ளான் என்று அவர் அமைதியாக இருந்தார்.

நான் மீண்டும் வேதாகமம் வாசித்தபொழுது கிறிஸ்து நாதர் பாவிகளின் சிநேகிதன் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது. நான் மத். 9: 10-13ஐ வாசித்தேன்.

இயேசு வீட்டிலே போஜன பந்தியிருக்கையில், அநேக

ஆயக்காரரும் பாவிகளும் வந்து இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். பரிசேயர் அதைக்கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி, உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறது என்ன என்று கேட்டார்கள். இயேசு அதைக் கேட்டு, பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகம் உள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

பாவிகளிடத்து அன்புகொண்ட கிறிஸ்துவின் வாழ்க்கையைப்பற்றி அதிகம் அதிகமாய் அறியவேண்டும் என்று ஆவல்கொண்டேன். ஆகவே மீண்டும் மீண்டும் வேதாகமத்தை வாசிக்க ஆசைப்பட்டேன். யோவான் சுவிசேஷம் 10: 10. எனக்குப் புத்துயிர் ஊட்டிற்று. "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று கிறிஸ்து மொழிந்தார்.

மேலும் நான் யோவான் சுவிசேஷம் 1-ம் அதிகாரத்தை வாசித்தபொழுது கிறிஸ்து தமது அவதாரக் காலத்திற்கு முன்பே நித்தியமாய் இருக்கிற தேவன் என்பதை அறிந்தேன். அவர்தான் அண்டசராசரங்கள் அனைத்தையும் சிருஷ்டித்த தெய்வம் என்பதையும் உணர்ந்தேன். மனிதன் காணமுடியாத தெய்வத்தை மனிதனுக்குக் காட்டவந்த கண்கண்ட தெய்வம் அவர்தாம் என்பதையும் அறிந்துகொண்டேன். ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான

தோன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப்பற்றிக் கொள்ளவில்லை. உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் ,இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகள் ஆகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினலாவது மாம்ச சித்தத்தினலாவது புருஷனுடைய சித்தத்தினலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினலும் சத்தியத்தினலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினர். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறுனவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. அவருடைய பரிபூரணத்தினல் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றேம். எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறுன குமாரனே அவரை வெளிப்படுத்தினர்.

அதன் பின்னர் யோவான் சுவிசேஷம் 14: 9 பளிச்சென்று ஒரு ஒளிபோல் தென்பட்டது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' மீண்டும் 12-ம் அதிகாரம் 44-45. என் இதயத்தை மிளிரவைத்தது. அப்பொழுது இயேசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன், என்னிடத்திலல்ல, என்னை அனுப்பினவரிடத்தில்

விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற எவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்திற்கு ஒளியாக வந்தேன். மறுபடியும் யோவான் 10: 30. எனக்கு ஒரு பொன்னான வாக்கியமாக காட்சியளித்தது.

"நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்." 15-ம் வசனத்தையும் படித்தேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். அதாவது மனித ஆன்மாக்களுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் என்று கிறிஸ்துநாதர் திருவுளம் பற்றியுள்ளார்.

கிறிஸ்து மீண்டும் மத். 20: 28 வசனத்தின் மூலமாக என்னோடு பேசினார். அப்படியே கிறிஸ்துவும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். அதன் பின்னர் நான், 1 தீமோத்தேயு 2: 5-6 வசனங்களை வாசித்தேன்.

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசுஅவரே." கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின இரவு தமது பன்னிரண்டு சீஷரோடுகூட பந்தியிருந்தார். அப்பொழுது அவர் போஜனம்பண்ணுகையில் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து அதைப்பிட்டு சீஷருக்குக்கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படு

கிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. இயேசுநாதர் தமது இரத்தத்தையே சிந்தி உலக மக்களுக்குப் பாவ மன்னிப்பு அருளுகின்றார். "நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்கும் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (1 பேதுரு 2: 24).

"அப்படியே மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமை அற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்". (ரோமர் 3: 24).

சத்தியத்தை மேலும் அறியவேண்டும் என்ற ஆசை என் இதயத்துள் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. நான் கிறிஸ்தவ வேதாகமத்தை வாசித்ததோடு இந்து சாஸ்திரங்களையும் கருத்தூன்றி ஆராய ஆரம்பித்தேன். இவ்வாராய்ச்சியின் பயனாக நான் கீழ்கண்ட முடிவுக்கு வந்தேன்.

இந்து வேதங்களில் குறிக்கப்பட்டுள்ளபடி பாவ நிவாரணத்திற்காக பலி செலுத்துவது ஒரு முக்கியமான சத்தியத்தைச் சுற்றி நிற்கின்றது. சிருஷ்டிகள் செலுத்தும் பலியைவிட சிருஷ்டிகரான பிரஜாதிபதி செலுத்தும் பலி விசேஷித்தது அல்லவா? சிருஷ்டிகளுக்காக சிருஷ்டிகரான கிறிஸ்து தம்மையே பலியாகச் செலுத்துவதையே கிறிஸ்து மார்க்கம் சுட்டிக் காட்டுகின்றது.

2. இந்து வேதங்களில் குறிக்கப்பட்டுள்ள சிருஷ்டிகராகிய பிரஜாபதி என்னும் புருஷரே கிறிஸ்தவ மார்க்கத்தில் குறிப்பிடப்படுகின்ற இயேசு கிறிஸ்துவாய் இருக்கவேண்டும். சிருஷ்டிகளுக்காக சிருஷ்டிகளின் பாவநிவாரண இரட்சிப்புக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்துவைத் தவிர, சரித்திரத்தில் வேறு யாரும் இத்தனை பெரும் உரிமை கொண்டாடியதாகக் காணோம். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவே பண்டைய இந்துவேதங்கள் எதிர் நோக்கியிருந்த பிரஜாபதியாக இருக்கவேண்டும். சிருஷ்டிகளெல்லாம் பாவக்கறை படிந்தவை. ஆகவே சிருஷ்டி செலுத்தும் எந்தப் பலியும் சிருஷ்டிகளின் பாவத்தைப் போக்க இயலாது. பாவமற்றவர் சிருஷ்டிகர் ஒருவர் தாம். அவரைத்தான் பிரஜாபதி என்று பழைய இந்து வேதங்கள் பறை சாற்றுகின்றன. இறுதியில் சிருஷ்டிகரான பிரஜாபதியே தம்மை உலகத்தின் பாவம் போக்கும் தேவ ஆட்டுக்குட்டியாகப் பலி செலுத்தினால் மாத்திரமே சிருஷ்டிகளின் பாவக்கறை சுத்திகரிக்கப்படக்கூடும். அந்தப் பிரஜாபதி புருஷர் இயேசு கிறிஸ்துவாகத்தான் இருக்க வேண்டும். இந்தச் சிருஷ்டிகருடைய இரத்தப் பலியால் சிருஷ்டிகள் பாவ விமோசனம் பெறுகின்றனர். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, சுத்திகரிக்கும் என்பது சத்தியமாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே, ஆட்டுக்குட்டியின் இரத்தமல்ல; தேவாட்டுக்குட்டியின் இரத்தந்தான், அதாவது பிரஜாபதியின் இரத்தந்தான், அதாவது சிருஷ்டிகரின் இரத்தந்தான், அதாவது கிறிஸ்துவின் இரத்தந்தான் சிருஷ்டிகளாகிய மனிதரின் பாவங்களைப் போக்கவல்ல பலியாகும். பண்டை இந்து வேதம் தீர்க்கதரிசனமாக உரைக்கின்ற பிரஜாபதிக்கு என்னென்ன பரிசுத்த பண்புகள் உண்டோ அத்த

ளையும் கிறிஸ்துவில் பொதிந்து கிடக்கின்றன. உலகத்தின் பாவங்களைப் போக்கும் தேவாட்டுக்குட்டி கிறிஸ்துவாகவே இருக்கவேண்டும்.

பிறவி எடுத்தல் இந்து சித்தாந்தத்தில் மிக முக்கிய மான அம்சமாகும். நான் வாசித்த ஒரு தென்னிந்திய செய்யுள் பிறவியைப்பற்றி பின்வருமாறு கூறுகின்றது. நான் இதற்கு முன்னர் எடுத்த பிறவிகள் எத்தனை எத்த னையோ! என்றால் எண்ணவும் ஒண்ணாதே. நான் இனி மேல் பிறக்கப்போகும் பிறவிகள் எத்தனை எத்தனையோ? யாரறிவார் பராபரமே? ஆனால் ஒன்றே ஒன்றுமட்டும் திட்டமாக நான் அறிவேன். எப்பிறவி எடுப்பினும் அப் பிறவி எல்லாம் பெரும் துன்பமே, துன்பமே! மீண்டும் மீண்டும் செய்யும் கருமத்திற்குத் தக்கதாகப் பல பல பிறவி எடுக்கும் இந்து சித்தாந்தம் என்னை வாட்டி வதைத்தது.

ஒரு தகப்பன் தனது பிள்ளையை அது முற்பிறவியில் செய்த ஒரு குற்றத்திற்காக இப்பிறவியிலும் அதை விடாது தண்டிக்க மனம் கொள்வானா? ஒரு சாதாரண தகப்பனே முற்பிறவியில் செய்த குற்றத்திற்குப் பிற்பிறவியில் தனது மகவைத் தண்டிக்க முற்படாது இருக்கும்பொழுது, தந்தை யிலும் மேலான அன்புடைய அன்பின் வடிவமான கடவுள் இவ்வாறு மக்களைப் பிறவிதோறும் தண்டிக்க மனம் இசை வாரா? அரக்கனிலும் கொடியவரா ஆண்டவர்? அரக்கன் கூட தனது ஆருயிர் பிள்ளை பிறவிதோறும் அவதியுறுவ தைக் காண சகிக்கமாட்டானே. கடவுளை அன்பின் உறை விடம் என்கின்றோமே. அங்ஙனமாயின், பிள்ளைகள் பிறவி தோறும் படும் பெரும் பாடுகளைப் பார்த்துக்கொண்டு, தாம் மட்டும் ஆனந்த வடிவில், பாராமுகம் காட்டுவாரா? அரக்கனிலும் கொடிய கல்மனம் படைத்தவரை ஆண்டவர் என்று நாம் ஏன் கைகூப்பி வணங்கவேண்டும்? அன்பே

ஆண்டவன் என்று சமயங்கள் பறை சாற்றுகின்றனவே. அத்தகைய அன்புக் கடவுள் யாரையேனும் இவ்வுலகம் கண்ணால் கண்டுள்ளதோ? இன்றேல் உலகம் கண்ட யாரேனும் இத்தகைய அன்புக் கடவுள் என்று மனிதன் இதய பூர்வமாக வணங்கவல்லவர் யாரேனும் உளரோ? அத்தகைய அன்புக் கடவுள் யார்? யார்? யார்?

படுபாவிகள்கூட ஒருகாலும் பாடுபடக் கூடாதென்று அவர்களுடைய பாடுகளை எல்லாம் தாமே சிலுவையில் சுமந்து தீர்த்த இயேசுநாதரைக் கண் கண்ட அன்புக் கடவுள் என்று கூருது, பின்னை யார் என்று கூறுவது? எப்பாவியானாலும் என்னை விசுவாசிக்கிறவனுக்குப் பேரின்ப நித்திய ஜீவன் உண்டு என்று பகர்கின்ற கிறிஸ்துவே உண்மையான கருணைப் பகவானாக இருக்க வேண்டும். பாவிகளை இரட்சிப்பான் வேண்டி, அவர்கள் நரக ஆக்கினை அடையாது என்றென்றும் மோட்சப் பேரின்பம் அடைவான் வேண்டி, என்னையே பாவ நிவாரணப் பலியாகச் சிலுவையில் பலி செலுத்தியுள்ளேன் என்று சங்கநாதம் முழக்குகின்ற இவரன்ரோ அருள் தெய்வம்! நான் பிறவிதோறும் படவேண்டிய பாடுகளை யெல்லாம் தான் பட்டுத் தீர்த்துவிட்டு, நான் என்றும் பேரின்பப் பிறவியாய் நித்திய நித்திய காலமாகத் தெய்வச் சமுகத்திலிருந்து தெய்வ ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு எனக்காகத் தாம் சாபமான இவரையல்லாது வேறு யாரைத் தெய்வம் என்போம்?

பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த கே. சுபசந்திர சென் என்பவர் 1866ம் ஆண்டிலே "இயேசுவும் ஆசியாவும்" என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். இயேசு ஆசியா நாட்டுக்காரர். ஆம், இயேசு ஒரு ஆசியா நாட்டுக்காரர்தானே! இவ்வெண்ணம் ஆசிய நாட்டுப் பற்று பூண்ட என் நெஞ்சிற்கு ஊற்றுண்ட

தைலம் போல் பரம சுகம் அளித்தது. ஆம், இயேசுவும் அவருடைய அடியார்களும் ஆசிய நாட்டுக்காரர்கள்தாம். ஆதியில் இயேசுவைப் பின்பற்றிய சீடர்களும், பின்னர் உலகுக்குக் கிறிஸ்துவின் ஒளிச்சுடரை எடுத்துச் சென்ற அடியவர்களும், ஆசிய நாட்டுக்காரர்கள்தாம். ஆகவே, இயேசுவும் அவரது மதமும் மேல்நாட்டைச் சேர்ந்தது அன்று. அவை கீழ்நாட்டைச் சார்ந்தனவாகும். இயேசு ஆசிய வாசிகளுக்கு அன்னியர் அல்லர். கிறிஸ்தவ மதம் ஆசிய நாட்டிற்கு அன்னிய மதம் அல்ல. நான் ஒரு ஆசிய வாசி. ஆகவே ஆசிய நாட்டில் உதித்த இயேசு எனக்கு உரிமையானவரே ஆவர். அவர் நான் எண்ணினபடி எனக்கு அன்னியர் அல்லர். கிறிஸ்தவ மதமும் ஆசிய வாசிகளுக்கு அன்னிய மதம் அல்ல. இவ்வெண்ணத்தால் கிறிஸ்துவைப் பற்றியிருந்த அன்பு நூறு மடங்கு பெருகிவிட்டது எனக்குள்!

நான் முன்னிலும் பன்மடங்கு கருத்தூன்றிக் கிறிஸ்தவ வேதாகமத்தை வாசிக்கத் துணிந்துவிட்டேன். கே. சென் அவர்களது அறவுரைகளைக் கேட்ட அநேகர் கிறிஸ்தவ வேதாகமத்தை வாசிக்க முற்பட்டார்கள். அநேகர் கிறிஸ்து நடாத்தின பரிசுத்த வாழ்க்கையைப் பாராட்டிப் போற்றினார்கள்.

இராஜாராம் மோகன்ராயைப் பற்றிய வரலாற்றினை நான் படித்தபொழுது, அவரும் கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றிக் கருத்தூன்றிப் படித்து வருவதாக அறிந்தேன். அவர் எபிரேய, கிரேக்கு மொழிகளைக் கற்று, மூலமொழிகளில் கிறிஸ்தவ வேதாகமத்தை ஆராய்ந்து படித்தார். அவரது நீண்டநாள் ஆராய்ச்சியின் விளைவாக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு: “நான் அறிந்த மட்டும் கிறிஸ்தவ நெறிதான் சிறந்த நல்லொழுக்கத்திற்கு

உகந்த நெறியாகும். கிறிஸ்தவ நெறி மகத்தான சன்மார்க்க நெறி; அறிஞர்கள் அனைவரும் சிரமேற்கொள்ள வேண்டிய சீரிய நெறி."

கே. சென் என்ற அறிஞர் இராம்மோகன் மகான் வெளியிட்டுள்ள கருத்தின் உண்மைதனை உணர்ந்தார். கிறிஸ்தவ நெறியைப் போற்றிப் புகழ்ந்தார். தனது அறவுரைகளில் எல்லாம் கிறிஸ்துவைப்பற்றிப் பெரிதும் பாராட்டிப் பேசுவார் ஆயினர். இவ்விரு மகான்களுக்கும் புத்தொளியும் புத்துயிரும் அளித்துப் பரவச மூட்டிய கிறிஸ்து நாதர் என் இதயத்தையும் கவர்ந்துகொண்டார். இச்சமயத்தில் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14: 6) என்று இயேசு நாதர் மொழிந்துள்ள வசனங்கள் என் உள்ளத்தில் தீபம் ஏற்றி வைத்தன. நான் எவ்வளவுக்கெவ்வளவு வேதத்தை வாசித்தேனோ, நான் எவ்வளவுக்கெவ்வளவு கிறிஸ்து பகவான் பக்கம் வந்தேனோ, அவ்வளவுக்கவ்வளவு நான் பெரும் பாவி என்ற உணர்ச்சி ஏற்பட்டது. பரிசுத்த தெய்வம் அசுத்த பாவியாகிய என்னை எவ்வாறு ஏற்றுக்கொள்வார் என்று கலங்கினேன். யோவான் எழுதின 1-ம் நிருபம் 2: 1, 2 எனக்குப் பெரிதும் ஆறுதலான வசனங்களாய் இருந்தன. "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராய் இருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார்". மத்தேயு 11: 28 என்னைக் கிறிஸ்துவிடம் வருமாறு கூவி அழைத்தது. "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்க

ளுக்கு இளைப்பாறுதல் தருவேன்". நான் எப்படிக் கிறிஸ்துவிடம் வரலாம் என்று கேட்டேன். நிக்கோதேமுவுக்குக் கொடுக்கப்பட்ட அதே விடைதான் எனக்கும் கொடுக்கப்பட்டது. "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார். அதற்கு நிக்கோதேமு: ஒரு மனுஷன் முதிர் வயதாய் இருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ? என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். (யோவான் 3: 3-6) இதிலிருந்து மறுபடியும் பிறத்தலுக்குத் தண்ணீர் ஞானஸ்நானம் வெளியரங்க அறிகுறி என்றும், பரிசுத்தாவியின் அபிஷேகம் அந்தரங்க அறிகுறி என்றும் அறிந்தேன்.

பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே பகிரங்கமாக ஞானஸ்நானம் பெறுவதே மறுபடியும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேர்வதற்குரிய முதற்படி என்று தெளிந்தேன். "ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." (1 பேதுரு 3: 21).

"என்னிடத்தில் வாருங்கள்" என்று இயேசுவின் கரம் இப்பொழுது என்னைக் கூவி அழைத்தது. நான் பாவி அல்லவோ? நீர் பரிசுத்தர் அல்லவா? நான் எப்படி உம்மிடம்

வரமுடியும் என்று நான் கேட்ட கேள்விக்கு, நீ பாவியாய் இருக்கிறபடியே, பாவியாகவே என்னிடம் வா. என் இரத்தம் உன் பாவத்தைக் கழுவிச் சுத்திகரிக்கும் என்று மீண்டும் என்னை அன்போடு அழைத்தார் இயேசுநாதர். முக்தி மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம், நிர்வாண மார்க்கம் போன்ற மார்க்கங்களில் எம்மார்க்கத்தில் சென்றால் எனக்குச் சாந்தி கிடைக்கும்? நானே மார்க்கம் (வழி), என்று கூறியுள்ளார் இயேசு நாதர். ஆம், அவர் தான் மார்க்கம். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்று இயேசு நாதர் செப்பவில்லையோ?

சிறிது நேரத்திற்குப்பின் யோவான் 14:21ம் வசனம் என் நினைவுக்கு வந்தது. என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாய் இருக்கிறான். என்னிடத்தில் அன்பாய் இருக்கிறவன் என் பிதாவிடம் அன்பாய் இருப்பான். நானும் அவனில் இருந்து அவனுக்கு என்னை வெளிப் படுத்துவேன் என்று கிறிஸ்து நாதர் கூறியுள்ளார். நாள்தோறும் கிறிஸ்துவைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். நான் உண்மையாகவே கிறிஸ்துவை நேசிக்கிறேனா? என்ற கேள்வி அடிக்கடி என் இதயத்தில் எழுந்தது. அவருடைய கற்பனைகளை நான் கைக்கொள்ள வேண்டுமே என்ற துடிப்பு என் உள்ளத்தில் துளிர்த்தது. ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது என்று இயேசு நாதர் இயம்பியுள்ளாரே. நீங்கள் என்னை நேசிப்பீர்களானால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவா. 14:15) என்று அவர் பணித்துள்ளாரே. கீழ்ப் படிதல்தான் அன்பின் வெளிப்படைச் சின்னம் அல்லவா? குருவுக்குப் பணிந்து நடத்தலே சீடரின் பண்பு அல்லவா?

நான் உண்மையாகவே கிறிஸ்துவின்மீது அன்பு கொண்டால் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் கூறியுள்ளபடி ஞானஸ்நானம் பெற்று, வெளிப்படையாகக் கிறிஸ்தவனுகத் திகழவேண்டும். அல்லது அவரை மறுதலித்து மறந்துவிட வேண்டும். என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கிறிஸ்துவை நான் எவ்வாறு மறுதலிக்க முடியும்? தமது ஆருயிரையே எனக்காகச் சிலுவையில் பலி செலுத்தும் வண்ணம் அவ்வளவு என் மீது அன்புகொண்ட இயேசுவை நான் எளிதில் மறக்க முடியுமோ? தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களின் மன்னிப்புக்காகக் கெஞ்சிய கிறிஸ்துவை நான் நினையாது இருக்க முடியுமா? சிலுவையில் அறைந்தவர்கள் என்று கூறுங்கால், உலகத்திலுள்ள எல்லா மானிடரும் அதில் அடங்கியுள்ளார்களே. பாவியாகிய நானும் இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களில் ஒருவன் அல்லவா? எனக்காகவும் இயேசுநாதர் சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தார் அன்றே! எனக்காகவும் சிலுவையில் இயேசுநாதரால் பாவமன்னிப்பு சம்பாதிக்கப்பட்டது! நான் பல பிறவி எடுத்து எனது கருமத்தினின்றும் படவேண்டிய பாடுகளையெல்லாம் கிறிஸ்துநாதர் எனக்காகச் சிலுவையில் பட்டுத் தீர்த்துவிட்டார் அல்லவா? என் கடனைக் கிறிஸ்து எனக்காகச் செலுத்திவிட்டார். ஆகவே, என் ஆத்துமாவுக்கு இனி ஆக்கினைத் தீர்ப்பும் அழிவும் இல்லை. எனக்காக இயேசுநாதர் நரக ஆக்கினையைச் சிலுவையில் அடைந்து தீர்த்துவிட்டார். இனி எனக்கு நரகம் இல்லை, ஆக்கினை இல்லை, அழிவும் இல்லை, பிறவித்துன்பம் இல்லை, இயேசுவை நான் நம்புவேன், இயேசுவை நான் விசுவாசிப்பேன், இயேசுவை நான் நேசிப்பேன், இயேசுவை நான் சிநேகிப்பேன்.

ஆனல் என் பெற்றோர் இதை அனுமதிப்பார்களா? எனது உற்றார் இதற்கு உடன்படுவார்களா? எனது உறவினர் இதற்கு ஒப்புவார்களா? என் சமூகம் இதற்குச் சம்

மதிக்குமா? என் குடும்பம் இதை வரவேற்குமா? நான் ஓர் உயர்குல வைராக்கிய வைதீக இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லவா? நான் கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவினுல் தீண்டாச் சாதியினன் என்று கருதப்பட்டு, குடும்பத்தை விட்டே புறக்கணிக்கப்பட்டு விடுவேனே. நான் என் பெற்ருேரையும், சகோதர சகோதரிகளேயும் குடும்பத்தாரையும், வீட்டையும் விட்டு வெளியேற நேர்ந்திடுமே. எனது குடும்ப சொத்தில் எனக்குப் பங்கும் உரிமையும் இல்லாது போய்விடுமே. இந்த ஒரு கிறிஸ்துவுக்காக நான் பிற எல்லாவற்றையும் இழக்க நேரிடுமே. ஆனுல் கிறிஸ்து நாதர் எனக்காக தமது எல்லாவற்றையும், தமது ஆருயிரையுமே சிலுவையில் இழப்பதற்குத் துணிந்து நின்ருரே. அவருக்காக நான் ஏன் பிற எல்லாவற்றையும் இழந்துவிட துணிவுகொள்ளக்கூடாது? சிலுவையில் எனக்காகச் சித்திரவதையுற்று, இதயம் வெடித்துச் செத்துப் போனவருக்காக நான் ஏன் இம்சைகளேத் தாங்கத் தயங்கவேண்டும்? எனக்காகத் துப்பப்பட்டுச் சிலுவையில் அவமானம் அடைந்த கிறிஸ்துவின் நாமத்திற்காக நான் ஏன் அவமானத்தைச் சகித்துக்கொள்ளக்கூடாது? நான்அவரைவிடப் பெரியவனு? அல்லது கிறிஸ்துவைவிடப் பரிசுத்தவானு? அல்லது கிறிஸ்துவைவிட நான் ஒரு பெரிய மகாத்துமாவா? கிறிஸ்து கண் கண்ட பரிசுத்த தெய்வம். நானே ஓர் அசுத்த மனிதன். நான் கிறிஸ்துவை எனது சொந்த தேவ இரட்சகராகப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளத் தயங்கவே மாட்டேன். எனினும், நான் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்வதினிமித்தம் எனது பெற்ருேராலும், எனது உற்ருேராலும் நேர இருக்கும் இம்சைகள் என் கண்முன் வந்து நின்று என்னேக் கலங்கச் செய்தன. அப்பொழுது இயேசு நாதர் நிச்சயமாகவே என் முன் தோன்றித் தமது தேற்றரவாளன் மூலம் என்னேத் தேற்றியருளினுர். நான் உங்க

ளைத் திக்கற்றவர்களாய் விடேன், உங்களிடத்தில் வருவேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. (யோவான். 14: 18) என்று முன்னுரைத்த தெய்வம் இப்பொழுது என் முன் தோன்றி என்னை ஆற்றித் தேற்றினர். பரி. மத். 16: 24—27 வசனங்கள் மூலம் கிறிஸ்து என்னோடு பேசியருளினர்.

அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, 'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினல், அவன் தன்னைத்தானே வெறுத்துத்தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகின்றவன் அதை இழந்து போவான்; என் நிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினல் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் ?

கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ வேண்டும் என்று நான் தீர்மானம் செய்துள்ளது எனது பெற்றோருக்கும், நெருங்கிய உறவினருக்கும் தெரியவந்தது. எனது தாயார் தன்னால் ஆனமட்டும் நான் அன்னிய மதத்தில் சேரக்கூடாது என்று தடுத்துப் பார்த்தார்கள். எனது தாயார் எனக்காக அழுது, நான் இனிமேல் கிறிஸ்தவ மிஷனெரிமார்களோடு சேரக்கூடாது என்று மன்றாடினர்கள். கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்டு நான் வீட்டை விட்டுச் சென்றால், எனக்கு எவ்வளவு துன்பம் நேரிடும் என்பதைச் சொல்லிக் காட்டினர்கள். எனது தாயாருக்கு நான் மூத்த மகனானபடியால் அவர்கள் என்னை அதிகமாக நேசித்து வந்தார்கள். நான் கிறிஸ்தவ மதத்தைத் தழுவப்போகிறேன் என்று அறிந்ததிலிருந்து அவர்கள் அழுகையும் கண்ணீருமாய் இருந்ததோடு,

அவர்கள் வரவர உணவு உண்பதையும் நிறுத்திவிட்டார்கள். எனது தாயாரின் அவல நிலையைக் கண்ணுற்ற யான் கண் கலங்கினேன். யாது செய்வது என்று தெரியாது திகைத்தேன்.

மேலும், எனது தந்தையாரும், மாமன் மாமிமாரும், சகோதர சகோதரிகளும் என் மீது பெரும் கசப்புக்கொண்டார்கள். அவர்களுள் ஒருவர் என் உயிருக்கே உலைவைத்துவிடுவதாக என்னை அச்சுறுத்தினர்.

இவ்விரு காட்சிகளும் என் கண் முன் வந்து நின்றன. என் தாயார் அல்லும் பகலும் எனக்காக அழுது நிற்கும் காட்சி ஒன்று, மற்றொன்று கிறிஸ்து நாதர் சிலுவையில் எனக்காக இரத்தம் சிந்தி தமது உயிரையே விட்டுப் பிணமாகத் தொங்கி நிற்கும் காட்சி. என்னால் உறங்க முடியவில்லை, நல் உணவு கொள்ள முடியவில்லை. எனது நண்பர்கள் என்னிடம் வந்து கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றியும், மிஷனெரிமார்களைப் பற்றியும் என்னஎன்னமோ பொய்யும் புரட்டும் பேசினார்கள். இறுதியில் நான் அனாதைப் பிணம் ஆகவேண்டியதிருக்கும் என்று எச்சரித்தார்கள்.

மீண்டும் இயேசு நாதர் என்னோடு பரி. மத். 10: 36-39 வசனங்கள் மூலம் பேசியருளினர்.

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்லன், மகளையாவது மகனையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்லன். தன் சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்லன். தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான், என் நிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகின்றவன் அதைக் காப்பான்."

கிறிஸ்துவின் அன்பு என்னையும் பற்றிப் பிடித்துக் கொண்டது. எனக்கு இயேசு ஒருவரே போதும் என்று தீர்மானித்துவிட்டேன். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றை யும் நஷ்டமும் குப்பையுமாக விட்டுவிட எண்ணினேன். ஒரு மாரி கால இரவு நேரத்தில் நான் ஆக்ஸ்போர்ட்டு மிஷன் இல்லத்தை நோக்கி நடந்துகொண்டிருக்குங்கால், ஒருவன் ஓடிவந்து என்னை வழிமறுத்து, எனது அனல் தரும் ஆடைகளைப் பிடுங்கிக்கொண்டு, ஒரு தடியால் என் தலையைப் பலமாய் அடித்தான். என் தலை உடைந்தது என்று எண்ணினேன். இரத்தம் கொப்பளித்து வழிந் தோட ஆக்ஸ்போர்ட் மிஷன் இல்லத்தை நோக்கி விரைந்து ஓடினேன். தந்தை உவாக்கர் அவர்கள் என்னை வரவேற்று அடுத்துள்ள வைத்திய சாலையில் நான் சிகிச்சை பெற ஏற் பாடு செய்தார்கள். எனது தாய் மாமாமார்களுள் ஒருவர் தூண்டுதலின் பேரில்தான் அம்மனிதன் என்னை இவ்வாறு கொன்று ஒழிக்கப் பயமுறுத்தித் தடிகொண்டு பலமாய் அடித்தான் என்பது பின்னர் தெரியவந்தது.

அப்பொழுது கிறிஸ்து நாதர் பரி. மத். 10: 28-39 வச னங்கள் மூலமாய் என்னோடு பேசி, என்னைத் தமக்கு அர்ப் பணம் செய்யுமாறு கேட்டார்.

ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாய் இராமல், சரீ ரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயி னும், உங்கள் பிதாவின் சித்தம் இராமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படா திருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்

கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலே இருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலே இருக்கிற என்பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தை அல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன். எப்படி யெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்லன். மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்லன். தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்.

பின்வரும் வசனங்கள் எனது வருங்காலத்தைப் பற்றிய கவலையை அறவே போக்கிற்று.

"ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்...அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? அற்ப விசுவாசிகளே, இன்றைக்கு

இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத்தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயம் அல்லவா?...முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்: நாளையத்தினம்...அந்தந்த நாளைக்கு அதினதின் பாடு போதும்." (பரி. மத். 6: 25-34) இவ்வசனங்கள் எனக்குப் பூரண ஆறுதல் அளித்தன; கடவுளுடைய பராமரிப்பில் பூரண நம்பிக்கை கொண்டேன்.

நான் ஆக்ஸ்போர்ட் இயக்கத்து இல்லத்தில் தங்கியிருந்தபொழுது, என்னுடைய உற்றார் உறவினர் என்னைத் தூக்கிச் செல்லத் திட்டமிட்டனர். ஒரு இரவு நான் அறையில் உட்கார்ந்திருந்தபொழுது யாரோ ஒருவர் ஜன்னல் வழியாக ஒரு ஈட்டியை எறிந்து என்னைக் கொல்லப் பார்த்தனர். கிறிஸ்துவின் கிருபையால் நான் அந்த ஆபத்துக்கும் தப்பித்துக்கொண்டேன். ஆகவே என்னைத் தொடர்ந்து அந்த இல்லத்தில் வைத்திருப்பது உசிதமல்ல என்று நினைத்து, தந்தை உவாக்கர் என்னைக் கல்கத்தாவைவிட்டு வெகு தூரத்தில் போயிருக்கச் செய்தார். இச்சம்பவம் 1896 அல்லது 1897இல் நடந்தது. நான் சோட்டாநாகபுரியின் முதல் அத்தியட்சரான உவைட்லி என்பவர் வசித்த இராஞ்சிக்கு அனுப்பப்பட்டேன். இவர் ஒரு சிறந்த பக்தர். நான் 48 மணி நேரம் காடு வழியாகப் பிரயாணம் செய்து இராஞ்சிக்கு வந்து சேர்ந்தேன். சங்கை உவைட்லி அத்தியட்சர் அவர்கள் என்னைக் கட்டித் தழுவி முகமலர்ச்சியோடு வரவேற்றார். அத்தியட்சர் பங்களாவிலுள்ள அறையில் நான் தங்கலானேன். பிணியாளிகளுக்கு மருத்துவம் செய்து, ஏழைகளுக்கு உதவி செய்து, மனமொடிந்தவர்களை ஆற்றித் தேற்றி, வந்தவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவைப் பற்றிப்

பிரசங்கம் செய்வதில் சோர்வடையமாட்டார் அத்தியட்சர். அக்காலத்தில் மிஷன் மருத்துவச்சாலை அங்குக் கிடையாது.

அத்தியட்சரவர்கள் என்னோடுகூட வேதம் வாசித்து வங்காளத்தில் கிறிஸ்துவைப்பற்றி எனக்குப் போதிப்பார். அத்தியட்சவர்களுடைய அன்பும், பக்தியும், பரிசுத்தமும் என்னை வெகுவாய்க் கவர்ந்தன. அத்தியட்சரவர்களிடத்தில் நான் கிறிஸ்துவைக் கண்டேன். அவருடைய சொல்லிலும், செயலிலும், வாழ்க்கையிலும், கிறிஸ்தவ மணம் கமழ்ந்து நிற்கும். அத்தியட்சரவர்களுடைய புனிதத் தியாகவாழ்வு நான் வாசிக்கும் நிருபமாக இருந்தது. கிறிஸ்தவத் தாயுள்ளம் படைத்தவர் அத்தியட்சரவர்கள். கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் எனது தாயாரை விட்டுப் பிரிந்திருந்த எனக்கு, அத்தியட்சரவர்களே அருமைத் தாயார் ஆனார்கள். அத்தியட்சரவர்கள் என்னிடம் காட்டிய அன்பை நான் ஒருகாலும் மறக்கமுடியாது. அவர்கள் என்னை ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம் செய்து வந்தார்கள். எனக்கு ஞான உபதேசம் ஊட்டிய கனம் கனார் அவர்களிடமும் கிறிஸ்தவ அன்பைக் கண்டு ருசித்தேன்.

வைகாம் என்ற துரைசானி என்னிடம் காட்டிய பரிவை நான் ஒரு நாளும் மறக்கமுடியாது. அவர்கள் என்னைத் தங்கள் பிள்ளையைப்போல் நேசித்தார்கள். அவர்கள் வங்காள மொழி கற்று, கல்வி கற்ற வங்காளிகள் மத்தியில் சுவிசேஷத் தொண்டாற்றி வந்தார்கள். முக்கியமாக அரசாங்க அதிகாரிகளிடையேயும், அவர்களுடைய பெண்கள் மத்தியிலேயும் பெரும் பணி புரிந்து வந்தார்கள். அவர்கள் பெண்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததோடு தையற் கலையும் பின்னற் கலையும் கற்றுக்கொடுத்து வந்தார்கள். அநேக உயர்குல இந்துக்களைத் தனது பங்களாவிற்கு அழைத்து, அவர்களுக்கு அன்புடன் விருந்தளித்து அவர்க

ளோடு கிறிஸ்துவைப் பற்றி உரையாடுவார்கள். எனது தாயாரையும், சகோதரிகளையும், விட்டுப்பிரிந்து வந்த எனக்கு இத்துரைசானி அவர்கள் என் வாழ்நாள் முழுவதும், தாய்க்குத் தாயாகவும், சகோதரிக்குச் சகோதரியாகவும் இருந்து வந்தார்கள்.

இன்னும் எத்தனையோ ஆத்துமாக்கள் அன்புக்காக ஏங்கிக்கிடக்கின்றன. அவர்களுக்குக் கிறிஸ்தவ அன்பை வழங்குவதற்குக் கிறிஸ்தவர்கள் தேவை. இன்னும் எத்தனையோ ஆத்துமாக்கள் கிறிஸ்துவைக் காணவேண்டும் என்று துடித்து நிற்கிறார்கள். அவர்களுக்குக் கிறிஸ்துவை வழங்குவதற்குக் கிறிஸ்தவர்கள் தேவை.

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லாவிதத்திலும், நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவம் இல்லாதவராக இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்" (எபி. 4: 15) மெய்ச்சாந்திக்காக அங்கும் இங்கும் ஓடி ஆடி அலைந்து தவித்து நிற்கும் ஆத்துமாக்கள் மீது பரிதாபமுற்று, அவர்களைக் கிறிஸ்துவிடம் வழி நடத்தத் தக்க கிறிஸ்தவர்கள் ஏராளம்வேண்டும். தன்னையே மறந்து முழுக்க முழுக்கத் தெய்வ அன்பை உலகுக்கு வாரி வாரி வழங்கிப் போன இயேசு கிறிஸ்துவின் சிந்தை படைத்த சீரிய கிறிஸ்தவர்கள் ஏராளம் வேண்டும்!

ஒரு நாள் காலையில் இராஞ்சியிலுள்ள அத்தியட்சராலயத்தில் சங்கை உவைட்லி அத்தியட்சரவர்களால் ஞானஸ்நானம் பெற்றேன். எனக்குப் "பிரேம்மானந்" என்ற பெயர் சூட்டப் பெற்றது. அப்பெயரின் பொருள் அன்பும் மகிழ்ச்சியுமாம். அன்பின் மகிழ்ச்சி என்றும் கூறலாம். எனது பழைய பெயராகிய அனத்நாத் என்ற இந்துப் பெய

ரோடு பிரேம்மானந் என்ற பெயரும் இணைக்கப்பட்டது. இராஞ்சியிலுள்ள ஐரோப்பிய அதிகாரிகளும், இந்திய அதிகாரிகளும், எனது ஞானஸ்நானத்திற்கு வந்திருந்தார்கள். நான் ஞானஸ்நானம் பெற்றபொழுது எனது பழைய ஆதாம் செத்தான், கிறிஸ்து என்னில் உயிர்த்தார். எனது பாவங்களெல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டன. சிலுவை நாதரால் எனக்கு மன்னிப்பு கிடைத்தது; இரட்சிப்பு கிடைத்தது; சாந்தி கிடைத்தது; பரிசுத்தம் கிடைத்தது; பேரின்பம் கிடைத்தது.

அதிகாரம் 2

வேலை தேடல்

எனது கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்தில் எஸ்.பி.ஜி. சங்கத்தைச் சேர்ந்த சங்கை விட்லி அத்தியட்சரோடு உறவு கொண்டேன். மிஷினெரியார் என்னை மனமுவந்து வர வேற்றனர். ஆங்கில நாட்டுக் கிறிஸ்தவர்களும், இந்திய கிறிஸ்தவர்களும் என்னை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட னர். செல்லும் இடமெல்லாம் என்னைச் சீரோடும், சிறப் போடும் நடாத்தினர். கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் எனது தாயார், தந்தையார், சகோதரர் கள், சகோதரிகள், உற்ருர், உறவினர்கள் போன்றவர்களு டைய அன்பையும், ஆதரவையும் இழந்த எனக்கு, எண்ணி ணிறந்த தாய்மார்களும், தந்தைமார்களும், சகோதர சகோ தரிகளும், உற்ற நண்பர்களுமாக, எனக்குக் கிடைத் தார்கள். குடும்பத்தின் மக்களது அன்புக்காக ஏங்கியிருந்த எனது இதய ஏக்கத்தைக் கிறிஸ்தவ மக்கள் பூர்த்தி செய் தார்கள்!

இராஞ்சிமா நகரிலுள்ள அத்தியட்சராலயத்து அங்கத் தினர்களும், ஆங்கில அதிகாரிகளும் எனக்குப் பழக்கம் ஆனுர்கள். இராஞ்சிமாநகரிலுள்ள சோட்டாநாகபுரி பொது மராமத்து இலாகாவில் ஒரு வேலை காலி இருப்பதாக ஒரு நாள் கேள்விப்பட்டேன். இந்த இலாகாவின் தலைவர் பார்கு காசன் என்ற துரை ஆவர். இவர் எனது ஞானஸ்நானத் தின்போது ஆஜராக இருந்து, நான் அடைந்த இன்னல் களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தவர் ஆவார். அர சாங்கக் கணக்கு இலாகாவில் மிகவும் பொறுப்பான இவ் வேலைக்கு, மனு செய்தவனுக நான் அத்துரை முன் சென் றேன். கணக்கில் நிபுணனே இப்பதவியைத் திறம்பட வகிக்க முடியும்,

ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது. இக்காலத்தில் இருப்பதுபோல், அக்காலத்தில் அரசாங்க வேலைகளுக்குப் போட்டித் தேர்வு அதிகம் இல்லை. சோடாநாகபுரி அக்காலத்தில் வங்காள மாகாணத்திற்குட்பட்டிருந்தது. பீஹார் மாகாணம் அப்பொழுது உருவாகவில்லை. என்னைப் பொருத்தமட்டில் குடி உரிமைக் கேள்வி எழுப்பவில்லை. ஆங்கிலக் கணக்கு நிபுணரான கென்டர்ஸன் அவர்கள் எனக்கு அளித்துள்ள ஒரு நற்சாட்சிப் பத்திரம் என் கைவசம் இருந்தது. இங்கிலாந்து ஐரோப்பிய நாடுகளோடு எனது தகப்பனார் கொண்டிருந்த வர்த்தகத் துறையில் எனக்கிருந்த கணக்கு அனுபவம் பற்றிய நற்சாட்சிப் பத்திரந்தான் அது. நான் ஒரு காலத்தில் எனது தகப்பனாருக்குப் பின்னர் குடும்பக் கூட்டு நிர்வாகத்தையும் வணிகத்தையும், பிற பொறுப்புகளையும் ஏற்று சித்தியுடன் நடத்தத்தக்கதாக இளமையிலிருந்தே எனது தகப்பனார் எனக்கு இத்துறைகளில் பெரும் பயிற்சி அளித்திருந்தார். கணக்குத் துறையில் கென்டர்ஸன் துரை அவர்களே எனக்குச் சிறந்த பயிற்சி தந்திருந்தார். அதற்குச் சான்றாகவே இந்நற்சாட்சிப் பத்திரமும் எனக்குத் தந்திருந்தனர். மனிதன் ஒன்று நினைக்க தெய்வமோ இன்னொன்று நினைத்து விடுகின்றார். தெய்வசித்தமே நிலை பெறுகின்றது. நான் இன்று எங்கே நின்றேன்? எனது தந்தையார் வீட்டையும், பொருளையும், சொத்தையும், சுகத்தையும், வணிகத்தையும் விட்டுவிட்டு, தூரமானதோர் இடத்திலே, ஓர் அரசாங்க அலுவலகத்தில் பணியாற்ற மனுசெய்து நிற்கின்றேன்.

பர்குதாசன் துரை அவர்கள் புன்முறுவலோடு எனது நற்சாட்சிப் பத்திரத்தை வாசித்தார்கள்; நல்ல சம்பளத்தோடு அப்பெரிய பதவியில் என்னை நியமித்துக்கொள்வதாக வாக்களித்தார்; நான் அப்பதவியைத் திறம்பட நெடுங்காலம் வகித்து அதற்குரிய தேர்வுகளை எல்லாம் எழுதி

வெற்றி பெற்ருல் ரூ. 500 சம்பளத்திற்கு நான் உயர்த்தப் பட்டு, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஓய்வு ஊதியமும் பெறுவதற்குத் தகுதி பெற்று விடுவேன் என்பதாகக் கூறிஞர். நான் அதிக நன்றியோடு அப்பதவியை ஏற்றுப் பணியாற்றத் தொடங்கினேன். அத்தியட்சாலயச் சுற்று சுவர்க்குள்ளே அமைந்துள்ள மாபெரும் பங்களாவில் நான் வசிக்கும் வாய்ப்புப் பெற்றேன். நான் வேலை செய்ய ஆரம் பித்த சில நாட்களுக்குப் பின்னர் **பர்குதாசன் துரை** அவர்கள் நான் மத்தியானம் அவரது பங்களாவிலேயே உணவு அருந்துமாறு பணித்தார். நான் மத்தியான வேளை களில் வெப்பம் மிக்க கோடை காலத்தில் கடும் வெயிலில் அத்தியட்சராலயச் சுற்று சுவருக்குள் அமைந்திருக்கும் பங்களாவிற்குப் போய் மத்தியான உணவு உண்டுவிட்டு மீள்வதில் எனக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற் காகவே அவர் அன்போடு இந்த ஏற்பாட்டைச் செய்தருளி ஞர். எங்கள் இருவருக்குமிடையே கிறிஸ்தவ ஐக்கியம் வளர்ந்தோங்க ஆரம்பித்தது.

எப். யி. விப்காப் துரைசானியின பங்களாவில் நடை பெற்ற ஒரு தேநீர் விருந்தில்தான் நான் முதன் முதலாவ தாக மிருணுளினி (தாமரை) என்ற பெயர் கொண்ட எனது வருங்கால மனைவியைச் சந்திக்க நேர்ந்தது. அவள் ஒரு கண்ணியமிக்க இந்து பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த வள். மத்திய மாகாணத்தில் **சிப்நாத் சட்டர்ஜி** என்ற தனது தந்தையாரோடு இவள் தனது இளமைப் பரு வத்தைக் கழித்திருந்தாள். பின்னர், தனது பெற்றோரை இழந்தவளாய் **சந்தேந்திர நாத்** என்ற தனது மாமனுரால் வளர்க்கப்பட்டாள். இவர் சிறந்த கல்வி நிபுணர். பிரம்ம சமாஜத்தில் பற்றுக்கொண்டவர். இவர் சுகத்தின் பொருட்டு இராஞ்சி நகர் வந்து சிறிது காலம் குடியேறி இருந்தார். **விப்காப்** துரைசானியார் இராஞ்சியிலுள்ள

இவர்களுடைய வீட்டிற்குஅடிக்கடி சென்று, எனது வருங் கால மனைவியாருக்கும், அவளது அத்தைக்கும் வேதம் வாசித்து, சுவிசேஷத்தைப் புகட்டி வருவார்கள். அதோடு கூடத் தையலும், பின்னலும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தார்கள். நான் வாரந்தோறும் இம் மிசியம்மை யார் பங்களாவுக்குச் செல்வதுபோல, எனது வருங்கால மனைவியாரும் அவரது மாமாவும் வாரந்தோறும் வழக்க மாக இங்கு வந்து போனமையால் எங்களுக்குள் நல்ல பழக்கம் ஏற்பட வாய்ப்புக் கிடைத்தது.

துரைசானியிடம் எனது வாஞ்சையை எடுத்துரைத் தேன். காரணம், இதற்குள்ளாக அவர்கள் எனக்கு ஒரு தாயைப்போல் ஆகிவிட்டார்கள். மிருணாளினியை எனக்கு மணம் செய்து வைப்பதில்அவர்களுக்கும் ஊக்கம் பிறந்தது. எனினும், ஒரு கிறிஸ்தவன் ஒரு இந்துப் பெண்ணை மணம் புரிந்துகொள்ள யார் சம்மதிப்பார்கள்? மிருணாளினி ஒழுங் காகக் கிறிஸ்தவ வேதத்தை வாசித்து வந்தாள். சில வேளை களில் தனது மாமாவோடு அத்தியட்சாலயத்திற்குச் சென்று சாயுங்கால ஆங்கில ஆராதனைகளில் கலந்துகொண்டு பிரசங்கமும் கேட்டு வந்தாள்.

பிரம்ம சாமாஜக் கலியாண ஒழுங்குப்படி திருமணம் நடைபெறவேண்டும் என்று அவளது மாமா கூறினார். ஆனால், சங்கை உவைட்லி அத்தியட்சர் இதற்கு உடன்பட வில்லை. மிருணாளினி கொஞ்ச காலமாக விப்காப் துரை சானியின் ஆதரவில் இருந்து ஞானஸ்நானத்திற்கு ஆயத் தப்படுமாறு ஒழுங்கு செய்யப்பட்டது. அவளது மாமாவுக் கும் அவளுக்கும் இதுகாரணமாக மனத்தாங்கல் ஏற்பட் டது. கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் துரைசானியார் பூரிப் போடு கூறிய "அனுக்கிரிஹிதா" (அனுக்கிரகம் பெற்றவள்

—லூக்கா 1: 28) என்ற பெயரோடு துரைசானியின் முதல பெயரான பிரான்சிஸ் என்ற பெயரும் சேர்க்கப்பட்டு "பிரான்சிஸ் அனுக்கிரிஹிதா" என்ற பெயரால் சங்கை உவைட்லி அத்தியட்சரவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இது நிச்சயமாகவே ஒரு தீர்க்கதரிசனமான பெயர்தான். எனது வாழ்க்கைத் துணைவி உண்மையாகவே கர்த்தரால் கிருபைபெற்றவள்தான். எனது வாழ்க்கையில் அவள் கிருபையின் வடிவமாகத் திகழ்ந்தாள்.

சங்கை உவைட்லி அத்தியட்சரவர்களே எங்கள் திருமணத்தையும் சிறப்புறநடத்தி தந்தார்கள். அனுக்கிரிஹிதா இராஞ்சி அத்தியட்சாலயச் சுற்று சுவருக்குள்ளே அமைந்துள்ள பங்களாவில் என்னோடு இல்லற வாழ்க்கை நடாத்தத் தொடங்கினாள். அடுத்துள்ள பங்களாவில் திருப் பவுல் பள்ளியின் தலைவரான திரு. டி. கே. நந்தி வசித்தார்கள். அவர்கள் எங்களுடைய சிறந்த நண்பர்கள் ஆனார்கள். குடும்ப நிர்வாகம் பற்றிய பயிற்சியைத் திருமதி நந்தியம்மையார் எனது வாழ்க்கைத் துணைவிக்குக் கற்றுக் கொடுக்க முன் வந்தார்கள். நான் எனது அலுவலகப் பணியை ஒழுங்காகச் செய்து வந்தேன். விட்காப் துரைசானியார் தொடர்ந்து எனது மனைவிக்கு வேதாகமம் கற்றுக் கொடுத்து வந்ததோடு ஆங்கிலமும், தையற் கலையும் சொல்லிக் கொடுத்து வந்தார்கள்.

இச்சமயத்தில் அத்தியட்சரவர்கள் எனது மனைவியைத் திடப்படுத்தலுக்கு ஆயத்தம் செய்து வந்தார்கள். அத்தியட்சரவர்களுடைய பரிசுத்த கிறிஸ்தவ நெறியால் எனது மனைவி கிறிஸ்துவுக்குள் அதிகமதிகமாய் வளர்ந்து வந்தாள். துரைசானியாரும் அத்தியட்சரவர்களும் கிறிஸ்துவைப் பற்றி எனது மனைவிக்கு அளித்துள்ள உபதேசங்கள் மிகச் சிறந்த பலனை அளித்து வந்தன. இவர்கள் எமக்கு ஆற்றியுள்ள கிறிஸ்தவ அன்புப்பணியை நாங்கள் ஒருகாலும் மறக்கமாட்டோம்.

"தேவன் யாரை முன் குறித்தாரோ, அவர்களை அழைத்தும் இருக்கிறார்". விசுவாசிகள் எல்லாரும் தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியே அழைக்கப்பட்டவர்கள் ஆவார்கள். நம்மைப் பற்றிய தெய்வச் சித்தம் எது என்பதை அவர் நமக்குத் தெளிவு படுத்துகின்றார். நாம் எத்துறையில் எவ்வாறு ஓடவேண்டும் என்பதற்கான வழியும் அவரே வகுத்துள்ளார். அவர் நம்மை அழைத்த அழைப்பின் மேன்மையையும் நோக்கத்தையும் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றார்.

நாளாக நாளாக நான் ஏன் கிறிஸ்தவனானேன் என்பதை ஊன்றிச் சிந்திக்கலானேன். எக்காரணத்திற்காக எனது பெற்றோர்களையும், வீட்டையும், சொத்தையும் துறந்து விட்டு வந்தேன்? நான் விட்டு விட்டு வந்த செல்வத்தைக் காட்டிலும் குறைந்ததொரு மாதச் சம்பளத்தைப் பெறுவதற்காகவா? அல்லது கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அதிகமதிகம் அறிவதற்காகவா? கிறிஸ்துவின் சிலுவை அன்பைப் பற்றி மற்றவர்களுக்கும் கூறி அறிவிப்பதற்காகவா? பரிசுத்த பவுலைப்போல் நான் எண்ணலானேன். "கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன்." இந்த எண்ணம் என் இதயத்தைக் கவ்விப் பிடித்துக்கொண்டது. எனது அலுவலக வேலையிலும் புதிய இல்லற வாழ்விலும் இருந்த ஆர்வம் சிறிது அசைய ஆரம்பித்தது.

எனது புத்துணர்ச்சி பற்றி தந்தை உவாக்கர் அவர்களுக்குக் கடிதத்தின் மூலம் தெரிவித்தேன். எனக்கு இச்சமயத்திற்கேற்ற ஆலோசனை பகருமாறு அவரை வேண்டிக்கொண்டேன். அவரோ கல்கத்தாவிலுள்ள அத்தியட்ச கல்லூரியில் நான் சேர்ந்து வேத சாஸ்திரம் கற்குமாறு எனக்கு ஆலோசனை தந்தார். சங்கை உவைட்லி அத்தியட்சர்

அவர்கள் நான் திர யோசித்த பின்னரே ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்றும், அதுவரை பொறுமையோடு கர்த்தருடைய சித்தம் அறியும்வண்ணம் காத்திருக்கவேண்டும் என்றும் புத்தி புகட்டினர்.

இதற்கிடையில் தந்தை உவாக்கர் அவர்களின் சிபார்சுவின்பேரில் நான் அத்தியட்சர் கல்லூரியில் சேர்வதற்கு மனு செய்தேன். அப்பொழுது அவ்வேத சாஸ்திரக் கல்லூரியின் தலைவராய் இருந்த கனம் நான்சென் ஐயரவர்கள் என்னை உவகையோடு வரவேற்று, மாதம் ஐம்பது ரூபாய் உபகாரச் சம்பளம் அளிப்பதாகக் கூறினர்கள்.

இக்காரியம்பற்றி எதுவும் நான் அத்தியட்சரவர்களோடு முதலாவது தெரியப்படுத்திக் கொள்ளவில்லை. இதற்காகப் பின்னர் நான் மிகவும் வருந்த நேரிட்டது. நான் முதலாவது அவருக்கு இதைப் பற்றித் தெரிவிக்காததின் காரணம், அனுவசியமாக அந்த வயது சென்ற அன்புத் தந்தையின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வானேன் என்று தான்.

நான் எனது மனைவியிடம் இந்த ஐம்பது ரூபாயை வைத்துக்கொண்டு கல்கத்தாவில் காலம் கழித்து விடலாமா என்று கேட்டேன். அவளோ என் மன விருப்பத்தின்படியே தான் நடந்துகொள்வதாகக் கூறினள். வாழ்வானலும், தாழ்வானலும் கணவனின் விருப்பத்திற்கு மாருக நடக்க அவள் விரும்பவில்லை. கஞ்சி குடித்தேனும் அப்பணத்திற்குள் காலம் தள்ளிவிடலாம் என்று அவள் கருதினள். அவள் எப்பொழுதுமே போதும் என்ற மனம் படைத்த திருப்தியுள்ள ஆத்துமாதான்! என் வாழ்க்கை முழுவதும் அவள் எனக்கு ஒரு ஆசீர்வாதமான உறுதுணையாகவே திகழ்ந்தாள். கிறிஸ்தவ மாண்பு படைத்த

உள்ளம் கொண்டவள் அவள். சிறந்த கிறிஸ்தவத் தியாகி அவள்!

இறுதியில் எனது மேலதிகாரியான பர்குகாசன் துரையவர்களிடம் சென்று எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். உடனே அவர் கடுங்கோபங்கொண்டு உனக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டதா? போய் உன் வேலையைப் பார் என்று சினந்து கூறி அனுப்பிவிட்டார். அடுத்த நாள் அவர் என்னை அழைத்து, "ஏன், புத்தி சரியாகிவிட்டதா?" என்று கேட்டார். நான் அவரிடம் தந்தை உவாக்கர் எழுதியிருந்த கடிதத்தையும், வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவர் மாதம் ஐம்பது ரூபாய் உபகாரச் சம்பளம் தருவதாக எழுதியிருந்த கடிதத்தையும் காட்டினேன். துரையவர்கள் அதைப் படித்துவிட்டு, இந்தச் சொற்பத் தொகையால் கல்கத்தாவில் எப்படி வாழ்க்கை ஆற்றுவாய் என்று கோபத்தோடு வினவினார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை கோவில் ஆராதனை முடிந்ததும் அவர் என் மனைவியைப் பார்த்து, "நான் செய்திருக்கும் தீர்மானம் சரியானதா? என்றும், அந்தச் சொற்பத் தொகையில் கல்கத்தா பட்டினத்தில் காலம் கழித்துவிடலாமா? என்றும் கேட்டார். அவளோ புன்னகையோடு, எப்படியோ? அது எனக்குத் தெரியவில்லையே! என்று பதில் உரைத்தாள். பின்னர் அவர் உபகாம் துரைசானியை அண்டி அவர்கள் எனக்குச் சரியான புத்தி சொல்லிக் கல்கத்தா பயணத்தை நிறுத்திவிட்டு, இந்த அரசாங்க வேலையைத் தொடர்ந்து நான் செய்யுமாறு என்னைத் தூண்டிவிட அவர்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால், மிசியம்மையாரோ நான் வேதசாஸ்திரம் கற்கும் காலத்தில் தான் பண உதவி செய்வதாக வாக்களித்தார். மிசியம்மையாரின் எதிர்பாராத தீர்ப்புதனைக் கண்டு துரையவர்கள் வியப்புற்றவராய் எனது இராஜினுமா மனுவை ஏற்றுக்கொள்ள ஒருவாறு சம்மதித்தார்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் துரையவர்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "கிறிஸ்தவ வெற்றி மகிழ்ச்சி வாழ்க்கையின் உண்மையான இரகசியம்" என்னும் புத்தகத்தை என் கையில் கொடுத்து அதை வங்காளத்தில் மொழி பெயர்க்குமாறு பணித்தார்.

நாங்கள் கல்கத்தா புறப்படு முன்னர் மீண்டும் துரையவர்கள் என்னைக் கண்டு பேசி எனது மனைவியின் கையில் நூறு ரூபாய் கொடுத்தார். கல்கத்தாவில் வாழ்க்கை ஆற்றுவதற்கு அதிகப் பணம் வேண்டியதிருக்கும் என்று சொன்னார். மேலும், கல்கத்தாவிலுள்ள வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவருக்கு உறையிடப்பட்ட ஒரு கடிதமும் கொடுத்தார். கல்லூரியில் நான் இருக்குங்கால் அப் புத்தகத்தை வங்காளத்தில் திருப்புமாறு வேண்டிக்கொண்டார். அக்கடிதத்தை நான் கல்வித் தலைவருக்குக் கொடுத்த பொழுது, எனக்கு வேண்டிய புத்தகங்களுக்குரிய பணத்தை எல்லாம் துரையவர்கள் கொடுத்துவிடுவதாகத் தலைவருக்கு எழுதியிருந்தார் என அறிந்தேன். அதோடுகூட நூறு ரூபாய்க்குரிய பணச் சீட்டும் எனக்காக அக் கடிதத்துக்குள் வைக்கப்பட்டிருந்தது. துரையவர்கள் கல்கத்தாவுக்கு வரும் பொழுதெல்லாம் எங்களைத் தவறாது பார்வையிட்டு, எங்களுக்கு வேண்டிய சாமான்கள் கொடுத்து உதவியதோடு, மேலும் என்னென்ன வேண்டும் என்றும், அன்போடு ஒரு தகப்பன்போல் வினவி நிற்பார். கிறிஸ்தவத் தொண்டர்களின் அன்புதான் என்னே! என்னே!

அக்காலத்தில் அத்தியட்சர் கல்லூரியில் வேத சாஸ்திர மாணவர்கள் ஒரு சிலர்தான் படித்தார்கள். என்னைச் சேர்த்து மொத்தம் மூன்று பேர்தாம் வேத சாஸ்திர மாணவர்கள். இம்மூவரில் ஒருவர் ஆங்கிலேயர். அடுத்தவர் அத்தால்பிஷ்வா. அக்காலத்தில் மணம்புரிந்த

மாணவர் வசிப்பதற்குக் கல்லூரிக்குள் இடவசதியில்லை. ஆகவே, புனித மேரி தேவாலயத்தின் பக்கத்திலுள்ள ஒரு வாடகை வீட்டில்தான் நான் தங்கியிருந்து படித்து வந்தேன்.

நானும் எனது மனைவியும் புனித மேரி தேவாலயத்தின் அங்கத்தினர்கள் ஆனோம். நான் அத் தேவாலயத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு ஓய்வு நாள் வகுப்பு நடத்தி வந்தேன். வேத சாஸ்திரக் கல்லூரியில் நான் படித்த காலம் எல்லாம் ஓய்வு நாள் பாடசாலை நடத்துவதில் தவறினது இல்லை. அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் புதிதாய்க் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்ந்துள்ள எங்கள் இருவரைப்பற்றியும் அறிந்துகொள்ள ஆரம்பித்தனர். அத்தேவாலயத்தில் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற இன்னும் சிலரும் இருந்தார்கள். நானும் எனது மனைவியும் இவர்களோடு நன்கு பழகி வந்தோம். திருமதி சாந்தல் அம்மையாரின் நட்பும் எங்களுக்குக் கிடைத்தது. அவர்கள் ஒரு குருவானவரின் புகழ்பெற்ற மகள் ஆவர். புனித மேரி தேவாலயத்தை நிறுவியவர்களுள் ஒருவரான கனம் ஷரிஷர் சாந்தல் ஐயவரவர்களுடைய மருமகள் ஆவாள். அவர்களோடுகூட அவர்களுடைய கொழுந்தியரான திருமதி குப்தா அம்மையாரும் எங்களோடு நன்றாகப் பழகி வந்தார்கள். இந்த இரு பெண் மணிகளும் கனேன் பானர்ஜி ஐயரவர்களுக்கு நெருங்கிய இனத்தவர் ஆவர். இவர்கள் இருவரும் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் இனத்தவரால் கைவிடப்பட்டவர்கள். இவ்வாறு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பெற்றோரையும் உற்றாரையும் இழந்த அநேகர் ஒன்றாகச்சேர்ந்து கிறிஸ்தவ நட்புரிமையோடு கிறிஸ்தவ அன்பால் ஒரு குடும்பத்து மக்கள்போல் அந்நியோன்யமாய் வாழ்ந்து வந்தோம். சில நாள் சாயுங்காலத்தில் நாங்கள் ஒன்றாகக் கூடி, பாடி ஜெபித்து வருவது வழக்கம். நாங்கள் ஒற்றுமையாக ஒரு

வர் பாரத்தை ஒருவர் சுமந்துகொள்வோம். அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வோம். கிறிஸ்தவ ஐக்கியமும், அன்பும், அந்நியோன்யமும் எங்களைக் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகத் திகழச் செய்தது. அக்காலத்தில் இந்து மதத்திலிருந்தும், இஸ்லாம் மதத்திலிருந்தும் அநேகர் கிறிஸ்தவச் சமயத்தைத் தழுவினர்.

நான் இவ்வாறு அத்தியட்சக் கல்லூரியில் கல்கத்தாவில் படித்து வருங்கால், ஊடே ஊடே போய் என் தாயாரைப் பார்த்து வருவது உண்டு. என் தாயார் நான் கிறிஸ்தவன் ஆனதின் நிமித்தம் இன்னும் அதிகக் கசப்பு கொண்டிருந்தார்கள். நான் கிறிஸ்தவச் சமயத்தை விட்டுவிட்டு மீண்டும் இந்துச் சமயத்திற்கு வந்தால் காசிக்குப் போய், கருமம் தீர்க்கும் சுத்திகரிப்பு வைபவத்திற்குரிய எல்லாச் செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாகப் பலமுறை கூறினார்கள்.

எனது தகப்பனார் பகல் நேரத்தில் அலுவலகம் சென்றிருக்கும் சமயம் பார்த்து, நான் வீட்டிற்குப் போய், என் தாயாரைப் பார்த்துவரும் செய்தி கடைசியாக என் தகப்பனார் காதுக்கு எட்டியது. உடனே என் தகப்பனார் ஆத்திரம் கொண்டு என்னை வீட்டுக்குள் செல்ல அனுமதிக்கக்கூடாது என்று வாயில் காவற்காரனுக்குக் கட்டளையிட்டார். அதன் காரணமாக, ராம்ரூப் என்ற காவற்காரன் என்னை எனது பூர்வீக வீட்டிற்குட்செல்ல அனுமதிகொடாது என்னைத் தடுத்துவிட்டான். வீட்டு வாசலை அடைத்துவிட்டான். தாயன்பு என்னை நெருக்கி ஏவ, நான் ஜன்னல் வழியாக என் தாயாரோடு உறவாடினேன். எனது தாயார் எவ்வளவாக எனக்காகத் துடித்து அழுதார் என்பதை வாசகர் நேரில் வந்து பார்த்திருந்தால் கலமாய் இருக்கும்! தாயன்பு என் உள்ளத்தை

உடைத்து விடும்! இத்தாயன்புக்காக நான் கிறிஸ்தவ மதத்தை விட்டுவிட பலமுறை பலமாகச் சோதிக்கப்பட்டேன். ஆனால், கிறிஸ்துவின் அன்பு தாயன்பைவிட மகத்துவமானது, அற்புதமானது, ஆழமானது, உருக்கமானது, அருமையானது! மற்றபடி நான் அப்போதே கிறிஸ்துவை மறுதலித்துவிட்டு என் தாய் வீட்டுக்குத் திரும்பி இருப்பேன். கிறிஸ்து அதிசயமான தெய்வ இரட்சகர்! அவரது கிருபை மிகமிக அற்புதமானது. தெய்வம் என்றால் கிறிஸ்து அல்லவா தெய்வம்! கிறிஸ்துவின் இரத்தத்திற்கு இருக்கும் ஆற்றலை அளவிட யாரால்கூடும்? மூவுலகிலும் கிறிஸ்துவின் இரத்தத்தைப்போல் வல்லமை மிக்கது வேறு எதுவும் இல்லை. கிறிஸ்துவின் இரத்தம் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளாவிடில், நான் அப்பொழுதே கிறிஸ்தவ மதத்தைக் கைகழுவியிருப்பேன்.

ஆ! கிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றது! பரிசுத்தமானது! இதயத்தை இழுக்கும் சக்தி படைத்தது. கிறிஸ்துவின் சிலுவை அன்பைவிட்டு என்னைப் பிரிப்பவன் யார்? என் தாயார் என்னைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல்மிக்கவளாய் ராம்ரூப் என்ற காவற்காரனைக் கெஞ்சி கேட்டுக்கொண்டு, என்னை வீட்டுக்குள்ளே வர அனுமதித்தார்கள். கிறிஸ்தவர்கள்மீதுகொண்ட வெறுப்பால் எங்கள் வீட்டு வேலைக்காரர்கள்கூட என்னை ஒரு தீண்டாச் சாதியினன் போலவே நடத்தினார்கள். சில வேளைகளில் எனது தாயார் அன்போடு அளிக்கும் உணவை நான் உண்டபின், அப்பாத்திரத்தைக் கழுவுவதற்கு எங்கள் வீட்டு வேலைக்காரர் மறுத்து விடுவார்கள். நான் இருந்த இடத்தையும் ஆசனத்தையும் கங்கா நதி தீர்த்தம், அல்லது சாணம் கலந்த தண்ணீர்கொண்டு சுத்திகரிப்பது வழக்கம். நானும், நான் இருந்த இடமும் இந்துக்களுக்குத் தீட்டாகவே கருதப்பட்டன.

அனைவரும் என்னை ஒரு இழிகுல நாயைப்போல நடத்தினார்கள். நான் ஒரு தீண்டாச் சாதியினனைப்போலவே அவர்களுக்குக் காணப்பட்டேன். கிறிஸ்தவர்கள்மீது அவ்வளவு வெறுப்பு!

வேத சாஸ்திரக் கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருந்த இரண்டாவது ஆண்டில் இங்கிலாந்தில் இருந்து எங்கள் கல்லூரிக்கு உப தலைவராக கனம் ரிச்சர்ட்ஸ் ஐயரவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களை வரவேற்க நானும் சென்றிருந்தேன். அதிலிருந்து ஐயரவர்கள் மரிக்கும் வரை எனக்கு ஆப்த நண்பனாக இருந்தார்கள். எனது மூத்த மகனுக்கு அவர்கள் தாம் ஞானத் தந்தை. பின்னர் என் வாழ்வில் நேரிட்ட எல்லாத் துன்பங்கள் மத்தியிலும் அவர்கள் எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தார்கள். எனது பெற்றோர் உற்றாரை அவர் அடுத்துச் சென்று எங்களுக்கிடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் மீண்டும் ஏற்படுத்தப்பெரிதும் பாடுபட்டார். அவர் குழந்தை உள்ளம் படைத்தவர், பரலோக இராஜ்ஜியம் அவரைப் போன்றவர்களுக்குத்தான் உரியது என்று நான் அடிக்கடி கூறுவது உண்டு. அவர் யாரோடும் வெகு இலேசாகப் பழகிக்கொள்வார். அவருடைய குழந்தையுள்ளம் எல்லாரையும் அவரண்டை காந்தம்போல் இழுத்துக்கொள்ளும்.

பின்னர், அவர் அத்தியட்சர் கல்லூரிக்கு முதல்வர் ஆனார். காலஞ்சென்ற இந்திய பிரதம அத்தியட்சரின் மகளாகிய **காப்பின்ஸ்டன்** துரைசானியை அவர் மணந்துகொண்டார். அந்த அம்மையாரும் எங்களுக்கு ஒரு தாய்போல் இருந்தார்கள். கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் இவர்கள் காட்டிய அன்பை ஒருக்காலும் மறக்கமுடியாது. இவர்களிடம் கல்வி கற்ற கிறிஸ்தவ மாணவர்களும் இந்து மாணவர்களும் இப்பொழுது உலகம் எங்கும் பெரும் பதவி வகித்து வருகின்றார்கள். அத்தனை பேரும்

இப்பொழுதும் இவர்களது அன்பை நினைத்துவிட்டால் உள்ளம் உருகிநிற்பர்! இவர்களை நான் நினைத்துவிட்டால் என் உள்ளம் பூரிப்பால் துள்ளிக் குதிக்கும்! கிறிஸ்தவ அன்பை இவர்கள்பால் கண்டு பருகியுள்ளோம். இவர்களது புனித வாழ்க்கை எம் வாழ்க்கையை உருவாக்கியது. இவர்களிடம் நாங்கள் கண்ட கிறிஸ்து, எங்களையும் களிப்பூட்டி ஆட்கொண்டார். அவர்களைக்கண்டவர்கள், கிறிஸ்து அவர்கள் என்று திட்டமாய்ச் சாட்சி பகர்ந்தார்கள்.

எனது கல்லூரி படிப்பு 1901-ஆம் ஆண்டில் முற்று பெற்றது. கல்லூரித் தலைவர் எனது இறுதித் தேர்வு வெற்றிக்குச் சின்னமாக ஒரு தகுதிப் பத்திரம் வழங்கினர். ஒரு மாத உபகாரச் சம்பளம் முன் பணமாக அளிக்கப்பட்டது. எவ்வித அத்தியட்சாதீனமும் என்னை வேத சாஸ்திர கல்லூரிக்கு அனுப்பாது, நான் எனது சொந்தமாகவே சுயேச்சையாக இக்கல்லூரியில் வந்து சேர்ந்து கற்றபடியால், இக்கல்வி முடிந்ததும், நான் குருப்பட்டம் பெற்று குருவானவராக எவ்வித அத்தியட்சாதீனத்துக்கும் சேவையாற்றச் செல்வதற்கு வழிவகை இல்லாது போயிற்று. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இராஞ்சிக்கு மீண்டும் செல்லலாமா என்று யோசித்தேன்.

முன்னல் உவைட்டிலி அத்தியட்சர் எனக்கு கூறிய புத்திமதி இப்பொழுது எனக்கு நினைவுக்கு வந்தது. அவருடைய ஆலோசனையைத் தட்டினபடியால் நான் இவ்வித நிலைமைக்கு வரவேண்டியது ஆயிற்றே என்று தவித்துக்கொண்டிருக்கும் வேளையில், தந்தை ஸ்டராக், தந்தை டவ்கெல்ஸ் என்பவரிடமிருந்து ஆக்ஸ்போர்ட் மிஷன் சார்பாக நான் அவர்களுடன் சுவிசேஷப் படை முயற்சியில் கலந்துகொள்ளுமாறு எனக்கு ஓர் அழைப்பு வந்தது. அவர்கள் கூடாரங்களில் தங்கி ஆங்காங்கு சுவிசேஷத் தொண்டாற்றுவர்.

ஆனால், குடும்பச் சகிதமாக அவர்களுடன் தங்கிச் சுவிசேஷ சேவையாற்ற வசதியில்லாது போகவே, அந்த அழைப்பை என்னால் ஏற்கமுடியாதுபோயிற்று. இச்சமயத்தில் இராஞ்சியிலுள்ள உயிப்காம் துரைசானியிடமிருந்தும், அத்தியட்சரிடமிருந்தும், நாங்கள் இராஞ்சிக்கு வருமாறு அழைப்புக் கடிதங்கள் வந்தன. நான் இராஞ்சி சென்று பழையபடி அரசாங்க வேலை செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில், கல்கத்தா அத்தியட்சாதீனத்திலிருந்து ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அதன்படி நான் கிழக்கு வங்காளத்திலுள்ள 100 மைல் வட்டாரத்திலுள்ள அநேகச் சிதறுண்ட கிறிஸ்தவர்களைச் சந்தித்து, கிறிஸ்தவத் தொண்டு புரிய வேண்டியதிருந்தது. மீண்டும் அரசாங்க வேலையில் நுழைவதா அல்லது திருச்சபை தொண்டில் ஈடுபடுவதா என்ற பிரச்சினை எழுந்தது. நான் அருமையாக நேசித்த உவைட்டிலி அத்தியட்சரவர்களும் உவைப்காம் துரைசானியும் நான் கிறிஸ்தவத் தொண்டில் ஈடுபடவேண்டும் என்று புத்தி புகட்டினர். ஆகவே நான் கல்கத்தா அத்தியட்சாதீனம் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ஆரம்ப பயிற்சி வேலைக்காகக் கிழக்கு வங்காளத்திலுள்ள சைட்பூர் என்ற ஊருக்குச் செல்லலானேன்.

ஆனால், நான் தங்கியிருப்பதற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த வீடு மிகவும் பரிதாபமான நிலைமையில் இருப்பதைக் கண்டு பிரமித்துவிட்டேன். அவ் வீடு அநேக மாதங்களாகக் குடியற்றுப் பாழடைந்து புல் முளைத்துப் போய் விட்டது. நானும் எனது மனைவியும் அவ் வீட்டின்முன் திகைத்து நிற்கையில், அவ்வழியே தெய்வாதீனமாக வந்த அவ்வூர் இரயில்வே ஆஸ்பத்திரி மருத்துவரான டே என்பவர் எங்களுடைய பரிதாப நிலைமையைப் பார்த்து, எங்களையும் எங்களுடைய சாமான்களையும் தமது குதிரை வண்டியில் ஏற்றிக்கொண்டு தமது வீட்டிற்கு அழைத்து

சென்றார். அடுத்த நாள் அத் திருச்சபையைச் சேர்ந்த மற்றவர்களும் வந்து எங்களைச் சந்தித்துப் பேசினார்கள். திருமதி டே, திருமதி போஸ் இவர்களுடைய அரும் பெரும் முயற்சியால் அப்பொழுது தற்செயலாகக் காலியாயிருந்த ஒரு உதவி மருத்துவரின் வீடு எங்களுக்குத் தற்காலிகமாகக் குடியிருக்கக் கிடைத்தது. அத் திருச்சபையின் குருவானவருடைய ஆதீனத்தின்கீழ் நான் அப் பிராந்தியத்தில் சிதறுண்ட கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்தவத் தொண்டாற்ற முனைந்தேன்.

அவ்வட்டாரம் முழுவதும் மலேரியாக் காய்ச்சல் பரவியிருந்தது. நான் கொசுவலையின்றி ஊர் ஊராகச் சென்று, ஆங்காங்குக் கிடைக்கும் எந்தவிதமான தண்ணீரானாலும் சரி, ஆகாரமானாலும் சரி, அவற்றையெல்லாம் உண்டு, கிடைத்த இடங்களில் கொசுவலையின்றித் தூங்கி, மருத்துவ வசதியும், போக்குவரத்து வசதியும் இல்லாமல் காடுமேடுகளிலும் ஈரமான பள்ளத்தாக்குகளிலும் அலைந்து திரிந்து கிறிஸ்தவத் தொண்டாற்றி வந்தபடியால், எனக்குக் கடைசியாகக் கடும் மலேரியாக் காய்ச்சல் வந்துவிட்டது. இருபது, இருபத்தைந்து தடவைகள்போல் மலேரியாக் காய்ச்சல் என்னைக் கொடூரமாகத் தாக்கிவிட்டது. இதோடு "மஞ்சள் காமாலை" வியாதியும் என்னைப் பிடித்துக்கொண்டது. கொடும் வியாதியுற்றவனாய் இரயில்வே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பெற்று, சிகிச்சைபெற்று வந்தேன். போஸ் மருத்துவரும், டே மருத்துவரும் எனக்குச் சிகிச்சை அளித்து வந்தனர். போஸ் மருத்துவர் எனது மைத்துனரோடு எடின்பரோவில் கல்வி கற்றவர். ஆகையால் என்னை அதிகக் கருத்தூன்றிக் கவனித்து வந்தார். திருமதி போஸ் அம்மையாரும் திருமதி ஷான்பீ அம்மையாரும் அடிக்கடி மருத்துவச்சாலைக்கு வந்து என்னைப் பார்வையிட்டு, எனக்கு வேண்டியதை அன்புடன் கொடுத்துச் செல்

வர். எனினும் என் வியாதி தீர்ந்தபாடில்லை. எனது நிலைமை மிக மோசமானது. அந்த இடமே எனக்குப் பிடிக்கவில்லை. அப்பிராந்தியத்து வெப்பதட்ப நிலை என் சுகத்துக்கு ஒத்து வரவில்லை. ஆகவே, நான் உடனே ஒரு ஆரோக்கிய ஸ்தலத்திற்குச் செல்லவேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை அளித்தார்கள்.

உவைட்டிலி அத்தியட்சரவர்களுடைய மகள் மூலமாக எனது பூர்வ வரலாற்றை அறிந்த ஷான்பீ துரையவர்கள் கல்கத்தா அத்தியட்சருக்கு எனது சுகவீன நிலைமையைக் குறித்து எழுதி என்னை உடனே ஒரு ஆரோக்கியமான இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு விண்ணப்பித்திருந்தார். ஆனால், அப்பொழுது சுந்தரவனத்திலுள்ள ஒரு இடத்தைத் தவிர, வேறெங்கும் வேலை காலியாயிருக்கவில்லை. ஆனால் அந்த இடமோ, அதிக மலேரியா காய்ச்சல் உள்ள இடம். ஆகவே அங்குச் செல்லமுடியாதபடியால் எனது வேலையை இராஜினுமா செய்ய நேரிட்டது. பீஹாரிலுள்ள அர்ரா என்ற ஆரோக்கிய ஸ்தலத்திற்கு இந்த இரு நண்பர்களும் என்னை அனுப்பி வைத்தார்கள். பிரயாணத்திற்குரிய செலவையெல்லாம் அவர்களே அன்புடன் கொடுத்துதவினுர்கள். எனது சொற்ப தட்டுமுட்டு சாமான்களையும் அவர்கள் நல்ல விலைக்கு விற்று, அதன் விளைவாக என் மனைவியிடம் 150 ரூபாய் கொடுத்தார்கள். இந்த இரு நண்பர்களும், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியரும், எங்களுக்கு இந்த ஆபத்துக் காலத்தில் செய்துள்ள இந்த உதவியை நாங்கள் ஒருக்காலும் மறக்கவே முடியாது. "காலத்தினுல் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிதன்ரே!"

அர்ரா என்ற ஆரோக்கிய ஸ்தல வாசத்தினுல் எனக்கு விரைவில் நல்ல சுகம் ஏற்பட்டது. இங்குத் தங்கியிருந்த காலத்தில் ஏற்பட்டுள்ள எல்லாச் செலவுகளையும் மீண்டும்

அந்த இரு நண்பர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். எனக்கு நல்ல சுகம் கிடைத்ததும் ஆண்டவர் ஆச்சரியமாக எனக்குஇரயில்வேயில் நல்லதொருவேலை கிடைக்கக் கிருபை செய்தார். திருமதி ஷான்பீ மூலமாக எனது துயர நிலையை அறிந்த இரயில்வே அதிகாரியான ஜுவல்துரை இரயில்வே கணக்கு இலாகாவில் எனக்கொரு நல்ல உத்தியோகம் கொடுத்தார். அதன் பின்னர் நான் கயாவிலுள்ள இரயில்வே நிலையத்திற்கு இதைவிட ஓர் உயர்ந்த பதவிக்கு மாற்றப்பட்டேன். கயாவிலுள்ள ரேவன்ஸ்காப்ட் துரையவர்கள் எனக்குப் பெரிதும் உதவியாயிருந்து என்னை அருமையாக நடத்தி வந்தார்கள். டெல்லி தர்பாரின் நிமித்தம் இரயில்வேயில் அதிக வேலை இருந்தபொழுதிலும், அந்த கிறிஸ்தவ அன்பு படைத்த துரை அவர்களின் பெருந்தன்மையால் எனது கடமையைச் சரிவர நிறைவேற்றி வந்தேன். கர்த்தர் எனக்கு மிகவும் நல்லவராய் இருந்து சமயத்திற்கேற்ற உதவிகளை அதிசயமாக அருளிச் செய்து கொண்டே வந்திருக்கிறார்.

1903 மார்ச் மாதத்தில் எனது தந்தையார் மரணப் படுக்கையில் இருப்பதாகக் கல்கத்தாவிலிருந்து எனக்குச் செய்தி கிடைத்தது. எனது தாயாரும் உறவினரும், நான் உடனே வந்து, எனது தகப்பனாரைப் பார்த்துக் கடைசி முறையாகவேனும் அவரைச் சமாதானப் படுத்தும்படியாக எனக்கு எழுதியிருந்தார்கள். இதையறிந்து எனது தலைவர் நான் வீட்டிற்குப் போய் வருமாறு விடுமுறை கொடுத்தருளினார். எனது மனைவியைத் தனிமையாக அயலகத்தாருடைய ஆதரவில் விட்டு விட்டு, நான் கல்கத்தாவிற்கு விரைந்து சென்றேன். நான் வீட்டிற்குள் நுழைந்ததும் எனது தகப்பனார் இருக்கும் அறையைத் தேடிச் சென்றேன். மருத்துவர்கள் அங்குக் குழுமியிருந்தார்கள். எனது தந்தையார் என்னைப் பார்த்த உடனே தனது முகத்தைத் திருப்பிக்

கொண்டு "இவனை யார் இங்கு வரச்சொன்னது?" என்று சினந்து கூறினர்.

குழுமியிருந்த வைத்தியர்கள் ஒருவரை ஒருவர் கலந்து, கடைசியில் எனது தகப்பனருக்குச் சுகம் கிடைக்க வேண்டுமானல், அவர் கங்கா நதியில் ஒரு படவுதனில் சில நாள் வசிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அப் படகு கல்கத்தாவை விட்டு 25 மைலுக்கு அப்பால் போகக்கூடாது என்றும் கூறினர். ஆங்காங்கு இருகரைகளிலேயும் இதற்கென்று வைத்தியர்கள் வைக்கப்பட்டனர். அவர்கள் தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் இப்பிணியாளியைப் பரிசோதித்து தக்க சிகிச்சை செய்யவேண்டும். எனது தாயாரும் வேலைக்காரர்களும் எனது தந்தையாருக்குதவியாகப் படகில் செல்வதோடு, வேறு எந்த ஆண்மகனைக் கூட அழைத்துச் செல்வது என்ற பிரச்சினை எழுந்தது. எனது இரு தம்பியாரும் அப்பொழுது பல்கலைப் பட்டப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு என் தந்தையாரோடுகூடப் படகில் செல்லமுடியாது போயிற்று. ஆகவே உதவிக்கு என்னை அவர்களுடன்கூட அழைத்துச் செல்வதற்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முதல் நாளில் எனது தந்தையார் என்னிடம் முகங்கொடுத்துப் பேசவில்லை. ஆனால் நான் அதற்காகக் கவலை கொள்ளாது அல்லும் பகலும் அயராது என் தந்தையாருக்கு அன்போடு பணிவிடை செய்துவந்தேன். எனது அன்பும் மரியாதையும் கலந்த தியாகத் தொண்டுதனைக் கண்ட என் தந்தையாரின் நெஞ்சம் இறுதியில் இளக ஆரம்பித்தது.

நான் அவருக்குப் பரிவுடன் ஆற்றிய பணியை உள்ளக் கனிவோடு மெச்சிக் கொண்டார். என்ன இருந்தாலும் அவர் என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தந்தை அல்லவா? இதற்கிடையில் அவர் படகுப் பிரயாணத்தின் முதல் வாரத்

தில் கடுமையாக வியாதி முற்றவே, அவர் இறந்தே போவார் என்றும் நினைத்தோம். எனினும் அப்பொழுது அவர் ஆச்சரியமான பிரகாரம் பிழைத்துக் கொண்டார். 15ம் நாள் அதிகாலையில் எனது தந்தையார் என்னை அருமையாகத் தமது அறைக்குள் அழைத்து, நான் கடவுளுக்குப் பயந்து நல்ல புனித வாழ்க்கை ஆற்றவேண்டும் என்று கனிவோடு கேட்டுக் கொண்டார். எனது தாயாரை அழைத்து, நான் எனது மனைவியைக் கயாவில் தன்னந் தனிமையாக விட்டு வந்தபடியாலும், எனது விடுமுறை இதற்குள் முடிந்து போயிருக்கும் ஆதலாலும், என்னை உடனே கயாவுக்கு அனுப்பி வைக்குமாறு பணித்தார். எனது செலவுக்கும் வெகுமதியாக எனது மனைவிக்கும் போதிய பணம் கொடுத்தனுப்புமாறும் சொன்னார். நான் சென்ற பிறகு ஒரு மாதக் காலத்திற்குள் எனது தந்தையார் காலமாகி விட்டார். அவர் கல்கத்தாவில் இறந்த அன்று நடுநிசியில் எனக்குத் தரிசனம் தந்தார். அவரது ஆவியை அலுவலக ஆடையோடு நான் தத்ரூபமாகக் கண்டேன். அந்த நடுச் சாமத்தில் எனது பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த எனது மனைவியை எழுப்பி, எனது தந்தையார் இறந்துவிட்டார் என்றுரைத்தேன். காலையில் தந்தியும் வந்தது, நடுச்சாமத்தில் எனது தந்தையார் இறந்துவிட்டதாக. எனது தந்தையாருக்கு அவரது இறுதிக் காலத்தில் என்னால் இயன்ற அன்புச் சேவையாற்ற அரியதோர் வாய்ப்பளித்த ஆண்டவரை நான் நன்றியோடு போற்றித் துதிக்கின்றேன்!

எனது தகப்பனார் இறந்த பின்னர் எனது தாயாரை மீண்டும் ஒரு தடவை போய்ப் பார்த்தேன். எனது தாயார் தான் விதவையானதற்காகத் தனது தலைவிதியை நொந்து கொண்டார். நான் முற்பிறவியில் என்ன அநியாயம் செய்தேனோ, அதற்காக இப்பிறவியில் இவ்வாறு விதவையாகஅழுந்த வேண்டியது இருக்கிறது என்று அலமறித்தார்

கள். அவர்களது அங்கலாய்ப்பையும் அழுகையையும் கண்ட நான் அவர்களைத் தேற்ற ஆரம்பித்தேன். கடவுள் நம்மிடம் அதிக அக்கறை கொண்டவர் என்றும், அவர் நம்மிடம் மிகவும் அன்பு கொண்டவர் என்றும், அவர் நமக்கு நன்மையையே வழங்குகிறவர் என்றும் சொன்னேன். ஆம்! கடவுள் மிகவும் நல்லவர், கருணை காட்டுகிறவர், கிருபை பொழிகிறவர். நமது கவலை, கண்ணீரைப் போக்குகிறவர். அவரை நம்புகிறவர்களுக்கு என்றும் சாந்தியே கிட்டும் என்று எனது தாயாரை ஆறுதல் படுத்தினேன். கிறிஸ்து பகவான் நமக்காகச் சிலுவையில் தமது ஆருயிரையே கொடுத்து நமக்கு ஈடேற்றமும் பேரின்பமும் சம்பாதித்துள்ளார் என்று செப்பினேன். இதைக் கேட்டதும் எனது தாயார் மனம் வெம்பி, நான் கிறிஸ்தவன் ஆனதற்குக் காரணமே எனது தாயார்தான் என்று தன்னையே பழித்துக்கூறி, பின்வரும் வரலாற்றை விம்மி விம்மிச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

முதலாவது அவர்கள் தனது நகைப் பெட்டியைக் கொணர்ந்து அதற்குள் இரகசியமாக ஒரு பட்டுக் கைக்குட்டையில் பொன்போல் கவனமாகச் சுற்றி வைத்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்து, என் கையில் தந்தார்கள். அது லூக்கா எழுதின சுவிசேஷப் புத்தகம். இச்சுவிசேஷத்தை எனது தாயார் ஒரு மிஷினரி அம்மாவிடமிருந்து ஒரு பைசா கொடுத்து வாங்கினதாகவும், எனது தகப்பனார் பகல் வேளையில் அலுவலகத்தில் இருக்கும் நேரத்தில் அம் மிஷினரி அம்மையாருடன் இச்சுவிசேஷப் புத்தகத்தைத் தான் ஒழுங்காக வாசித்து வந்ததாகவும், சொன்னார்கள். இயேசு நாதருடைய புனித வாழ்க்கை என் தாயார் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டது. அப்பொழுதுதான், நான் கருவுற்றிருந்ததாகவும், தனது வயிற்றில் உருவாகி வரும் சிசுவும் கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டும் என்றும்

எனது தாயார் ஆசித்தார்கள். அதன் பயனுகவே நான் கிறிஸ்தவனுக மாறிவிட்டதாக எனது தாயார் சொன்னுர்கள்.

நெருப்பை மடியில் கட்டி வைத்திருக்க முடியுமா? கிறிஸ்துவைக் கொண்டவர்கள் அவரைத் தங்கள் இருதயத்திற்குள்ளே அடக்கி வைத்திருக்க முடியுமா ? யார் ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் பேரின்பமாகக் கண்டார்களோ, அவர்களெல்லாம் தாங்கள் பெற்ற பேரின்பத்தை இவ் வையகமும் பெறுமாறு அதனை வாரி வாரி வழங்கி வருகின்றனர். ஆம்! சுவிசேஷத்தை நான் பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ! பரலோக இராஜ்ஜியம் புளித்த மாவைப் போல் இரகசியமாக உலகம் எங்கணும் பரவி வருகின்றது அல்லவா ?

1904-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலே கயாவில் பயங்கரமான பிளேக் நோய் அப் பிராந்தியமெங்கும் பரவிச் சென்றது. கயாவில் நாள்தோறும் மக்கள் நூற்றுக் கணக்காக இறந்துவிட்டனர். இத் தொத்து நோயின் காரணமாக அவ்வட்டாரத்தின் மக்கள் தங்கள் வீடு வாசல்களையெல்லாம் விட்டு விட்டு வயல்களிலும், மரங்களுக்கு அடியிலும் கூடாரம் அடித்துக் குடியேற ஆரம்பித்தார்கள். எனது மனைவிக்கும் இத்தொத்து நோய் தொத்திக் கொண்டது. பெரும் பாடுபட்டாள் அவள். இந்நோயினின்று அவள் உயிர் பிழைத்ததே தேவ கிருபை என்று தான கூறவேண்டும். ஆம்! ஆண்டவர் உயிர்ப்பிச்சை கொடுத்தார் என் மனைவிக்கு. அவருக்கே நன்றி, வணக்கம்.

எனது மனைவி மீண்டும் பலம் அடைந்து வருங்கால் எனக்குப் பழைய மலேரியா காய்ச்சல் வந்துவிட்டது. எங்கள் அவலநிலையை அறிந்த எனது தாயார் என்னை உடனே

இவ்வேலையை விட்டு விட்டு வேறொரு சுகமான இடத்திற்குச் செல்லுமாறு கடிதத்திற்குமேல் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள். தொத்து வியாதியோ இன்னும் நின்றபாடில்லை. ஆகவே, நான் தற்காலிகமாக இவ்வேலையை விட்டுவிட்டு, **அர்ராவில்** எங்களை ஆதரித்த திருமதி மஜூம்தார் இப்பொழுது குடியிருந்த ஆரோக்கிய ஸ்தலமான **வைத்தியனுத்** நகர் சென்றோம். பின்னர் அடுத்துள்ள சிறந்த ஆரோக்கிய ஸ்தலமான **மதும்பூர்** சென்று, எனது தாயாரின் தூண்டுதலின் பேரில் அங்குள்ள ஒரு சிறு பங்களாவை விலைக்கு வாங்கிக்கொண்டு அங்கு வசித்து வந்தோம். இரண்டாண்டுக் காலமாக நான் மலேரியாக் காய்ச்சலால் மீண்டும் மீண்டும் அவதியுற்றபின் நல்ல சுகம் பெற்றேன்.

எனது தாயார் எனது புதிய பங்களாவில் பால் பண்ணை வைத்துக்கொள்ளவும், வசதியாகக் கட்டடம் கட்டிக்கொள்ளவும் மகிழ்ச்சியோடு பணவுதவி செய்தார்கள். சில வீடுகள் கட்டிப் பால் பண்ணை வைத்துக்கொண்டு, சில ஆண்டுகளாக மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தோம். கல்கத்தாவிலிருந்து ஆரோக்கியத்திற்காக, இந்த இடத்திற்கு வந்த அநேகப் பெரிய பிரமுகர்களோடு எங்களுக்குப் பழக்கம் ஏற்பட வாய்ப்புக் கிட்டியது. இப்பழக்கம், பின்னர் நான் கல்கத்தாவில் ஆரம்பித்த மருத்துவக் கிறிஸ்தவத் தொண்டிற்குப் பெரிதும் உதவியாய் இருந்தது.

மதுப்பூரில் சுகாதாரத்தை விருத்தி செய்வதற்காக பல பல ஆக்க வேலைகளில் முனைந்து நின்றேன். தெருச் சுத்தம், தெருக்களில் விளக்கேற்றல், நகரச்சுத்தி போன்ற சுகாதார வசதிகளைக் கவனிப்பதற்கு ஒரு சுகாதாரக் குழு அமைத்து அதற்கு நானே காரியதரிசியாகவும் செயலாற்றி வந்தேன். அரசாங்கத்தின் கவனத்தை இழுக்கக்கூடிய

அளவுக்கு மதுபுரியை மதுரமான சுகாதார நகரமாக்கி னேன். 1908ஆம் ஆண்டில் எனது மூத்த மகன் கால மானான். இப்பொழுது மீண்டும் கிறிஸ்தவக் குருத்துவ வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று ரிச்சர்ட் ஷீ ஐயரவர் களும் இ. உவைட்டிலி ஐயரவர்களும் என்னைத் தூண்டிக் கொண்டே இருந்தார்கள்.

1910ஆம் ஆண்டில் அநேக மிஷினெரிமார் வேளா வேளைகளில் ஆரோக்கிய ஸ்தலமான மதுப்பூரில் கூடி, ஜெபித்து எழுப்புதல் கூட்டம் நடத்தி வந்தார்கள். அவர் களுள் ஒருவர் சி.எம்.எஸ். சங்கத்தைச் சேர்ந்த மக்டவ்கால் துரையாவார். அவரது உதவியால் நான் கல்கத்தாவி லுள்ள ஒய். எம். சி. ஏ.க்கு அறிமுகமானேன். அப்பொ ழுது அவர்களுக்கு ஒரு காரியதரிசி வேண்டியதிருந்தது. இதற்கு முன்னர் புதிதாகக் கிறிஸ்தவச் சமயத்தைத் தழு வின பி.சி. நாஷ் ஐயரவர்களும், பி. ஸி. சர்கார் ஐயரவர் களும் அதற்குச் செயலாளர்களாகப் பணியாற்றியுள்ளார் கள். மூன்றாவதாக நான் போய்ச் சேர்ந்தேன். ஒய். எம். சி. ஏ. மூலமாகக் கிறிஸ்துவுக்குத் தொண்டாற்றச் சிறந்த தோர் வாய்ப்புக் கிடைத்தது.

அதிகாரம் 3

கிறிஸ்தவ வாலிபர் சங்கச் சேவை

மதுப்பூரிலிருந்து எனது மனைவியைக் கல்கத்தாவிற்கு அழைத்து வருமுன் நாங்கள் வசிப்பதற்குக் கல்கத்தாவில் ஒரு வாடகை வீடு பார்க்க வேண்டியதாயிருந்தது. ஒரு நல்ல வீடு பார்ப்பதென்றால் அப்பொழுது அதிகக் கடினமாயிருந்தது. அவ்வீடு சுமாரான வாடகையுள்ள தாயும் ஒய். எம். சி. ஏ. க்கு அருகில் உள்ளதாயும் இருக்க வேண்டும். இத்தகையதோர் வாடகை வீடு கண்டுபிடிப்ப தில் எனக்கு மெத்தவும் ஒத்தாசை செய்தவர் எனது ஆரம் பப்பள்ளித் தோழரான திரு. கிரான் சந்திரகோஷ் ஆவார். நாங்கள் இருவரும் ஒரு இந்து தொடக்கப் பள்ளியில் இள மையில் ஒன்றாகக் கற்றோம். இப்பள்ளியில் நாங்கள் கையால் முடையப்பெற்ற பாய்களில் அமர்ந்து, ஏடு எழுத் தாணி கொண்டு எழுதிவந்தோம். குருவுக்குச் செய்யவேண் டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்து வந்தோம். சில வேளைகளில் குருவின் துணிகளைத் துவைத்து, வீட்டு வேலை செய்து, பள்ளிக்கூடம் பெருக்கி, பிற பணிகளையும் புரிந்துவருவோம். இப்பொழுது நான் திரு. கிரான் அவர் களைச் சந்தித்தபொழுது அவர் கல்கத்தா பல்கலைக் கழக எம். ஏ. பட்டதாரியாக இருந்தார். இசைக் கருவிகள் செய்து ஏற்றுமதி செய்யும் நிலையத்திற்கு அவர் உரிமையா ளராகவும் இயக்குனராகவும் பணியாற்றி வந்தார். நீண்ட காலத்திற்குப்பின்னர் மீண்டும் சந்தித்த நாங்கள் பெரிதும் உவகை கொண்டோம். தான் தங்கும் வீட்டருகேயுள்ள கிரிக் வரிசையில் எனக்கோர் வாடகை வீடு அமர்த்த அவர் பெரும்பாடுபட்டார். நான் அவர் வீட்டருகே குடியிருப்பதற் குக் களிப்புற்றேன். அவர் 1944ம் ஆண்டு மரணமாகும்

வரை எங்கள் இடையேயுள்ள நட்புறவு வளர்ந்து கொண்டே போனது.

கல்கத்தா வேலையைப் பற்றியும், கல்கத்தாவில் குடியிருப்பது பற்றியும், அப்பொழுது மதுப்பூரில் இருந்த எனது மனைவியிடம் கூறியபொழுது, அவள் பெரிதும் திகைத்துவிட்டாள். அவள் இச்செய்தி கேட்டதும் அழ ஆரம்பித்தாள். அவள் இவ்வளவு கலக்கம் வாழ்க்கையில் ஒருக்காலும் அடைந்ததில்லை. அவளுக்குத் தோட்டம் என்றால் அவ்வளவு பிரியம். ரோஜா செடி போன்ற பூஞ்செடிகள் வளர்ப்பதில் அவளுக்கு நிகர் அவ்வட்டாரத்தில் யாருமே இல்லையென்று கூறுவர். கோழிப்பண்ணை, பசுமாட்டுப் பண்ணை வளர்ப்பதில் ஈடு இணையற்றவள். பண்ணையிலுள்ள எல்லா மிருகங்களையும் அவள் அருமையாக நேசித்து அவற்றைச் செல்லமாகப் பெயர் சொல்லி அழைப்பதுண்டு. அப்பக்கத்திலுள்ள கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவரும் எம்மில்லத்திற்கு அன்போடு அடிக்கடி வந்து போவதுண்டு. மிஷனெரி மார்களும், எங்கள் வீட்டிற்கு வருவர். விருந்தினரை உபசரிப்பதில் ஒப்பற்றவள் என் மனைவியார். அன்புற்று, இன்புற்று நாற்பத்து நான்கு ஆண்டுகள் இல்லற வாழ்க்கை நடாத்தியுள்ளோம். அதிக அன்பு படைத்த மனைவி அவள். என் வாழ்க்கை முழுவதும் அவள் மாசிறந்த மாண்புமிக்க மனைவியாகவே திகழ்ந்தாள்.
மதுப்பூரிலிருந்து கல்கத்தாவில் குடியேறினோம். ஆண்டுக்கு ஒரு அல்லது இரு தடவைகளில் விடுமுறை காலத்தில் நாங்கள் மதுப்பூருக்குச் சென்று வருவது வழக்கம்.

நாங்கள் கல்கத்தாவுக்கு வந்தபொழுது நண்பர் கிரானும் அவரது மனைவியாரும் எங்களை மனமுவந்து வரவேற்று உபசரித்தார்கள். நாங்கள் வசித்த அதே தெருவில்

1911ம் ஆண்டிலே கனம் எல். ஜி. முகர்ஜி ஐயரவர்களும் குடியிருந்தார்கள். அவர்கள் வங்காளக் கவர்னர் டாக்டர் எச். சி. முகர்ஜி அவர்களுடைய மருமகன் ஆவார். இவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர்கள் சிறந்த தியாக சீலர்கள். நற்பண்பு படைத்த நல்லவர்கள். அவர்கள் எனக்கும் என் மனைவிக்கும் உறு துணையாக இருந்தார்கள். இந்த நட்புறவுக்காக நான் இறைவனுக்கு என் இதயமார நன்றிகூருகின்றேன்.

ஒய். எம். சி. ஏ. கல்லூரி கிளைத்துறையில் தொண்டாற்றும் பொருட்டு, நான் ஓவர்டும் மண்டபம் சென்றேன். "ஜெபத்தின் ஆற்றலால் வாங்கப்பட்டது" என்று, அதன் சுவரிலே தீட்டப்பெற்றிருந்த வாசகம் எனது கண்ணையும் கருத்தையும், ஒருங்கே கவர்ந்தது. விசுவாசமுள்ள ஜெபம் அரியபெரிய காரியங்களையெல்லாம் சாதித்துவிடும் என்பதை அதன்வாயிலாக அறிந்தேன். கிறிஸ்தவ வாலிபச் சங்கத்தை நிறுவியவர் சென்ற அடிச்சுவட்டிலே நானும் செல்வதற்கு ஆசைப்பட்டேன். மாணவர்களுக்கு விசுவாச ஜெபத்தோடு நான் ஆற்றப் போகும் பணி பெரிதும் நன்மை விளைவிக்க வேண்டுமென்று ஜெபித்தேன். ஜெபமே இத்துறையில் ஜெயம் கொணரும் என்று விசுவாசித்தேன். இயேசுவின் புனித நாமத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபம் எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்து விடுகின்றது!

பல்கலைக் கழக மாணவர்களிடையே பணியாற்ற முனைந்தேன். வாலிபச் சங்கக் கட்டடம் பல கல்லூரிகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது. கட்டடத்தில் ஒரு பெரிய நூலகம், படிப்பகம் உண்டு. உள்ளே விளையாடுவதற்குரிய வசதிகளும் உண்டு. மாணவர்களுக்குக் கவர்ச்சியூட்டும் பல அம்சங்கள் இங்குண்டு. மாதந்தோறும் சமூக நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்று வந்தன. மாணவர்கள்

தங்குவதற்கென்று ஒரு விடுதியும் இங்கு இருந்தது. இவ் விடுதியில் தங்கிப் படித்து முன்னேறியவர்களுள் தற்பொழுது வங்காள முதலமைச்சராக இருக்கும் டாக்டர் பி.சி. இராயும் ஒருவராவர். வேதாகம வகுப்புகளும் சுவிசேஷக் கூட்டங்களும் மாணவர்களிடையே ஒழுங்காக நிகழ்ந்துவர ஏற்பாடு செய்தோம்.

திருப்பவுல் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் திரு. பீன், திரு. ஆர்போர்ட் போன்றவர்களும் சங்கீதத் துறையில் பெரிதும் பங்கெடுத்துக் கொள்வர். ஞாயிற்றுக்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் நடைபெற்ற திறந்த வெளிக் கூட்டங்களிலும் அநேகரோடு பழகி, அவர்கள் ஒழுங்காக வேதாகம வகுப்பில் கலந்துகொள்ளுமாறு செய்தோம். நான் மாணவர்கள் வசித்த விடுதிகளுக்குச் சென்று அவர்களோடு பழகி, அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்துவைத்தேன்.

அக்காலத்தில் கல்லூரிகளில் மாணவர்களுக்கேற்ற விடுதி வசதிகள் அதிகம் இருந்ததில்லை. அவர்களுக்குப் போதிய விடுதிகள் கல்லூரியை அடுத்து இல்லாதபடியால், பட்டணங்களின் மத்தியிலுள்ள தங்குமிடங்களில் அவர்கள் வசிக்க நேரிட்டது. பட்டணத்தில் வேலை பார்த்த குமாஸ்தாக்களோடும் பிற சிப்பந்திகளோடும் அவர்கள் வாழ நேரிட்டது. சோதனைக்கு இடமான சூழ்நிலையில் அவர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலை வருந்தத்தக்கதாயிருந்தது. இந்த அவல நிலைமை பற்றி கல்வி இலாகா தலைவருக்கு எழுதலானேன். எனது முயற்சி வீண்போகவில்லை. சீக்கிரத்தில் ஒரு விழிப்பு ஏற்பட்டது. அரசாங்கத்தின் உதவியால் கல்விச் சாலை அதிபர்கள் விடுதிகள் பல கட்ட ஆரம்பித்தனர்.

கல்லூரி மாணவர்கள் நடன மாதரின் இசை இன்பத்தால் இழுக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து, அதற்கு

மாற்று மருந்தாக கிறிஸ்தவ பேரின்ப இசையமுது வழங்க ஒழுங்கு செய்தேன். பட்டணத்திலுள்ள ஒரு தலை சிறந்த சங்கீத வித்வானைக்கொண்டு ஒய். எம். சி. ஏ. கல்லூரி கிளை நிலையத்தில் இசை வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்தேன். மாணவர் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பான் வேண்டி, அநேக விவாதச் சொற்பொழிவுகள் நடைபெறுமாறு செய்தேன். சமூகப்பிரச்சினைகள், முன்னேற்ற இலட்சியங்கள், இலக்கிய ஆராய்ச்சிகள் போன்ற பற்பல துறைகளிலும் மாணவர்கள் சொற்பொழிவுகள் செய்ய ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில் இடம் அளிக்கப்பட்டது. மேற்கு வங்காள கவர்னரான டாக்டர் எச். சி. முகர்ஜீ போன்ற பல பெரியார்கள் இத்தகைய சொற்பொழிவு அரங்கத்தில் தலைமை தாங்கியுள்ளார்கள்.

எங்கள் காலத்தில் ஒய். எம். சி. ஏ. ஒரு சிறந்த நற்செய்தி இயக்கமாகச் செயலாற்றி வந்தது. மாணவர்களுடைய உடல், உள்ளம், இதயம் ஆகியவற்றின் நல்வளர்ச்சிக்கென்று நற்பணி ஆற்றிவந்தது. சுவிசேஷச் செய்தியைத் தெருவெல்லாம் முழக்கி வந்தது. பட்டணத்திலுள்ள பல பிரமுகர்களும், இந்த அதி உன்னதப் பணியில் மகிழ்ச்சியோடு கலந்துகொண்டனர். பரிசுத்த ஆவியானவர் இந்நாட்களில் அதிவல்லமையாய்க் கிரியை செய்து வந்தார். அநேகர் மனம் திரும்பினர். கிறிஸ்துவைத் தங்கள் நாயகராக ஏற்றுக்கொண்டார்கள். தங்கள் பழைய அசுத்த வாழ்க்கையை விட்டுவிட்டு இப்பொழுது கிறிஸ்துவுக்குள் தூய வாழ்க்கையாற்றஆரம்பித்தார்கள். புதிதாய் மனந்திரும்பியவர்களின் அனுப சாட்சி மிக எழுப்புதலாய் இருந்தது. அவர்களுடைய வாழ்க்கைத் திருப்பத்தையும், புனித கிறிஸ்தவ வாழ்க்கையையும் கண்டு இன்னும் அநேகர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆத்தும ஆதாயத்தால் வரும் பேரானந்தத்தை நானும் எனது மனைவியும் ருசித்து, ரசித்து இன்

புற்றேம். எனது மனைவியின் அன்பு கலந்த உபசாரத்தால் அநேக மாணவர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஏவப்பட்டார்கள். எங்கள் வீடு அவர்கள் சொந்த வீடுபோல் கருதப்பட்டது. நாங்கள் இல்லாத நேரத்திலும் அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து வேலைக்காரர்கள் மூலமாய் தேநீர், சிற்றுண்டி, உணவு உண்டு போகத் தயங்கமாட்டார்கள்.

ஒரு கோடை கால விடுமுறையில் நானும் எனது மனைவியும் ஷில்லாங் செல்லத் தீர்மானித்தோம். இதனை அறிந்த அஸ்ஸாம் மாணவர்கள் நாங்கள் வழியில் அவர்களுடைய பட்டணமாகிய கௌகாத்தியில் இறங்கிச் செல்ல வேண்டுமென்று, எங்களைப் பரிவோடு வேண்டிக் கொண்டார்கள். நாங்கள் வழியில் அப்பட்டணத்துப் புகை வண்டி நிலையத்தில் இறங்கியபொழுது அம்மாணவர்கள் குதிரை வண்டியுடன் எங்களை அழைத்துச் செல்லத் தயாராக நின்றனர். நாங்கள் குதிரை வண்டி ஏறியதும் அம்மாணவர்கள் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, தாங்களே அவ்வண்டியை இழுத்துச் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அவ்வாறு செய்யவேண்டாம் என்று நாங்கள் எவ்வளவோ மறுத்து உரைத்தும் அவர்கள் கேட்டபாடில்லை. ஒரே ஆரவாரம்! நான் உடனே வண்டியினின்று குதித்துவிட்டேன். குதித்த வேகத்தில் எனது முட்டுக்குச் சேதம் ஏற்பட்டது. எனது மனைவியையோ அவர்கள் கீழே இறங்க விட்டார்களில்லை. மாணவர்களே வண்டியைக் குசாலாக இழுத்துச் சென்று எங்களைக் கௌகாத்தி தாக்பங்களாவில் சேர்த்தார்கள். கனிவோடு எங்களை இரு நாட்கள் உபசரித்தார்கள். அவர்களது நன்றி கலந்த அன்பை நாங்கள் ஒருக்காலும் மறக்கமுடியாது. பின்னர் எங்களை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றி ஷில்லாங்கில் சேர்த்தார்கள். மாணவர்களின் மாண்புமிக்க அன்புதான் என்னே! என்னே!!

இவ்வாறு நான் ஒய். எம். சி. ஏ.யில் தொண்டாற்றி வருங்கால் முதலாம் உலகயுத்தம் ஆரம்பமானது. இச்சங்கத்தின் காரியதரிசிகள் பல இடங்களுக்குச் சென்று பணி புரிய வழிபிறந்தது. மொசப்பட்டோமியா, பிரான்ஸ் முதலிய நாடு சென்று சேவை செய்யுமாறு எனக்கும் அழைப்புக் கிட்டியது. ஆனால், எனது மனைவியின் சுகவீனத்தின் நிமித்தம் நான் வெளிநாடு செல்லமுடியாது போய் விட்டது.

இக்காலத்தில் இந்தியா, இலங்கை வாலிபர் கிறிஸ்தவ சங்கங்களின் தேசீய மன்றம் கல்கத்தா ரஸல் தெருவில் தனது தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்தியது. திரு. கார்ட்டன் என்பாரும் திரு. கே.றி. பால் என்பாரும்அதன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டனர். இராஜப் பிரதிநிதியான கார்டிஞ்சு பிரபு அதன் காவலராக இருந்தார். பொதுச் செயலாளர்கள் மகத்தான சேவையாற்றினர்கள். அவர்கள் சென்றவிடமெல்லாம் வாலிபர்கள் செம்மையுற்றார்கள். காந்தம் இரும்பை இழுத்துக்கொள்வதுபோல் அவர்கள் மாணவர்களையும், வாலிபர்களையும் தங்கள் பிரசங்கத்தாலும் நடத்தையாலும் இழுத்துக்கொண்டார்கள். கிறிஸ்துவின் நாமம் எங்கும் மகிமைப்பட்டது,

அமெரிக்கா இங்கிலாந்து மிஷனெரி செயலாளர்களோடு நான் ஒத்துழைத்து வந்ததால் பெற்ற நன்மைகளை நான் இங்கு ஞாபகப்படுத்தாமல் இருக்கமுடியாது. அக்காரியதரிசிகளின் இல்லங்களில் முறைவைத்து ஜெபக் கூட்டங்கள் வைப்பது வழக்கம். அப்பொழுது முன்னேற்ற ஆக்க வேலைகளுக்கான ஆலோசனைகள் செய்வது பழக்கம். இவைகள் எனக்குப் பெரும் உதவியாயிருந்தன. இக்கிறிஸ்தவ ஐக்கியத்தால் பெரும் ஊக்கமும் எழுப்புதலும் பெற்றேன். எனது மனைவி கிறிஸ்தவ சேவையில் ஈடுபடுவதற்

குத் தூண்டப்பெற்ருர். திருமதி ஸலாக் அம்மையாரோடு சேர்ந்து மாதர் கிறிஸ்தவச் சங்கத்தில் எனது மனைவி பணிபுரிந்து வந்தாள். செஞ்சிலுவைச் சங்கத்திலும் எனது துணைவியார் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

எனது ஒய். எம். சி. ஏ. ஊழியத்தின்போது ஒரு சோகமான விபத்து நேரிட்டது. சிப்பூர் அருகேயுள்ள ஹூக்ளி யாற்றில் ஏற்பட்ட படகுவிபத்தைப் பற்றி நான்அதிக துயரத்தோடு கூருமல் இருக்கமுடியாது. 1912ம் ஆண்டு நவம்பர் மாதம் பூஜா விடுமுறையில் இந்தப் பயங்கரமான விபத்து ஏற்பட்டது. நீராவிப் படகில் சுமார் இருநூறு மாணவர்களோடு ஒய். எம். சி. ஏ. சார்பில் நந்தவனத்திற்கு உல்லாசப் பயணம் சென்றோம். நந்தவனம் முழுவதும் கோலாகலக் காட்சியாய்த் திகழ்ந்தது. பகல் முழுவதும் வேடிக்கை விளையாட்டுகளிலும் உல்லாசமாக உண்டு களிப்பதிலும் செலவிட்டு விட்டு, மாலை கல்கத்தா மீள்வதற்கு நீராவிப் படவிற்குச் சென்றோம். அப்பொழுது கடல் நீர் இறங்கு காலமாய் இருந்தபடியால் ஹூக்ளியில் நீர் சுருங்கிவிட்டது. தண்ணீர் வற்றிவிடவே நீராவிக் கப்பலில் பயணம் செய்ய முடியாமல் போய்விட்டது. ஆகவே ஒரு சிறு படகை அமர்த்திக்கொண்டு அதன் மூலம் முப்பது அல்லது முப்பத்தைந்து ஆட்களாகக் கரை சேர ஆரம்பித்தோம். நான்கு அல்லது ஐந்து பயணங்களுக்குப் பிறகு இருள்சூழ ஆரம்பித்துவிட்டது. இதுதான் கடைசி பயணம் என்று நீராவிப் படகுத் தலைவன் சத்தமிட்டுக் கூறினன். அநேகர் அதில் விரைந்து வந்து ஏறிக்கொண்டனர். நானும் அப்படவில் ஏறிக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டேன். அப்பொழுது கடலுக்குள் செல்ல விரைந்துகொண்டிருந்த ஒரு கப்பலால் ஏற்பட்ட ஒரு பெரிய அலை நாங்கள் ஏறியிருந்த படகை பயங்கரமான வேகத்தோடு மோதவே படகு பளிச்சென்று கவிழ்ந்துவிட்டது. அதில்

ஏறியிருந்த ஐம்பதிற்கும் மேலான பிரயாணிகள் தண்ணீ ரில் அமிழ்த்தப் பட்டார்கள். இச்செய்தி சிப்பூர் பொறியி யல் கல்லூரிக்கு எட்டவே அக்கல்லூரித் தலைவரும் பல மாணவரும் விரைந்து வந்து எங்களைக் கரை சேர்ப்பதற்கு ஆவன செய்தார்கள். எனினும் இருபது கல்லூரி மாணவர் கள் இப்பயங்கர படகு விபத்தில் உயிர் இழக்க நேரிட்டது. திரு. டிமிட்டிரிசின் இரு இளம்பெண் மக்கள் இவ்விபத் தில் ஆழ்ந்து போனார்கள். இரண்டு பேர் சாகும் தருவா யில் கரை சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் இருபேரும் உயிர் தப்பிக்கொண்டார்கள். அவர்களுள் ஒருவர் கல் கத்தா பல்கலைக் கழகத்து எம். ஏ. பட்டதாரியான மோனி குமார் முகர்ஜியாவர். இன்னொருவர், பின்னர் கல்கத்தா சுங்கவரி இலாகாவின் அதிகாரியான பிரபாத்குமார்கோஷ் ஆவார். தப்பிக் கரை சேர்ந்த நானும் பிறரும் சிப்பூர் கல் லூரி விடுதிக்குச் சென்று, உண்டு இளைப்பாறிய பின்னர், கல்கத்தா சென்று, இச்சோக கதையை இறந்துபோனவர் களின் உற்றார் உறவினருக்குத் தெரிவித்தோம். இத்திடுக் கிடும் சம்பவத்தை நான் இப்பொழுது நினைத்தால்கூட என் குலை நடுங்குகின்றது. என் மேனி அதிர்கின்றது. என் உள்ளம் குமுறுகின்றது. என் கண்ணில் நீர் வழிந்தோடு கின்றது. அந்தோ பரிதாபம்!

இப்படகு விபத்துக்குப் பின்னர் அரசாங்கம் விழித்துக் கொண்டது. ஒரு படகில் இத்தனைபேர் தான் செல்லவேண்டு மென்ற ஒழுங்குக் கட்டுப்பாடு ஏற்பட்டது. அதோடுகூட மாணவர்களுக்குக் கல்விச் சாலைகளில் நீந்தும் கலையும் கற் பிக்கப்பட்டது. ஆங்காங்குப் பலப்பல நீச்சல் குளங்கள் ஏற்பட்டன. நீச்சல் சங்கத்தார் இளைஞருக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தார்கள்.

இக்காலத்தில் அகில உலக ஓய். எம். சி. ஏ. குழுவின் பொதுச் செயலாளரான டாக்டர் ஜான் ஆர். மார்ட் என்ற

பக்தரும் அதன் துணைப்பொதுச் செயலாளர் டாக்டர் ஷெருட் எடி என்ற பக்தரும் இந்தியாவுக்கு இரு தடவை வந்து, பெரும் கிறிஸ்தவச் சேவைகள் செய்தார்கள். ஜார்ஜ் வில்லியம்ஸ் என்பவர் எவ்வாறு ஒய். எம். சி. ஏ. சங்கத்தை நிறுவினர் என்பதை விரிவாக எடுத்துரைத்தனர். டாக்டர் ஜான் ஆர். மார்ட் லண்டன்மாநகரிலே மத்தியான உணவு இடைவேளையில் சில கடைசிப் பந்திகளோடும் அலுவலகத் தொழிலாளர்களோடும் அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்பிறைபோல் வளர்ந்து, நாடெல்லாம் பரவி இப்பொழுது அகில உலகமெங்கும் நிறுவப்பட்டுள்ளது என்றூர். ஒய். எம். சி. ஏ. சங்கத்தில் நாம் என்ன நம்பிக்கை கொண்டுள்ளோம் என்ற கேள்விகேட்டு அதற்குத் தக்க விடையும் கூறினர் டாக்டர் மார்ட். இளைஞர்களையும், வாலிபர்களையும், மாணவர்களையும் எப்படி விழுங்கிப் போடலாம் என்று வகை தேடினவனுகச் சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் சுற்றிச் சுற்றித் திரியும் இக்காலத்தில் வாலிபர்களைச் சாத்தானின் வாயினின்று தப்புவிக்க வகைதேடுகின்றது ஒய். எம். சி. ஏ. சங்கம். வாலிபர்களது உடல், உள்ளம், இதயம் இவற்றின் பூரண வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றது இச் சங்கம். இயேசு கிறிஸ்துவண்டை வாலிபரை வழி நடத்தி, இயேசுவைப் போல் புனித வாழ்க்கையாற்ற வாலிபரை ஏவி எழுப்புகின்றது இச்சங்கம். எல்லா நாட்டவருக்கும், எல்லாச் சாதியினருக்கும் சேவையாற்ற விரும்புகின்றது இச்சங்கம். ஓய்வு நேரத்தைத் தூய வழிகளில் செலவழிக்க வாலிபர்களுக்கு உதவுகின்றது இச்சங்கம். வீட்டிற்கும் நாட்டிற்கும் திருச்சபைக்கும் சீரிய தொண்டாற்ற வாலிபரைத் தூண்டுகின்றது இச்சங்கம்.

இதன் தலைவராயிருக்க யார் தகுதியுள்ளவர் என்பதைப் பற்றி டாக்டர் மார்ட் அறை கூவிய அறிவுரை

இதுதான் :—ஒரு தலைவருக்குக் கிறிஸ்துவிடம் விசுவாசம் இருக்கவேண்டும். ஜெபத்தில் நம்பிக்கை இருக்கவேண்டும். தியாகச் சேவையில் சிரத்தையிருக்கவேண்டும். அவன் தன்னலங்கருதாப் பிறர்க்குரியவனாய் இருத்தல் வேண்டும். கைம்மாறு கருதாது பிறருக்குப் பணிசெய்து கிடப்பதையே தம்முடைய கடனாகக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். பிறரோடு ஒத்துழைக்கத் தெரிந்தவர்களாய் இருக்கவேண்டும். பிறரை மதித்து நடக்கிறவராய் இருத்தல் வேண்டும். முன்னேற்றத்தில் விருப்பம் கொண்ட மாணவராக எப்பொழுதும் கற்றுக்கொள்கிறவராக இருத்தல்வேண்டும். தன்னடக்கம், தன்னம்பிக்கை, சிறந்த ஒழுக்கச் சீலம் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவைகளெல்லாம் ஒரே நாளில் முளைத்துக் கனிந்துவிடக்கூடிய பண்புகளல்ல. பல பயிற்சிகளுக்குப் பின்னரே இப்பண்புகள் பழுத்து இலங்கும்!

மேலும் காரியதரிசிகளின் ஊக்கத்தைப் பெருக்குவான் வேண்டி, டாக்டர் மார்ட் தமது சுவிசேடப் பணியில் ஏற்பட்டுள்ள கனிகளைப் பற்றிக் கனிவோடு எடுத்துரைத்தார். இலங்கை, சென்னை, பம்பாய், ஜபல்பூர், அலகபாத், லாகூர் போன்ற இடங்களில் நடந்த ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டதாகத் தெரிவித்தார். 1578 மாணவர்கள் வாக்குச்சீட்டில் கையொப்பம் இட்டு, தாங்கள் ஒழுங்காக வேதம் வாசித்து இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக வாக்குக் கொடுத்துள்ளதாக அறிவித்தார். 370 ஊழியர்கள் தொடர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

இயேசு கிறிஸ்துவே ஒன்றான மெய்த்தேவ இரட்சகர் என்பதை வெகு அழுத்தம் திருத்தமாக டாக்டர் மார்ட் கல்கத்தா வாசிகளுக்கு மூன்று நாட்களாகப் பறை சாற்றி

ஞர். கிறிஸ்துவின் பரிசுத்த அவதார வாழ்க்கையைப் பற்றியும், அவரது சிலுவை மரணத்தைப் பற்றியும், தியாக அன்பைப் பற்றியும், தெய்வீகத்தைப் பற்றியும், தெளிவாக எடுத்துரைத்தார். கல்கத்தா உயர்நீதி மன்றப் பிரதம நீதிபதிகள் அவர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தரும் இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினுர்கள். பிரதம நீதிபதியான ஸர் அஹ்டாஸ் முகர்ஜி என்பவர் கடைசி நாள் கூட்டத்தின் முடிவுரையில் டாக்டர் மார்ட் என்பவர் அநேகமாக என்னைக் கிறிஸ்தவராக்கி விடுவார் போலும் என்றுரைத்தார். இந்து கிறிஸ்தவ மாணவர்களும், ஒய். எம். சி. ஏ. அங்கத்தினர்களும் டாக்டர் மார்ட் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளித்து, அவரது கிறிஸ்தவச் சேவையைப் பெரிதும் பாராட்டினுர்கள். சிப்பூர் படகு விபத்தினின்று உயிர் தப்பிய மணிக்குமார் முகர்ஜி இக்கூட்டங்களில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். இக்கூட்டங்களின் பயனுக இருநூறு மாணவர்கள் வாக்குறுதிச் சீட்டில் கையொப்பம் இட்டு ஒழுங்காக வேதம் வாசித்து கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாக தீர்மானித்தார்கள்.

இக்காலத்தில்தான் தேசிய கிறிஸ்தவ மன்றம் நிறுவப்படுவதற்குரிய அடிப்படை அஸ்திவாரம் போடப்பட்டது. நானும் இம்மன்றம் நிறுவின அங்கத்தினருள் ஒருவன் ஆனேன். திரு. எப். வி. சிலாக் என்ற காரியதரிசியின் அயராத உழைப்பால் மாணவர் தொண்டரது இயக்கம் ஏற்படலாயிற்று. நாடெங்கும் ஆண்டுதோறும் மாணவர் முகாம் ஏற்பட்டு, மாணவர்களுக்கிடையே ஒரு ஆன்ம எழுப்புதல் உண்டானது. கிறிஸ்தவ ஐக்கியமும் அந்நியோன்னியமும் தழைத்தோங்கின. திருச்சபைகளிலும் புத்துயிர் உண்டானது. வங்காளத்திற்குக் கிறிஸ்துவை வழங்குவதற்குக் கிறிஸ்தவர்கள் துடித்து முனைந்து நின்றனர்.

இச்சமயத்தில் டாக்டர் ஜான் ஆர். மார்ட் அவர்களுடன் நானும் சேர்ந்து அகில உலகச் சுற்றுப் பிரயாணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளில் திருச்சபைகளும் ஒய். எம். சி. ஏ. சங்கங்களும் எவ்வாறு இயங்கி வருகின்றன என்பதை நேரில் கண்டறிய எனக்கோர் அரிய வாய்ப்புக் கிட்டியது. ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போய் விட்டது. காரணம் அப்பொழுது எனது மனைவிக்குக் கடுமையான இருதய நோய் ஏற்பட்டுவிட்டது. டாக்டர் கிரே என்பவர் அந்த ஆபத்தான நிலைமையில் நான் எனது மனைவியைத் தன்னந்தனியே விட்டு விட்டுச் செல்வது உசிதமல்லவென்று கூறிவிட்டார்.

1915ம் ஆண்டு ஒய். எம். சி. ஏ. காரியதரிசிகளுக்கு லட்சுமணப்புரியில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதற்கு டாக்டர் ஷெர்வுட் எடி தலைமை தாங்கி அதைப் பயன்பட நடத்தினர். கே. டி. பால், இ. சி. கார்ட்டர் என்ற பொதுச் செயலாளர்கள் அம்மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தனர். பிரதிநிதிகளிடையே காணப்பட்ட கிறிஸ்தவ ஐக்கியம் இங்குக் குறிப்பிடத்தக்கது. கே. டி. பால் என்பவர் இந்திய திருச்சபையின் நிலைமை பற்றிச் சொற்பெருக்காற்றினர்.

அச்சமயம் இந்திய மாணவன் என்ற; தலைப்பின் கீழ் நான் வாசித்த கட்டுரையானது 'இந்திய வாலிபர்' என்ற பத்திரிகையில் 1916ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரசுரிக்கப்பட்டது. அக்கட்டுரையைப்பற்றி மாநாடு வெளியிட்ட அபிப்பிராயம் பின்வருமாறு:—திரு. பி.எ.என். ஸென் அவர்கள் மாநாட்டில் வாசித்த கட்டுரையால் எழுப்புதல் பெற்றுள்ளோம். மாணவரிடையே நடைபெற்றுவரும் கிறிஸ்தவத் தொண்டைப்பற்றி அவர் விளக்கம் தந்துள்ளார். இன்

னும் எவ்வளவோ சேவையாற்ற வேண்டிய தேவையிருக்கிறதென்பதையும் அவர் தெளிவுப்படுத்தியுள்ளார். மாணவர்களிடையே கிறிஸ்தவப் பணியாற்ற இன்னும் அநேகக் கிறிஸ்தவத் தொண்டர்கள் தேவை என்பது பற்றியும் அவர் தெளிவுப்படுத்தியுள்ளார். திருச்சபைகளையும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களையும் கல்விச் சாலைகளையும் இக்கட்டுரை தட்டி எழுப்பியது. மாணவர்களிடையே இன்னும் அதிகச் சேவை செய்யத் தொண்டர் பலர் முன் வந்தனர்.

சீனாவில் பரிசுத்த ஆவியானவர் ஆற்றி வரும் அற்புதச் செயல்களைப் பற்றி டாக்டர் எடி விளக்கமாகப் பிரசங்கம் செய்தார். சீனாவில் உண்டான ஆன்ம எழுப்புதல் இந்தியாவிலும் உண்டாக வேண்டுமென்று கிறிஸ்தவத் தொண்டர்கள் அல்லும் பகலும் அயராது கிறிஸ்துவுக்குள் உழைக்கத் தலைப்பட்டார்கள். நானும் இந்தியா புத்துயிர் அடையவேண்டுமென்று முன்னிலும் அதிக ஊக்கமாக உழைக்க முனைந்தேன். டாக்டர் எடி அவர்கள் கல்கத்தாவுக்கு வந்து பரிசுத்தாவியானவர் சீனாவில் நடத்தி வரும் அற்புதச் செயல்களைப் பற்றிப் பிரசிங்கம் செய்யுமாறு வேண்டிக்கொண்டேன்.

கல்கத்தாவில் டாக்டர் எடி சுவிசேஷக் கூட்டங்கள் நடத்துவதில் எ. என். பானர்ஜி ஐயரவர்கள் பெரிதும் ஒத்துழைத்தனர். டாக்டர் எடி ஒரு வல்லமையான சுவிசேஷப் பிரசங்கியாராவார். அவர் கல்கத்தாவையே கிறிஸ்துவுக்குள் ஓர் அசை அசைத்துவிட்டார் என்று சொல்லலாம். கல்கத்தாவிலுள்ள கிறிஸ்தவச் சபைகளெல்லாம் ஒன்று கூடி, ஓர் ஐக்கிய சுவிசேடப் படை முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

பட்டணத்திலுள்ள எல்லாத் திருச்சபைகளும், மிஷனரி சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஒரு சுவிசேஷக் கூட்டம்

டத்தினார்கள். வங்காளத்திலுள்ள எல்லாருக்கும் சுவிசேஷ ஒளியைப் பிரசித்தம் செய்ய ஆசித்தார்கள். இயேசுவின் நாமத்தைப் பற்றிக் கேள்விப்படாத ஒரு ஆத்துமா கூட வங்காளத்தில் இருக்கக்கூடாது என்பதுதான் அதன் நோக்கம். கிறிஸ்தவத் திருச்சபைகள் அனைத்தும் மிஷனரி சங்கங்கள் அனைத்தும், கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அனைத்தும் வங்காளத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அனைத்தும், ஒத்துழைத்தால் தான் வங்காளத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சுவிசேஷ செய்தியைக்கூறி அறிவிக்க முடியும். இவர்களை எல்லாம் தட்டி எழுப்புவது யார்? இவர்களை ஒன்று திரட்டுவது யார்? யாரேனும் ஒரு சிறந்த ஊக்கமுள்ள கிறிஸ்தவ ஊழியனால்தான் இம்மகத்தான பணியை ஆற்றமுடியும். அதற்குத் தகுந்த ஊழியன் யார்? யாரை இத்தொண்டில் முனைந்து நிற்பதற்குக் காரியதரிசியாக நியமிக்கலாம் என்று அக்கூட்டத்தார் தீர யோசித்தபொழுது, பிரேம்மானந்த் அவர்களையே இப்பொறுப்பான வேலைக்குக் காரியதரிசியாக நியமிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்த வேலைக்கென்று என்னை அனுப்புமாறு அவர்கள் டாக்டர் எடியையும் ஒய். எம். சி.ஏ ஐயும் வேண்டிக் கொண்டார்கள்.

எனக்கோ இவ்வேலைக்கு நான் தகுந்தவனு என்ற சந்தேகம் எழுந்தது. காரணம் இம்மகத்தான தொண்டில் ஈடுபடும் அமைச்சருக்குப் பேச்சு வன்மையும், சாமர்த்தியமும், வேண்டும். கிறிஸ்து மார்க்கத்திலுள்ள எல்லாப் பிரிவினர்களையும், சங்கங்களையும், ஸ்தாபனங்களையும், குருமார்களையும், சுவிசேஷகர்களையும் கூட்டிச்சேர்க்கும் திறமை வேண்டும். அல்லும் பகலும் அயராது உழைக்கும் சரீரச் சுகமும், மனோபலமும், ஆன்ம வன்மையும் வேண்டும். எனக்கு நல்ல பேச்சுச் சாதுரியம் கூட இல்லையே நான் எவ்வாறு இப்பெரும் பொறுப்பை

ஏற்று திறம்படக் காரியம் சாதிக்க முடியும் என்று தயங்கி நின்றேன். எனது தகுதியின்மையை நினைந்து, இப்பொறுப்பை ஏற்ருல் செவ்வனே சாதிக்க முடியாது என்றுகூறி, இந்நியமனத்தை மறுத்துவிடவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன். அச்சமயத்தில் வில்லிஷாலன்ட் என்பவர் எனது அலுவலகத்திற்கு வந்து, வேதாகமத்தைத் திறந்து, யாத்திராகமத்திலுள்ள ஒரு பகுதியை வாசித்து மோசேயும் இதேவிதமான சாக்குப்போக்குகள் கூறி, கர்த்தருடைய (சித்தத்தை) அழைப்பைஏற்கத் தயங்கி நின்றதையும், ஆனுல் அவன் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தபொழுது, எவ்வளவு பெரிய மகத்தான காரியத்தைச் சாதிக்க முடிந்தது என்பதைப் பற்றியும் எடுத்துரைத்தார். கர்த்தருடைய கரத்தில் நம்மைப் பரிபூரணமாக ஒப்புக்கொடுப்பதே பெரிய காரியம்என்பதையும் வற்புறுத்தினுர். பின்னர் என்னைத் தட்டிக்கொடுத்து "நீர் மோசேயைவிட படுமோசமான திக்குவாய் உள்ளவரா? என்று கேட்டார். "மோசேயோடு கூட இருந்து அவன் மூலமாக அரிய பெரிய காரியங்களைச் சாதித்த அதே கடவுள் உன்னேடும்கூட இருப்பார் என்று உறுதி கூறினுர்."

இது தேவ வாக்கு போல் என் வாழ்வில் அப்படியே பலித்தது. நான் தேவ ஒத்தாசையை நம்பி இப்பதவியை ஏற்றுக்கொண்டேன். வில்லிஷாலண்டும் நானும் ஊக்கமாக ஜெபித்தோம். கர்த்தர் என்னை நோக்கி "மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ, நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதைப் போதிப்பேன். திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனுகிய கர்த்தர் உன்னேடேகூட இருக்கிருர்" என்ருர்.

வங்காள சுவிசேஷப்படை நிறுவப்பெற்றது. வங்காளத்திலுள்ள எல்லாக் கிறிஸ்தவப் பகுதியினரும் அதில் பங்கு

கொண்டனர். எல்லாப் பிரிவையும் சேர்ந்த கிறிஸ்தவ குருமார்களும், சுவிசேஷகர்களும் கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்று திரண்டனர். வங்காளம் முழுவதையும் சிலுவைக் கொடியின் கீழ்க் கொணரவேண்டும் என்ற ஆர்வத்தோடு ஒன்று திரண்டு வந்தனர். 1915ம் ஆண்டு வெவ்வேறு கிறிஸ்தவப் பகுதிகளைச் சேர்ந்த 45 குருமார்களும் பல சுவிசேஷகர்களும்அத்தியட்சக் கல்லூரிச் சிற்றாலயத்தில் ஒன்று கூடி, இந்த வங்காளச் சுவிசேஷப் படை முயற்சிக்காக ஒரு நாள் முழுவதும் அதி ஊக்கமாக ஒரு மனப்பட்டு, கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசத்தோடு ஜெபித்தனர். கல்கத்தா அத்தியட்சரான சங்கை லெப்ராய் அவர்கள் இச்சுவிசேஷ தொண்டின் அவசியம் பற்றி மூன்று எழுப்புதலான பிரசங்கங்கள் செய்தார்கள். கல்கத்தாவின் சரித்திரத்திலேயே இதுபோன்றதொரு பரவசமான ஜெப நாள் இதற்குமுன் அனுசரிக்கப்படவில்லை யென்று திட்டமாகக் கூறலாம். எல்லாப் பகுதியினரும் தங்கள் பிரிவினை மனப்பான்மையை அறவே அகற்றிவிட்டு, கிறிஸ்துவின் நாமத்தில் சுவிசேஷப் பிரசாரத்திற்காக இவ்விதமாக ஒன்று திரண்டு வருவது எத்துணை மாட்சிமையான காட்சி!

திருச்சபை தலைவர்களுக்குள்ளும், குருமார்களுக்குள்ளும் சுவிசேஷகர்களுக்குள்ளும் கொழுந்து விட்டு எரிந்த சுவிசேஷத் தீபம் மற்றக் கிறிஸ்தவ இருதயங்களிலும் பற்றி எரிய ஆரம்பித்தது. வங்காளத்திலுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் ஓர் பெரிய ஆன்ம எழுப்புதல் உண்டானது. சுவிசேஷ வாஞ்சை அதிகரித்தது ! சுவிசேஷப் பிரசார வேலை ஓங்கி வளர்ந்தது. வங்காளமெங்கும் கிறிஸ்துவின் நாமம் கூறி அறிவிக்கப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகள், சுவிசேஷ ஆகமங்கள், சுவிசேஷப் பிரசங்கங்கள், வங்காளம் எங்கும் பறைசாற்றப்பட்டன. பரிசுத்தாவியானவர் வல்லமையாய்க் கிரியை செய்தார். கிறிஸ்துவின் சிலுவை,

அன்பு காந்தம் போல் அநேக இந்துக்களையும், மகமதியர் களையும் கிறிஸ்துவண்டை இழுத்துக்கொண்டது. 1915ம் 1916ம் ஆண்டுகளில் வங்காளத்திலுள்ள அநேகர் கிறிஸ் தவ நெறியைப் பின்பற்றினர். கிறிஸ்துவைத் தங்கள் நாயகராக ஏற்றுக்கொண்டனர்.

1916ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்த வங்கா ளச் சுவிசேஷ படை மாநாட்டில் சொற்பெருக்காற்றிய கனேன் பானர்ஜி என்பவர் பின்வருமாறு அகமகிழ்ந்து கூறினர்:—

கிறிஸ்தவர்கள் தங்கள் வேற்றுமைகளையும், பிரிவினை களையும், துவேஷங்களையும் அகற்றிவிட்டு, கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுகூடி, ஜெபிப்பதும் உழைப்பதும் எவ்வளவு பலன் உள்ளதாக இருக்கின்றன! என்றென்றும் நாம் கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுபட்டு வாழ்ந்தால், எத்துணை நன்மையாய் இருக்கும். மேல்நாட்டவரும் கீழ் நாட்டவரும் ஒன்று சேர்ந்து கிறிஸ்துவின் சிலுவைக் கொடியை உயர்த்திப் பிடித்தால் எவ்வளவு உத்தமமாய் இருக்கும். "விசுவாசிகள் எல்லாரும் ஒன்ருய் இருக்கவும், பிதாவே நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கி றதைப் போல, அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்ருய் இருக்க வும் வேண்டிக்கொள்கிறேன்." என்ற இயேசுவின் விண் ணப்பம் நம்மில் பலிக்க வேண்டுமல்லவா?

டாக்டர் எடி கல்கத்தாவிலிருந்து தென்னிந்திய திருச் சபைகளைச் சந்திக்கச் சென்ருர். மலையாளம் சபைகளிலும் தமிழ்ச் சபைகளிலும், மாபெரும் ஆன்ம எழுப்புதல் உண் டானது. கர்த்தர் தென்னிந்தியத் திருச்சபைகளைச் சந்தித்து ஆசீர்வதித்தார். பரிசுத்தாவியானவரின் கிரியை அங்கு வல்லமையாய்க் காணப்பட்டது. கிறிஸ்தவர்கள் புத்துயிர் பெற்ருர்கள். புத்தூக்கம் அடைந்தார்கள்.

இந்திய ஊழியத்தை நிறைவேற்றிய பின்னர் டாக்டர் எடி அமெரிக்கா சென்றார். அங்கு எழுப்புதல் கூட்டம் நடத்திவிட்டு, ஐரோப்பாவுக்குப் போனார். அங்குப் போர் முனைகளில் பணியாற்றிய போர் வீரர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அநேகர் சிலுவைக் கொடியின் கீழ் போர் புரியும் கிறிஸ்தவ வீரர்கள் ஆனார்கள்.

1916ம் ஆண்டு இறுதியிலே எனது ஓயா வேலையின் நிமித்தம் எனக்குச் சுகவீனம் ஏற்பட்டது. ஒய். எம். சி. ஏ. காரியதரிசியாக இருந்தவரும், ஓய்வு பெற சீமைக்குச் சென்றுவிட்டார். ஆகவே, நான் ஒய். எம். சி. ஏ. கல்லூரி பகுதிக்குக் காரியதரிசியாக மீண்டும் சேவையாற்றும் அவசியம் ஏற்பட்டது. எனக்குப் பதிலாக கனம் வி. ஏ. நாஷ்கு ஐயரவர்கள் வங்காளச் சுவிசேஷப் படையின் செயலாளராகச் சிறந்த செயலாற்றினார். ஊக்கமிக்க இரு வாலிபர்கள் அவருக்கு உறுதுணையாக உதவிபுரிந்தனர். வங்காளச் சுவிசேஷ சேவைநாளுக்கு நாள்முன்னேறி வந்தது. கிறிஸ்துவின் நாமம் வங்காளத்தில் மகிமைப் பட்டது.

அதிகாரம் 4

ஹிந்தி திருப்பணி

சி. எம். எஸ். சங்கத்தாருடன் ஒத்துழைப்பு

வங்காளச் சுவிசேஷப் படை முயற்சியில் நான் செயலாளராகத் தீவிரச் செயலாற்றி வருங்கால், கல்கத்தா அத்தியட்சரான சங்கை லெப்ராய், இந்திய பிரதம அத்தியட்சர், சி. எம். எஸ். காரியதரிசியான கனோன் சண்டீஸ், திரு. பவுல் கல்லூரியின் தலைவரான, கனம் வில்லி ஹாலண்ட் போன்ற பக்தர்களுடன் நெருங்கிப் பழக, அரிய வாய்ப்புக் கிட்டியது. இப்பக்தச் சிரோமணிகள் எனது கிறிஸ்தவப் பக்தி பெருகப் பெரிதும் உதவினார்கள். இவர்களுடைய சகவாசத்தால் எனது கிறிஸ்தவ விசுவாசம் தழைத்தோங்கியது; சுவிசேஷ வாஞ்சை அதிகரித்தது. எனக்கு வேண்டும் நல்ல சுகம் ஏற்பட்டதும், நான் தீவிரமாய்ச் சுவிசேஷத் திருப்பணியில் ஈடுபடத் துடித்து நின்றேன்.

" சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ !" என்ற குரல் என் நெஞ்சிலிருந்து பொங்கி எழுந்தது. கர்த்தர் என் நெஞ்சின் ஆசையை அறிந்தார். அந்த ஆர்வத்தை நிறைவேற்றினார். சி. எம். எஸ். சங்கத்தார் என்னை ஒரு சுவிசேஷகனாக ஹிந்திப் பிராந்தியத்தில் திருப்பணி ஆற்ற அழைப்பு விடுத்தனர். அதைத் தெய்வ அழைப்பாகக் கருதி மனமுவந்து ஏற்றுக்கொண்டேன். ஓய். எம். சி. ஏ. டாக்டர் எடி அவர்களுக்கு முதலில் இது வருத்தமாக இருந்த போதிலும், பின்னர் இதைத் தெய்வச் சித்தமாகவே எண்ணினார்.

பிரிவினை மனப்பான்மையின்றி, எல்லாக் கிறிஸ்தவத் திருச்சபைகளிலும் நான் சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்க

அனுமதி தரவேண்டும் என்று நான் முதலாவதாகவே சி. எம். எஸ். சங்கத்தாரை வேண்டிக்கொண்டேன். கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட்ட அந்த விண்ணப்பத்தை சி. எம். எஸ். சங்கத்தார் மகிழ்ச்சியோடு அங்கீகரிக்கவே, நான் ஆங்லிக்கன் திருச்சபைகளிலும், மெதடிஸ்ட் திருச்சபைகளிலும், பாப்திஸ்து திருச்சபைகளிலும், மற்றக் கிறிஸ்தவத் திருச்சபைகளிலும், கிறிஸ்தவச் சுவிசேடத்தை ஆர்வத்துடன் பிரசங்கித்து வந்தேன். எனது மனைவியார் மாதர் மத்தியில் மகத்தான தொண்டாற்றி வந்தார்.

ஒய். எம். சி. ஏ. கல்லூரி மாணவர்கள் எங்களை எப்பொழுதும் நன்றியுடன் நினைத்துக்கொள்வர். அவர்கள் எப்பொழுதும் எங்களோடு ஒத்துழைக்கத் துடித்து நிற்பர். அவர்களுடைய அன்பும் ஒத்துழைப்பும் சுவிசேஷத் தொண்டில் எங்களுக்குப் பெரிதும் உதவியாயிருந்தன. நாங்கள் ஒய். எம். சி. ஏ. வேலையை விட்டு விட்டு சி. எம். எஸ். சுவிசேஷத் தொண்டிற்காக வீடு மாற்றிக்கொண்டு திருப் பவுல் கல்லூரியின் அருகே குடியிருந்தோம். அங்கும் ஒய். எம். சி. ஏ. கல்லூரி மாணவர்கள் வந்து எங்களோடு பேரன்புடன் பழகி வந்தனர். பட்டணத்து உல்லாச வாழ்க்கையால் அம்மாணவர்கள் கறைபட்டுப் போகாதபடி எங்களுடைய கிறிஸ்தவ அந்நியோன்யம் பெரிதும் உதவியது. அநேக மாணவர்கள் கிறிஸ்தவர்களாகி சீரிய கிறிஸ்தவ வாழ்வு நடாத்தினார்கள். ஜாதித் துவேஷம் மிகுந்த இந்நாட்டில் யாரேனும் கிறிஸ்தவர்களாக மாறினால் பெரும் சிலுவையைச் சுமக்க நேரிடுகின்றது. மதப் பித்துக்கொண்ட சொந்த வீட்டார்களே அவர்களுக்குப் பரம சத்துருக்கள் ஆகிவிடுகின்றனர். ஆகவே, இன ஜனப்பந்துக்களையெல்லாம் சில வேளைகளில் துறந்துவிட்டு, கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டியதிருக்கின்றது. சிலர் சிறிது காலம் வரை

இரகசிய கிறிஸ்தவர்களாகவே இருக்க நேரிட்டுவிட்டது. கிறிஸ்து எங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்து, சீராக்கி விட்டார் என்று அநேகர் சாட்சி பகர்கின்றனர். அநேகருடைய உள்ளங்களில் கிறிஸ்து புளித்த மாவைப் போல் அந்தரங்கமாய்க் கிரியை ஆற்றி வருகிறார். அநேகர் சிறந்த கிறிஸ்தவ முத்துக்களாகப் பகிரங்கமாய் சுடர்விட்டு மிளிர்கின்றனர். "இந்தத் தொழுவத்தில் அல்லாத அநேக ஆடுகளும் உண்டு. அவைகளும் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கும். அந்த ஆடுகளையும் நான் எனது மந்தைக்குள் கொண்டு வரவேண்டும்." என்று முன்னுரைத்த நல்ல மேய்ப்பரான கிறிஸ்துவின் மந்தைக்குள் பாரத நாட்டிலுள்ள எல்லா ஆன்மாக்களும் தீவிரமாய்க் கொண்டுவரப் படவேண்டுமே! தாகமுற்ற நம் தாயகத்தாருக்கு ஜீவ தண்ணீராகிய கிறிஸ்துநாதர் தாராளமாய் வழங்கப்பட வேண்டுமே! பசியுற்ற பாரத மக்களுக்கு ஜீவ மன்னுவாம் கிறிஸ்து நாதர் பரிவுடன் பரிமாறப்படவேண்டுமே!

மேனாட்டு முறைப்படி அன்று, கீழ்நாட்டு முறைப்படி கிறிஸ்து நாதர் கீழ் நாட்டவருக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டும். பாரத நெறிப்படி பாரத மக்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கவேண்டும். இந்தியருக்குப் புரியும் வண்ணம் கிறிஸ்தவப் பிரச்சாரம், கிறிஸ்தவ வழிபாடு திகழவேண்டும். கிறிஸ்து ஓர் ஒப்பற்ற ஆசிய வாசி என்பதை ஒவ்வொரு ஆசிய மகனும் அறியும் வண்ணம் செய்தல் வேண்டும். இந்தியாவுக்கு இயேசு வேண்டும். இந்தியக் கிறிஸ்தவர்களே இந்தியர்களுக்கு ஏற்றவகையில் இயேசுவை அவர்களுக்கு வழங்க முன்வரவேண்டும். நமது தாயகத்தில் கிறிஸ்துவை நாம் சுவிசேஷமாகக் கூறி அறிவிக்காவிட்டால் நமக்கு ஐயோ! கிறிஸ்து வேண்டும் என்று இந்தியா துடித்து நிற்கின்றது. இந்தியாவுக்குக் கிறிஸ்துவை வழங்க இந்தியனாகிய நீ முன் வருவாயா? அதற்குரிய

பொருளுதவியும், ஜெப உதவியும், சேவை உதவியும், தியாக உதவியும் செய்ய நீ தயங்கி நிற்பாயோ?" ஐயா, நாங்கள் கிறிஸ்துவைக் காணவேண்டும்'' என்று இந்தியர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர். அவர்களுக்குக் கிறிஸ்துவை வழங்குவதற்கு நாம் ஆயத்தமா?

திருப்பவுல் கல்லூரி அருகே குடியிருந்த சி. எம். எஸ். மிஷனெரிமார் எங்களிடத்தில் அதிகப் பரிவு காட்டினர். இருபது ஆண்டுகளாக இம்மிஷனெரிமார்களுடன் நாங்கள் சிறந்த கிறிஸ்தவ ஐக்கியம் கொண்டுள்ளோம். அவர்கள் மேனாட்டிலிருந்து வந்திருந்தபோதிலும், கீழ்நாட்டவர்களை நேசிக்கும் நேசத்தைப் பார்த்தால் கிறிஸ்துவுக்குள் கிழக்கென்றும், மேற்கென்றும் இல்லை என்பது தெளிவாகப் புலப்படும். வடக்கிலிருந்தாலும், தெற்கிலிருந்தாலும், மேற்கிலிருந்தாலும், கிழக்கிலிருந்தாலும் எங்கிருந்தாலும் எல்லோரும் கடவுளுடைய மக்களே. கடவுள் எல்லோரையும் நேசிக்கிறவர். எல்லாருக்காகவும் உயிர்விட்டவர். ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் காலம் வரும். கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாரும் ஒன்ருய் இருக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம். காரணம் எல்லாரும் ஒரே கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் ஆவர்.

வில்லி ஆல்னிட் என்பவர் இக்கிறிஸ்தவ ஐக்கியக் குடும்பத்தின் மூத்த அண்ணன்போல் கருதப்பட்டார். ஆசீர்தாஸ், குருவில்லா, சகரியா, கார்போர்டு, திருமதி மக்ஆர்தர், கன்வெல், மில்போர்டு டிவிக், கனேன் சான்டிஸ், கனேன் பர்ஸ், ஒல்ட்ஷாம், போன்ற நாங்கள் அனைவோரும் ஒரே குடும்பத்து மக்கள்போல் கிறிஸ்துவுக்குள் ஒன்றுபட்டு அன்புற்று இன்புற்று திருப்பணி ஆற்றினேம். கிறிஸ்தவ ஐக்கியத்தின் மேன்மைதான் என்னே! என்னே! நாம் கிறிஸ்துவுக்குள் ஒத்துழைத்தால் எத்துணை மகத்தான

சாதனைகளைச் சாதித்துவிடலாம்! கிறிஸ்தவ சகோதரர்கள் ஒருமித்து வாழ்வதும் உழைப்பதும் எவ்வளவு இன்பமாய் இருக்கின்றன!

திருப்பவுல் கல்லூரியில் நாங்கள் வசித்து வந்த வீடு ஹிந்தி மிஷன் வீடு என்று அழைக்கப்பட்டது. அங்கு ஒரு சிற்றாலயமும் இருந்தது. இந்தி ஆராதனைகள், வழிபாடுகள், இந்தி பக்தி முயற்சி வணக்கங்கள், பிரசங்கங்கள். இச்சிற்றாலயத்தில் நடைபெற்று வந்தன. அக்காலத்தில் கல்கத்தா ஜனத்தொகையில் மூன்றிலொரு பாகம் இந்தி பேசும் மக்களாகவே இருந்தனர். அவர்களில் அநேகர் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். ஆனால் அவர்களைச் சரியானபடி கவனித்து ஆத்தும ஆகாரம் கொடுப்பதற்குப் போதிய மேய்ப்பர்கள் இல்லாமல் இருந்தார்கள். சிதறுண்ட ஆடுகளைப் போல் இருந்த அவர்களை ஆர்வத்துடன் ஆதரிப்பார் அதிகம் இல்லை. சுவிசேஷத் தொண்டு, இந்தி கிறிஸ்தவ ஆராதனைகள் நடத்துவதற்கு இந்தி குருமார்கள் மிகமிகக் குறைவாய் இருந்தார்கள். இந்தி கிறிஸ்தவர்களிடையே திருப்பணி ஆற்றுவதற்குச் சரியான இந்தி குருமார் இல்லை. இந்தி இந்துக்கள் மத்தியிலும், முகம்மதியர்கள் மத்தியிலும், சுவிசேஷ வேலை செய்வதற்குப் போதிய இந்தி சுவிசேஷகர்களும் இல்லை.

ஆகவே, இந்தி பேசும் மக்களிடையே சுவிசேஷத் தொண்டாற்ற ஒரு இந்தி குருவானவர் அத்தியாவசியமாய் வேண்டியதாயிருந்தது. இவ்வேலைக்கு என்னை பிரித்தெடுத்தார்கள். கனோன் சான்டிஸ் என்பவர் நான் இந்தி திருத்தொண்டில் முழுமையுமாக ஈடுபடவேண்டுமென்று விரும்பினார். அதன் பேரில் சோட்டா நாகபுரி, பீஹார், ஐக்கிய மாகாணங்கள், மத்திய மாகாணங்கள் போன்ற பகுதிகளிடையேயுள்ள சிதறுண்ட கிறிஸ்தவர்

களைக் கவனிப்பதோடு அப்பிராந்தியத்திலுள்ள இந்தி மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நான் நியமிக்கப்பட்டேன். கருங்கக்கூறின் சி. எம். எஸ். இந்தி மிஷனுக்கு நான் ஒரு விசாரணை குருபோல் பணியாற்றினேன். இந்த இந்தி மிஷனில் என்னுடன் ஒத்துழைக்க அநேக மிஷனெரிமார்களும் பிரசங்கிமார்களும், வேதாகம ஸ்திரீகளும், இன்னும் பல தொண்டர்களும், முன்வந்தனர். மாதர் ஊழியத்தை எனது மனைவி மேற்பார்த்து வந்தாள்.

இந்தி கிறிஸ்தவ மாணவர்களுக்கும், பிற மாணவர்களுக்கும், வேதாகமம் கற்பிக்க நான் ஒரு வேதாகம வகுப்பு நடத்தினேன். இந்தி கிறிஸ்தவ ஜெப வீடுகளிலும் சிற்றாலயங்களிலும் தேவாலயங்களிலும் ஒழுங்காக இந்தியில் கிறிஸ்தவ ஆராதனை நடைபெற ஒழுங்கு செய்தேன். இந்தி இந்துக்கள் மத்தியிலும், முகம்மதியர்கள் மத்தியிலும், கிறிஸ்துவைச் சுவிசேஷமாகப் பிரசங்கித்து வந்தோம். தனியாள் ஊழியம், ஜெபக் கூட்டம், தியானக் கூட்டம், வேத பயிற்சிக் கூட்டம், எழுப்புதல் கூட்டம், சுவிசேஷக் கூட்டம், பொதுக் கூட்டம், மாணவர் கூட்டம், மாதர் கூட்டம் போன்ற பல கூட்டங்களைக் கூட்டிக் கிறிஸ்துவை இந்தியில் பிரசித்தம் செய்து வந்தோம். வீடுகள் சந்திப்பு, பள்ளிக்கூடச் சந்திப்பு, சேரி சந்திப்பு போன்ற திருப்பணியும் நடைபெற்று வந்தது. சேரிகளில் கிறிஸ்தவப் பாடசாலைகள் நிறுவப்பெற்றன.

ஓய்வுநாள் ஆராதனைக்கு வரமுடியாத வீட்டு வேலைக்காரர்களுக்கென்று தனியாக ஒரு கிறிஸ்தவ ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டது. ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் வீடுகளில் சமையல் வேலை, தோட்ட வேலை, போன்ற வீட்டு வேலைகள் செய்துவந்த வேலைக்காரர்களுக்கென்று பிரத்தியேகமாக வைக்கப்பட்ட இவ்

வாராதனை ஒழுங்கை ஐரோப்பிய கனவான்கள் மிகவும் பாராட்டிப் பண உதவிசெய்து, ஒரு உபதேசியாரின் சம்பளத்தைத் தாங்கள் கொடுத்து விடுவதாக முன் வந்தார்கள்.

கல்கத்தா பட்டணத்தின் எட்டுப் பகுதிகளில் கிறிஸ்தவத் தொண்டு, வெகு மும்முரமாக நடைபெற்று வந்தது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த பிள்ளைகள் அநேகர் சேர்ந்து படித்து வந்தார்கள். அப்போதுள்ள கணக்கின்படி கல்கத்தாவிலுள்ள ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பாகம் கல்வி மணம் அறியாதவர்கள். ஆகவே, அறியாமை இருளை அகற்றவேண்டியது எங்கள் பொறுப்பாயிற்று. ஆரம்ப பாடசாலைகள் ஆரம்பித்து, எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பதை எங்கள் முதல் நோக்கமாகக் கொண்டோம். அதிலும் எல்லாத் துறைகளிலும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்வியறிவை ஊட்டுவதில் அதிகக் கவனம் செலுத்தினோம்.

ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதைப் பெரும் இன்பமாகக் கொண்டோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைச் சேரி மக்களுக்குக் கூறி அறிவித்து, அவர்கள் தங்கள் இல்லங்களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைப்பதற்குப் புத்தி புகட்டினோம். பக்திக்கு அடுத்தது சுத்தி என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்தோம். சுத்தம் சுகம் தரும் என்பதைப் போதித்தோம். குடிவெறி, புகை பிடித்தல், சீட்டாடல் போன்ற தீய பழக்கங்களை அவர்கள் அகற்றிவிடுமாறு ஆலோசனை அளித்தோம். அவர்கள் நல்ல பழக்கங்களையும் சிறந்த ஒழுக்கங்களையும் கைக்கொள்ளுமாறு கற்றுக் கொடுத்தோம். சி.எம்.எஸ். இந்தி மிஷனைச் சேர்ந்த நாங்கள் இந்த ஏழைச் சேரி மக்களுக்குக் கிறிஸ்தவ அன்பைக் காண்பித்தோம்.

தீண்டா ஜாதியினர் என்று மேல் ஜாதியினரால் தவருகக் கருதப்பட்ட அந்த ஏழை மக்களையும் கடவுள் எவ்வளவு நேசிக்கிருர் என்பதை எடுத்துக் காட்டினேம். கிறிஸ்து, அவர்களுடைய மீட்புக்காக தம்முடைய உயிரையே சிலுவையில் எவ்வாறு தியாகப் பலியாக அர்ப்பணம் செய்துள்ளார் என்பதைப்பற்றியும் விளக்கிக்காட்டினேம்.

அவர்கள் தாங்களாகவே வேதம் வாசித்து, கிறிஸ்துவைப் பற்றி மேலும் மேலும் அறிந்து கொள்வதற்காக அவர்களுக்குக் கல்வி அறிவையும் ஊட்டி வந்தோம். கல்கத்தா பட்டணத்தில் மட்டும் ஐந்து பகல் பள்ளிக்கூடங்களும், மூன்று இரவு பள்ளிக்கூடங்களும், சேரி வாசிகளுக்கென்று ஏற்படுத்தினேம். அதன் வாயிலாகக்கிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவித்து வந்தோம். அவர்கள் சுத்தமான வாழ்க்கை ஆற்றத்தக்கதாக நற்பழக்க வழக்கங்களைக் கற்பித்து வந்தோம். சுகாதாரம், பொதுநலம், தியாகம், தன்னலமற்ற தியாகத்தொண்டு இவற்றின் அருமையையும் அவர்களுக்கு அறிவித்தோம். பொய், களவு, குடி, சீட்டாட்டம் போன்ற தீய பழக்கங்களை அவர்கள் நாளடைவில் வெறுத்துத் தள்ளிவிடுமாறு செய்தோம். கடந்த 18 ஆண்டு சரித்திரத்தில் இக்கிறிஸ்தவப் பள்ளிகளில் படித்த ஒருவரேனும் சிறைக்குச் செல்லவில்லை. அவதூருன வழக்கில் அகப்பட்டதுமில்லை. கடவுளுக்கே நன்றி, வணக்கம்.

கல்கத்தா பட்டணத்துக் கிழக்குப் பிராந்தியத்தில் அநேகத் தொழிலாளிகள் குடியேறியிருந்தார்கள். அந்தப் பெலியா காட்டா குடியேற்றத்தில் அநேக மதுபானக் கடைகளும், அப கீர்த்தியான இடங்களும் இருந்தன. அநேகத் தொழிலாளிகள் துன்மார்க்க நெறியில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களைத் தீ நெறியை

விட்டு நன்னெறியில் திருப்புவதற்காக ஒரு இலவச வாசகசாலை அவர்கள் மத்தியில் நிறுவினோம். அவர்கள் தாய் மொழியில் பத்திரிகைகளும், செய்தித் தாள்களும், நல்ல நூல்களும் படித்து அவர்கள் நேரத்தை நன்னெறியில் செலவிடுவதற்கு வழி வகுத்தோம். இந்த வாசகசாலையில் பஜனை, பிரசங்கம், ஒளிச் சித்திரப்படம், சுகாதார சொற்பொழிவுகள், மத அற உரைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்கு செய்தோம். இந்த வாசகசாலையின் மண்டபத்தின் பகல் நேரத்தில் சிறுவர்களுக்குப் பள்ளியும், இரவுநேரத்தில் பெரியோர்க்குப் பள்ளியும் நடைபெறுமாறு ஒழுங்கு செய்தோம். இந்த வாசகசாலையின் மூலம் அதன் சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்குச் சிறந்த பொழுதுபோக்கும், சுவிசேஷப் பிரச்சாரமும், சுகாதார அறிவும் கல்வியமுதும் கிடைத்து வந்தன.

கிராமங்களிலிருந்தும், தொலைவிடங்களிலிருந்தும் தொழிற்சாலை வேலைக்காகத் தங்கள் குடும்பங்களை விட்டு விட்டுத் தனிமையாக இப்பட்டணத்தில் வாழும் ஆண் தொழிலாளர்க்கு எங்களால் இயன்ற உதவி செய்தும் வந்தோம். தூர இடங்களிலுள்ள அவர்களின் மனைவி மக்களுக்கும், உற்றார் உறவினர்க்கும் அவர்கள் அடிக்கடி கடிதம் எழுதுமாறு ஞாபகப் படுத்தினோம். எழுதத்தெரியாத அநேகருக்கு நாங்களே கடிதங்களை எழுதியும், கொடுத்தோம். மணியார்டர் பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தோம். அவர்கள் அடிக்கடி வீடு திரும்பி, தாங்கள் விட்டு வந்த மனைவி மக்களைப் போய்ப் பார்த்து வருமாறும் தூண்டினோம். தொலைவான இப்பட்டணத்திலுள்ள பயங்கரச் சோதனைகளில் தனிமையாக வாழும் இத்தொழிலாளிகள் சிக்கிகொள்ளாதபடி புத்திப் புகட்டியும் எச்சரிக்கை செய்தும் வந்தோம். அவர்கள் அறநெறியில் செல்வதற்கு ஆவன

செய்தோம். எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவை அவர்களுக்குப் பிரசங்கித்து வந்தோம்.

கல்கத்தா அத்தியட்சாதீன மிஷனெரி அறிக்கையொன்று 1922ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்த ஹிந்தி மிஷன் ஆற்றியுள்ள திருப்பணியைப் பற்றி பின்வருமாறு பிரசுரித்துள்ளது :-

இக்காலத்தில் எல்லாத் துறைகளிலும் கலவரம், சச்சரவு, குழப்பம் ஏற்பட்டுள்ளன. மக்களுடைய மனத்திலும் ஆன்மாவிலும் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அமைதியின்மை எங்கும் நிலவுகின்றது. ஆன்மாவில் அமைதியில்லை. மனத்தில் சமாதானம் இல்லை. உள்ளத்தில் உவப்பு இல்லை. ஆன்மாவுக்கு யார் சாந்தி கொடுக்கமுடியும்? வருத்தப்பட்டுப்பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல், அமைதி, சமாதானம், சாந்தி தருவேன் என்று இயேசு நாதர் ஒவ்வொரு ஆத்துமாவையும் அன்போடு அழைக்கின்றார். கொந்தளிப்பான கடலின் புயலையும் கோஷ்டத்தையும், அடக்கி அமைதி ஏற்படுத்திய அதே ஆண்டவர் நம் இதயங்களிலும் அமைதியை நிலைநாட்ட முடியும்; நமது ஆன்மாவிற்குச் சாந்தி தரமுடியும். நமது மனத்திற்குச் சமாதானம் அளிக்க முடியும். நமக்கு ஒரே நம்பிக்கை ஆனவர் இயேசு நாதர்தாம். உலக நல்வாழ்வின் ஒரே நம்பிக்கை இயேசு நாதர்தாம். இதுகாறும் ஆன்ம சாந்தி பெற்ற அனைவரும் அதனை இயேசுவின் மூலமாக மட்டுமே பெற்றுக்கொண்டனர். சிலுவை நாதர் ஒருவரே ஆன்மாவிற்கு ஈடேற்றம் தர வல்லவர். இயேசுவின் திரு இரத்தம் மட்டுமே மாந்தரின் பாவங்களைக் கழுவக்கூடிய தீர்த்தம். இயேசு ஒருவரே உலகத் தெய்வ இரட்சகர்; தனி ஒரு ஆத்துமாவுக்கு இயேசு வேண்டும். ஒவ்வொரு நாட்டுக்கு இயேசு வேண்டும்; இவ்வுலகுக்கு இயேசு வேண்டும்.

இயேசு நாதர் இன்றும் மனிதனை இரட்சிக்க வல்லவர். இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய கரம் இன்று குறுகிப் போகவில்லை. மனிதனுக்குச் சாந்தியும் பேரின்ப வாழ்வும் கொடுக்கமுடியாதபடி அவருடைய ஆற்றல் குன்றிப் போகவில்லை. இயேசு நேற்றும் இன்றும் என்றும் இரட்சிக்கிறார்.

கல்கத்தா கல்லூரி மாணவரான ஒரு முஸ்லீமைக் கிறிஸ்து இரட்சிக்கச் சித்தம் கொண்டார். காசி வட்டாரத்திலுள்ள ஒரு வைதிகப் பிராமணனையும் இயேசு தன்பால் இழுத்துக்கொள்ள சித்தம் ஆனார். இரண்டு பேரும் கிறிஸ்தவ மார்க்கச் சத்தியங்களைப் பற்றி எங்களிடம் அதிக ஆர்வத்தோடு விசாரித்து வந்தார்கள். இந்தி மிஷன் சிற்றாலயத்தில் நடைபெற்ற வேதபாட வகுப்புக்கு இரண்டு பேரும் வந்து ஒழுங்காக வேதம் கற்று வந்தனர். இதனை அறிந்த அவர்களுடைய நண்பர்களும், உற்றாரும், உறவினர்களும், மத குருக்களும் அவர்களுக்குப் பல இன்னல்கள் விளைவிக்க ஆரம்பித்தனர். எனினும் ஆண்டவர் எங்களோடு இருந்தார். "திகையாதே, கலங்காதே" இதோ, உலகத்தின் முடிவு பரியந்தமும், சகல நாட்களிலும் உங்களோடு இருக்கிறேன்" என்று வாக்குப் பண்ணினவர் எங்களோடு நிச்சயமாகவே இருந்தார். எங்களை அற்புதமாகவே வழி நடத்தினார். ஆம், அவர் அன்று மாத்திரமல்ல, இன்றும் அதிசயமானவரே. அவர் எங்களுக்கு என்றும் அதிசயமான தெய்வமாகவே இருந்து வந்திருக்கிறார்.

இந்த முகமதிய நண்பனுக்கு இயேசு கிறிஸ்து ஒருவரே ஒப்பற்ற தேவ இரட்சகர் என்பதையும், இயேசு ஒருவரே கண்கண்ட பரிசுத்த தெய்வம் என்பதையும் நான் சத்திய வேதாகமத்தின் வாயிலாகவும், எனது சொந்த அனுபவத்தின் வாயிலாகவும் நிரூபித்துக் காட்டினேன். என்னை

இரட்சித்த இயேசு நாதர் உன்னையும் இரட்சிக்க வல்லவர் என்று அழுத்தம் திருத்தமாக அறை கூவினேன். அந்த முகமதிய நண்பன் பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையால் இயேசு சுவாமியை ஒன்றுன மெய்த் தெய்வ இரட்சகராகக் கண்டான். அந்த இரட்சகர் தன்னையும் இரட்சிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். கேளுங்கள், அப் பொழுது கொடுக்கப்படும், என்று வாக்கருளிய இயேசு நாதர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டார். அவனை ஆட் கொண்டார், அவன் மனம் திரும்பினுன். கிறிஸ்தவனுக ஞானஸ்நானம் பெற ஆசித்தான். 1920-ம் ஆண்டு பரிசுத்த அந்திரேயாவின் திருநாளிலே **அந்திரேயா** என்ற பெயரால் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. பின்னர், அவன் அத்தியட்சரவர்களால் திடப்படுத்தலும் பெற்றுன்.

ஆனுல், பிராமண நண்பனுக்கு அதன் பின்னர் சாத்தா னின் சோதனைகள் பலத்தன. வேதாகமத்தில் காணப்படும். சத்தியங்கள் தன்னுடைய இந்து வேதாகமங்களில் காணப் படுகின்றனவே. பின்னை ஏன் நான் எனது பூர்வீக இந்து சமயத்தை விட்டுப் புதிதான கிறிஸ்தவ சமயத்தில் சேர வேண்டும் என்று விவாதிக்கத் தொடங்கினுன். எம்மத மும் சம்மதம் தானே என்று சொல்லத் தலைப்பட்டான். எல்லா நதிகளும் ஒரே கடலில் போய்க் கலக்கின்றதுபோல எல்லா மதங்களும் கடைசியில் ஒரே கடவுளைப் போய்ச்சேரு கின்றன என்று நம்ப ஆரம்பித்துவிட்டான். எம்மதத் திலிருந்தாலும் பக்தியாய் இருந்தால் மோட்சம் கிட்டும் என்று கூறத் தொடங்கினுன். அதற்குக் கிறிஸ்துவை நம் பித்தான் ஆகவேண்டும் என்பதில்லை என்று சொல்லவும் முனைந்து விட்டான். இப் பயங்கரப் படுகுழியிலிருந்து சிலுவை நாதர் அவனை மீட்டு இரட்சிக்கவேண்டும் என்று ஊக்கமாக ஜெபித்தோம்.

கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றியும் அவருடைய ஒப்பற்ற இரட்சண்யத் தன்மையைப் பற்றியும் அவனிடம் பரிவோடு எடுத்துக் கூறினேன். இயேசுவின் நாமம் அன்றி மனிதரை இரட்சிப்பதற்குப் பூலோகத்தில் வானத்தின் கீழெங்கும் வேருெரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்பதைத் தெளிவாக எடுத்து இயம்பினேன். இயேசுவைத் தவிர வேறு இரட்சிப்பு இல்லையென்பதை விளக்கிக் கூறினேன். மேலும், இயேசு தான் இரட்சிப்பு என்றும், இயேசுவை அடைதலே இரட்சிப்பு அடைதல் என்றும் செப்பினேன், பல பிறவிகளுக்குப் பின்னரல்ல, தன்னை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு உடனே அக்கணத்தில்தானே இரட்சிப்பு அருளக்கூடியவர் சிலுவை நாதர் என்று தெளிவுப் படுத்தினேன். தன்னை ஆசித்த சகேயுவுக்கும், தன்னை விசுவாசித்த கள்ளனுக்கும் சிலுவை நாதர் அக்கணப்பொழுதில் தானே இரட்சிப்பை இலவசமாக ஈந்தார். தன்னை ஏற்றுக்கொள்ள விரும்பின சகேயுவைப் பார்த்து, இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று இயேசு இயம்பினுர். தனக்குக் கிருபை அருளவேண்டுமென்று வேண்டிக்கொண்ட கள்ளனைப் பார்த்து, இன்றைக்கு நீ என்னுேடேகூடப் பரதீசிலிருப்பாய் என்று திருவாக்கருளினுர். தன்னை நம்புகிறவர்களுக்கு உடனே இம்மானிடப் பிறவியில் தானே, ஆம், பல பிறவிகளுக்குப் பின்னர் அல்ல, இப்பிறவியில் தானே ஆன்ம ஈடேற்றம் தரவல்லவர் இயேசு ஒருவரே. காரணம், இயேசு ஒருவரே சத்தியமான, நித்தியமான, பரிசுத்தமான, ஒன்றுன கண்கண்ட தெய்வ இரட்சகராய் இருக்கிறுர்.

பரிசுத்த லூக்கா 4:18-19இல் கண்டுள்ளபடி, “கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறுர். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினுர். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும்,

சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப் படுத்தவும் நான் வந்துள்ளேன்'' என்று சொன்ன இயேசு நாதர் நொறுங்குண்ட நறுங்குண்ட இருதயத்தைப் புறக்கணிக்க மாட்டார். அதற்குப் பரம சுகமும் விடுதலையும், பேரானந்தமும் அருளிச் செய்வார். இப்பிறவியில் செய்த பாவத்திற்குப் பிறவிதோறும் பெருந்தண்டனையல்ல, அவரது சிலுவைப் புண்ணியத்தால் இப்பிறவியில் தானே ஈடேற்றமும் பேரின்பமும், சாந்தியும், மீட்பும் கிட்டும்.

ஆகவே, நல்வாழ்வு பெறுவதற்காக நாம் ஏன் பல பிறவிகள் எடுத்து, பல துன்பமுற்றுக்கொண்டே போக வேண்டும்? கிறிஸ்து நாதர் இப்பிறவியில்தானே இலவசமாகத் தருகின்ற இரட்சிப்பை நாம் ஏன் விசுவாசத்தோடு பெற்று அனுபவிக்கக் கூடாது? இது காறும் இயேசுவை நம்பின ஒருவரும் வெட்கப்பட்டுப் போனதில்லையே. நான் இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டதிலிருந்து என் இதயத்தில் சாந்தி பொங்கி வழிகின்றதே. என்னை இரட்சித்த இயேசு பெருமான் உன்னை ஏன் இரட்சிக்க மாட்டார். அவர் உனக்காக, உன் இரட்சிப்புக்காகச்சிலுவையில் மரிக்கவில்லையோ ? அவரை நீ விசுவாசித்தால் உன்னை இப்பொழுதே, இப்பிறவியில்தானே இக்கணப்பொழுதில்தானே இரட்சித்தருளுவார். இதை விட்டு விட்டு நீ ஏன் பல பக்தி முயற்சிகளில் பாடுபட்டு சாந்தி கிட்டாமல் வேதனை அடையவேண்டும்? இதுபோன்ற சத்தியங்களை அப்பிராமணனுக்கு நான் விரிவாகக் கூறினேன். ஆழ்ந்த சிந்தனையோடு என்னைவிட்டு அகன்ற அப் பிராமணன், சில நாட்களாக என்னண்டை திரும்பி வரவேயில்லை.

ஒரு நாள் மலர்ந்த முகத்தோடு திடீரென்று அப் பிராமணன் என்முன் வந்து நின்ருன். இயேசுவே அகில உலகத் தெய்வ இரட்சகர் என்று அகங்கனிந்து கூறினுன். அதோடு நிறுத்திக் கொள்ளாது, இயேசு என் இரட்சகர் என்று நெஞ்சில் கை வைத்துக்கூறினுன். அதோடும் நின்று விடாது, நான் கிறிஸ்துவைப் பகிரங்கமாக அறிக்கையிடுவதற்குப் பகிரங்கமாக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று துடித்து நின்ருன். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்செல்ல வேண்டும் என்பதை நான் அவனுக்கு நினைப்பூட்டினேன். தன் தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, மக்களையாவது கிறிஸ்துவைவிட அதிகமாய் நேசிக்கிறவன், பரலோக இராஜ்யத்திற்குப் பாத்திரவான் அல்லன் என்று தெளிவுபடுத்தினேன். கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அவன் அனுபவிக்க இருக்கின்ற எல்லா இன்னல்களையும் பாடுகளையும் அவனுக்குச் சுட்டிக்காட்டினேன். அவனே சிறிதும் தயங்காது, பெரும் மகிழ்ச்சியோடு இயேசு தெய்வம் எனக்காக எடுத்த சிலுவையை விட, நான் அவர் நாமத்தினிமித்தம் எடுக்கப் போகிற சிலுவை அதிகப் பாரமானது அல்ல. நான் சுமக்கும் சிலுவை என்னைச் சுமந்து சென்று, சிலுவை நாதரின் பாதம் சேர்க்கும் என்று நம்புகிறேன் என்று கூறினுன்.

ஈஸ்டருக்கு முந்தின சாயுங்காலத்தில் அவன் என்னிடத்தில் மீண்டும் வந்து, "என்னை மனிதருக்கு முன்பாக அறிக்கை செய்கிறவன் எவனே, அவனை நான் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை செய்ய வெட்கப்படமாட்டேன்" என்ற வேத வசனத்தை வாசித்து விட்டுத் தனது சட்டையைக் கழற்றிப் பூணூலை அறுத்து எறிந்துவிட்டான். ஈஸ்டருக்குப்பின் வந்த

செவ்வாய்க்கிழமையில் அவன் "கிறிஸ்தானந்த்" என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற்றான்.

இது நடைபெற்ற அதே 1918ம் ஆண்டில் இராமேஷ்வர், வைகுண்டேஷ்வர் முகர்ஜி என்ற இரு சகோதரர்கள் இந்து மார்க்கத்தினின்று மனம் திரும்பி கிறிஸ்தவர்களாகத் திருத்துவ ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவ்விரண்டு பேரும் இப்பொழுது கிறிஸ்தவக் குருக்களாகத் திருப்பணியாற்றி வருகின்றார்கள். அத்தியட்சராலயத்தில் கனோன் ஆகவும், கிருஷ்ணகரின் குருவாகவும் இராமேஷ்வர் திருத்தொண்டாற்றி வருகின்றார். அவர்களுடைய சகோதரனாகிய பாபுதாராதேஷ்வர் அவர்களுக்கு முன்னதாகவே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியிருந்தார்.

ஹிந்தியில் ஒரு பழமொழியுண்டு. "பட்டயத்தால் தலை சாயும்; இதயத்தால் இதயம் சாயும்". ஆம், இதயத்தைக் கொண்டுதான் இன்னொரு இதயத்தை இழுக்கலாம். ஒரு இதயத்தைக் கொண்டு இன்னொரு இதயத்தைக் கவரலாம். கிறிஸ்துவின் அன்பு இதயத்தால் இழுக்கப்பட்டுள்ள இதயங்கள் தான் எத்தனை! எத்தனையோ! எண்ணவும் முடியுமோ!

கிறிஸ்தவர்களின், கிறிஸ்தவ அன்பு இதயத்தால் கிறிஸ்துவிடம் இழுக்கப்பட்டுள்ள இதயங்கள் தான் எத்தனை! ஆம்! கிறிஸ்து வீற்றிருக்கும் இதயமே, இன்னொரு இதயத்தைக் கிறிஸ்துவிடம் இழுக்கவல்ல கருவியாகும். ஆம், சகோதரனே, இதை வாசிக்கும் உம்மைத்தான் கேட்கிறேன். உம் இதயத்தில் கிறிஸ்து கோயில் கொண்டுள்ளாரா?

இயேசுநாதர் தமது உயிரையே கிரயமாகக் கொடுத்து மனிதரின் இதயங்களை வாங்கிக்கொண்டார். தன் இதயத்

தைச் சிலுவையில் மாந்தருக்காக கொடுத்துவிட்டு, மாந்தரின் இதயத்தைத் தமக்காக பெற்றுக்கொண்டார். தமது அன்பைச் சிலுவையில் கொட்டிவிட்டு, மாந்தரின் அன்பை ஈட்டிவிட்டார். நாமும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி தான் பிறரைக் கிறிஸ்துவுக்கு ஆதாயமாக்கவேண்டும்.

பாரதம் பக்தி செறிந்த நாடு. முக்திபை நாடும் நாடு. தியாகம் ததும்பும் நாடு. அன்பை ஆசிக்கும்நாடு. அன்புக்கு அடிபணியும்நாடு. கிறிஸ்துவின் உயிர்த் தியாகத்தைப் பாராட்டும் நாடு. கிறிஸ்து தமது சிலுவை அன்பு என்னும் திறவுகோல்கொண்டே மனித இதயங்களைத் திறந்துள்ளார். நாமும் அதே கிறிஸ்தவ அன்பென்னும் சாவிகொண்டே பாரதப் பூட்டைத் திறக்கமுடியும். எதற்கும் திறக்கா இந்தியா, கிறிஸ்தவத் தியாக அன்பெனும் திறவுகோலால் திறக்கப்பட்டு விடும். ஆம், முதலாவது கிறிஸ்தவ அன்பு கிறிஸ்தவர்களின் இதயங்களில் பொங்கி வழியவேண்டும். கிறிஸ்தவத் தியாகம் நம் உள்ளங்களில் ஊற்றெடுக்கவேண்டும். நம்மைக் காணும் இந்துக்கள் அல்லது முகமதியர்கள் நம் வாயிலாகக் கிறிஸ்துவைக் கண்டு கொள்ளவேண்டும்.

இந்துக்களோ அல்லது முகம்மதியர்களோ கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் வருங்கால், நாம் அவர்களோடு பேச, போதிய நேரம் இல்லாது, திணறுவதையோ, அல்லது பொறுமையிழந்து காணப்படுவதையோ அல்லது வேறொரு நெருக்கடியான அவசர வேலையில் நமது மனம் ஈடுபட்டிருப்பதையோ, அல்லது சாப்பாட்டு வேளையாயிற்றே என்று துரிதப்படுவதையோ, அல்லது தேனீர் விருந்துக்குப் போகவேண்டுமே என்று துடிதுடிப்பதையோ அல்லது அவர்களோடு இதயப் பூர்வமாக பூரண அன்புடன் பேசாதிருப்பதையோ, அவர்கள் கண்டு கொண்டால், பின்னர் ஒருக்

காலும் அவர்கள் மீண்டும் நம்மிடம் வந்து கிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிய விரும்பார்கள். இது எனது வாழ்க்கையில் நான் கண்ட அனுபவம். இந்துக்கள் முகமதியர்களிடம் உள்ளன்போடு பழகவேண்டும். அவர்களை நேசிக்க வேண்டும். அவர்கள் இன்னல்களை நமது இன்னல்களாகக் கருதவேண்டும். அவர்கள் வாழ்க்கைப் பிரச்சினை தீர்ப்பதில் நாம் அதிக ஆர்வம் காட்டவேண்டும். அவர்கள் பிறரால் அநியாயமாக இம்சிக்கப்படும்பொழுது, அவர்கள் நலனுக்காக நாம் அவர்களோடு பாடுபடவேண்டும். அவர்கள் துன்பத்தில் நாம் துன்புற்று, அவர்களுடைய இன்பத்திற்காக நாம் அவர்களுடன்கூடச் சேர்ந்து அரும் பாடுபட்டு உழைத்தால்தான் நமது வாயிலிருந்து புறப்படும் சுவிசேஷ செய்தியை அவர்கள் மனமார ஏற்றுக் கொள்வார்கள்.

கல்கத்தாவிலுள்ள சி. எம். எஸ். திருத்துவ ஆலயத்தின் குருவாக திருப்பணி ஆற்றிய கனம் லாங் ஐயரவர்கள் இந்து முஸ்லீம் தொழிலாளரின் நலனுக்காகப் பெரிதும் பாடுபட்டார். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவான் வேண்டி, பெரிதும் முயன்றுர். ஏழைத் தொழிலாளரின் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில் முனைந்து நின்றுர். அவரை அரசாங்கத்தார் சிறையில் தள்ளத்தக்கதாக அவ்வளவு தூரம் ஏழைப் பாட்டாளிகளின் சுபிட்சத்திற்காகப் பாடுபட்டார். கனம் லாங் ஐயரவர்களின் சிறைவாச விடுதலைக்காக இந்து முஸ்லீம்கள் அரசாங்கத்தைப் பெரிதும் வேண்டிக் கொண்டனர். கனம் லாங் ஐயரவர்களை ஏழைத் தொழிலாளர்கள் தங்களது தந்தை என்றே அன்புடன் அழைத்தனர். அவர் வாயிலாக கிறிஸ்தவ அன்பைச் சுவைத்தனர். அதன் பயனுக அநேகர் கிறிஸ்தவர்கள் ஆயினர். அவர்களுள் சிலர் கிறிஸ்தவக் குருமார்களாகவும் உபதேசிமார்களாகவும் திருத்தொண்

டர்களாகவும் திருப்பணி ஆற்ற முனைந்துவிட்டனர். அன்பைக்கொண்டே அன்பைச் சம்பாதிக்கலாம்.

சங்கை பெக்கன்ஹாம் வால்ஷ் அத்தியட்சரவர்கள் தேயிலைத் தோட்டத்து ஏழைத் தொழிலாளர்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவர்கள் துயரைத் தம் துயரமாக ஏற்றார். முதலாளிகள் இவ்வேழைத் தொழிலாளர்களை நன்முறையில் நடத்தத்தக்கதாக அத்தியட்சரவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலப்பல. அஸ்ஸாம் பிராந்தியத்தில் இந்துக்கள், முகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள், காலரா என்னும் பயங்கர தொத்து நோயால் அவதியுற்றபோது, அத்தியட்சரவர்கள் ஆற்றிய சேவையை அவர்களால் ஒருக்காலும் மறக்கமுடியவில்லை. இவ்வாறு அத்தியட்சரவர்கள் தன்னலங் கருதாது, தன் சுகத்தையும் பெரிதென்றும் பாராது, இந்து, முஸ்லீம் மக்களுக்காக அரிய கிறிஸ்தவத் தியாகச் சேவை ஆற்றியதன் பயனாக அநேக இந்து முஸ்லீம்கள் கிறிஸ்தவச் சமயத்தைத் தழுவினார்கள். அஸ்ஸாம், வங்காளம் போன்ற நாடுகள் கிறிஸ்துவின் மாட்சிமையை அறிய ஒரு சிறந்த வழி பிறந்தது.

வில்லியம் கேரி, மார்ஷ்மென், வார்ட், போன்ற பக்தர்கள் வங்காளத்தில் பங்கமில்லாச் சிறந்த கிறிஸ்தவத் தங்கங்களாக மிளிர்ந்தார்கள். வில்லியம் கேரி என்பவர் வங்காள மக்களோடு, தம்மையும் ஒன்றாக்கிக்கொண்டார். வங்காள மக்களைத் தம் மக்கள்போல் நேசித்தார். அவர்களைப்போல் உண்டு உடுத்தினார். அவர்கள் பேசின மொழியைத் தாம் பேசக் கற்றுக்கொண்டார். அவர்கள் பேசின வங்காள மொழியில் பரிசுத்த வேதாகமத்தை மொழி பெயர்த்துக் கொடுத்தார். அவர்களுடைய உடல், உள்ளம், இதயம் ஆகிய மூன்றின் வளர்ச்சிக்காக அதிக அக்கறை எடுத்துக்

கொண்டார். கல்விச்சாலைகளை நிறுவினர். வைத்தியசாலை ஏற்படுத்தினர். வங்காளத்தில் அச்சகம் ஸ்தாபித்தார். சன்மார்க்க நூல்கள் வெளியிட்டார். அனாதைச் சாலைகள் ஏற்படுத்தினர். குஷ்டரோகிகளுக்கு மருத்துவம் செய்தார். சிரம்பூரில் உலகம் போற்றும் உத்தமத் திருமறைக்கல்லூரி நிறுவினர். அதில் பயிற்சிபெற்ற அநேக இந்தியக் குருமார்கள் இந்தியா எங்கணும் சென்று, சுவிசேஷத் தீபத்தை ஜில்லென மிளிரச் செய்தனர். உடன்கட்டையேறுதல் சிசு விவாகம், பிரயாணிகளைக் கழுத்தை நெறித்துக் கொல்லுதல், விதவைகளைச் சோக உருவங்களாகச் செய்தல், போன்ற கொடிய பழக்கங்களை அகற்றுவதில் கிறிஸ்தவத் திருத்தொண்டர்கள் பெரிதும் சிரத்தை காட்டினர். இதனை வெகுவாய்ப் பாராட்டி, இராஜாராம் மோகன்ராயும் இத்தீமைகளை அகற்றுவதில் அதிகமாய் முனைந்து நின்றார். இத்தொண்டர்களின் திருப்பணியால், அநேக மூடப் பழக்கங்கள் ஒழிந்துபோயின. சமுதாயச் சீர்திருத்தம் ஏற்பட்டது. மக்களுக்கு ஒரு நல்ல காலம் பிறந்தது.

ஒருநாள் நான் எனது மனைவியாருடன் டாக்டர் ஜே. என். பார்குகார் மிஷனெரியின் இல்லத்தில் விருந்துண்ணுங்கால், அவர் கேட்ட ஒரு கேள்வி என் உள்ளத்தை உலுக்கிவிட்டது. சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது திடீரென்று பார்குகார் துரையவர்கள் என்னைப் பார்த்து இக்கேள்வி கேட்டார்கள். "பிரேமானந்த், நீர் ஒரு வெறும் இயந்திரம்போல் கிறிஸ்தவ சேவை ஆற்றுகின்றீரா அல்லது கிறிஸ்துவின் அன்பால் பொங்கி, கிறிஸ்துவுக்காக முழு இருதயத்தோடும், ஆர்வத்துடனும் உழைக்கின்றீரா? இக்கேள்வியைக் கேட்ட ஒய். எம். ஸி. ஏ. தேசிய மன்ற இலக்கிய அமைச்சரான டாக்டர் ஜேன் பார்குகார் மிஷனெரியார் தனக்குக் காத்திருந்த ஒரு கல்லூரித் தலைமைப் பதவியைக் கிறிஸ்துவுக்காக உதறிவிட்டு, இந்தியாவுக்குக்

கிறிஸ்துவை வழங்குவதில் முனைந்து நிற்பவர் ஆவர். சுவிசேஷ வேலையில் அதிக ஈடுபாடு உடையவர். இலக்கிய வாயிலாகக் கிறிஸ்துவை இந்தியருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற துடிப்புக்கொண்டவர். அவரது நினைவெல்லாம் கிறிஸ்து, அவரது சொல்லெல்லாம் கிறிஸ்து, அவரது செயலெல்லாம் கிறிஸ்து. இந்தியருக்குக் கிறிஸ்துவை வழங்குவதையே தமது வாழ்க்கையின் ஒரே நோக்கமாகக் கொண்டவர். அவரது கிறிஸ்தவப் பண்பு என்னை ஆட்டி அசைத்துவிட்டது. என் வாழ்க்கையை மீண்டும் கிறிஸ்துவுக்கென்று காணிக்கையாக தாரை வார்த்துவிட்டேன். வெறும் இயந்திரமாக அல்ல, எனது இதய பூர்வமாக இயேசுவை நேசித்து, ஆசித்து, சேவிக்க ஆரம்பித்தேன்.

அலெக்ஸாண்டர் டவ்ப் பண்டிதர் 1830-ம் ஆண்டில் கல்கத்தா வந்து சேர்ந்தார். கிறிஸ்துவுக்காக நெருப்பாக நிற்பார்! அப்பக்தர் இந்தியருக்குக் கிறிஸ்தவ வேத அறிவு புகட்டுவதில் அவர் அதிக ஆர்வம் படைத்தவர். அவர் நிறுவிய ஆங்கிலப் பாடசாலையில் வேத பாடம் அதிமுக்கியப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. இந்தியருக்குக் கிறிஸ்துவை வழங்குவதில் இவர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். இப்பக்தனது புனித வாழ்க்கையால் சாது மதுரநாத்போஸ் எனும் இந்துக்கனவான் கிறிஸ்தவராக மாறினார். சுவிசேஷ வாஞ்சை படைத்த சாது மதுரநாத்போஸ் தமது வழக்கறிஞர் வேலையையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைச் சுவிசேஷமாகக் கூறி அறிவிப்பான் வேண்டி, வங்காளத்து பாரித்பூர் மாவட்டத்திலுள்ள கோபால்குஞ்ச் எனும் பதிக்குச் சென்றார். அவ்வூரருகே ஆறு ஓடியது, ஆற்றின் கரையோரமாக ஒரு குடிசைபோட்டு, அங்கே எளிய துறவு வாழ்க்கை பூண்டார் சாது மதுரநாத்போஸ். சுற்றுப்புறத்தாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதும் ஜெப தியானத்தில் ஈடுபடு

வதும், பிணியாளிகளைச் சுகப்படுத்துவதும்தான் அவரது திருப்பணியாகத் திகழ்ந்தது. அக்கிறிஸ்தவ சாது சிறந்த ஜெப வீரராக வாழ்ந்தார். ஒருநாள் கனத்த மழை பொழிந்தது. ஆறு வெள்ளப் பெருக்கெடுத்தது. இன்னும், சிறிது நேரத்திற்குள் கோபால்குஞ்ச் ஊர் முழுவதும் ஆற்று வெள்ளத்தால் அடிபட்டுப்போகும் அவலநிலை அண்டியது. கோபால்குஞ்ச் ஊர் மக்கள் சாதுவின் குடிசை முன் ஓடி வந்தனர். மனம் கொதித்து நின்றனர். மார்பில் அடித்துப் புலம்பினர். சாதுவை நோக்கி முறையிட்டனர். "சாது அவர்களே, உமது இயேசு பகவான் எங்களை இந்த ஆற்று வெள்ளத்தினின்று காப்பாற்றுவாரானால், நாங்கள் அவரை ஒப்பற்ற உயிருள்ள தெய்வமாக ஒப்புக்கொள்ள தயாராயிருக்கிறோம். எங்கே பார்க்கலாம்? உமது கிறிஸ்துவின் ஆற்றலை!" என்று சவால் விடுத்தனர் அக்கிராம மக்கள்.

சாது மதுரநாத்போஸ் தமது குடிசையின் வாயிலை அடைத்தார். உள்ளே அமர்ந்தார். ஊக்கமாக ஜெபித்தார். இரா முழுவதும் ஜெபித்துக்கொண்டே இருந்தார். அந்த நீதிமானின் ஊக்கமான ஜெபம் வான லோகத்தையே அசைத்துவிட்டது. "என் நேச இயேசுவே, என்னை மீட்டவரே, எனக்காகச் சிலுவையில் உயிர் கொடுத்தவரே, என்னைக் கண்மணிபோல் நேசிக்கின்றவரே, என் ஆருயிர்த் தெய்வமே, உயிருள்ள ஒன்றான மெய்க் கடவுளே, கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்று வாக்களித்தவரே, என் நாமத்தினால் நீங்கள் வேண்டிக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு அருளிச் செய்யப்படும் என்று உரைத்தவரே, இதோ, உமது அடியானின் விண்ணப்பத்திற்குச் செவி கொடுத்தருளும். ஆற்றின் வெள்ளத்தினின்று இந்தக் கோபால்குஞ்ச் ஊராரை இரட்சித்தருளும். இன்றேல், என்னைக் கொன்று போட்டுவிடும். இந்த ஆற்று

வெள்ளம் சீறிஎழுந்து முதலாவது, என் குடிசையை அழித்தொழிக்கட்டும். இவ்வூராரின் உயிரை வாங்குமுன் என் உயிரை வாங்கட்டும் இந்த ஆற்றுவெள்ளம். ஆற்று வெள்ளத்தை அடக்கமுடியவில்லையே இக்கிறிஸ்துவுக்கு என்று இக்கோபால்குஞ்ச் மக்கள் கூறும் அவச்சொல் என் செவியில் கிட்டுமுன் என் உயிர் போகட்டும். இவ்வூராரில் சிலர் பெயரேனும் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படாவிடின், என் பெயரை மட்டும் உமது ஜீவ புஸ்தகத்தினின்று கிறுக்கிப் போடும் கிறிஸ்துவே. கோபால்குஞ்ச் கிராமத்தை இவ்வாற்று வெள்ளத்தினின்று நீர் அவசியம் இரட்சித்துத்தான் ஆகவேண்டும். இன்றேல் என்னை வாரிக்கொண்டு போய்விடும். கடலை அடக்கியவரே, உமக்கு இந்த ஆற்றை அடக்க முடியாதோ? உலகத்தைப் படைத்தவரே, உமக்கு இந்த வெள்ளத்தை அடக்கி ஆளமுடியாதோ?'' என்று பலவாறுக ஊக்கத்துடன் ஜெபித்துக் கொண்டிருக்கையில், அவ்வூர் மக்கள் அவரிடம் மீண்டும் வந்து, குடிசையின் வாயிலைத் தட்டினார்கள். ''சாது அவர்களே, நீர் கும்பிடும் தெய்வம் சர்வவல்லவர். ஆற்று வெள்ளம் எங்கள் ஊருக்கு நேராக வந்து, எங்களை வாரி அடித்துக்கொண்டு போகாமல், நேர் எதிர் திசையில் திரும்பிப் போய்விட்டது. ஆற்று வெள்ளத்தை அடக்கி ஆண்டு, எங்கள் உள்ளத்தைக்கொள்ளை கொண்ட கிறிஸ்து பகவானே, இனி எங்கள் தெய்வம்.'' என்றுகூறி, நூற்றுக்கணக்கான பேர் அன்று அந்த ஆற்று நீரில் கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம்பெற்று கிறிஸ்தவர்கள் ஆனார்கள். கோபால்குஞ்ச் கிராமம் கிறிஸ்தவக் கிராமமாக மாறியது. அங்கு ஒரு கிறிஸ்தவக் கோவில் எழுந்தது. கிறிஸ்தவப் பாடசாலை முளைத்தது. கிறிஸ்துவின் நாமம் அங்கு மகிமைப்பட்டது. கிறிஸ்துவின் சிலுவைக் கொடி அங்கு ஓங்கிப் பறந்தது. இன்று ஏன் இவ்வாறு நம்மகத்தே சிலுவைக்கொடி ஓங்கிப் பறக்கவில்லை?

சாது மதுரநாத்போஸ் போன்ற சிறந்த கிறிஸ்தவ வீரர்கள் தற்காலத் திருச்சபையில் ஆயிரமாயிரம் எழும்பவேண்டும். பலத்த கிறிஸ்தவ விசுவாசிகள் திருச்சபைக்கு வேண்டும். இதை வாசிக்கும் நண்பரே, நீர் ஏன் அத்தகைய மகத்தான விசுவாசியாகத் திகழக்கூடாது?

ஆக்ஸ்போர்ட் மிஷனில் திருப்பணி ஆற்றிய தந்தை இ. எப். பிரௌன் கல்கத்தா வாசிகளுக்கு ஒரு உண்மையான தந்தையாகவே மாறிவிட்டார். "ஏழைப் பங்காளன் என்ற பெயரும் பெற்றார். கல்கத்தாவின் சேரி வாழ் மக்களுக்கும், வீதிவாழ் மக்களுக்கும், குடிசை வாழ் மக்களுக்கும், தந்தை பிரௌன் உண்மையில் ஒரு தந்தையாகவே திகழ்ந்தார். அவர் ஒருநாளும் மேல் வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்வதில்லை. கீழ் வகுப்பு புகை வண்டிகளில் பாமர மக்களோடு சேர்ந்து அவர் பயணம் செய்தார். எளியவர்களோடு, மகிழ்ச்சி ததும்ப உரையாடுவார். அவர்கள் கையோடு கைகோர்த்து, தோளோடு தோள்சேர்த்து, உவப்புடன் தெரு வீதிகளில் அவர் குசாலாகத் திரிவதைக் காண்பதே ரம்மியமாயிருக்கும். அவர் ஒருகால் சீமையினின்று ஓய்வு பெற்றுத் திரும்பியபொழுது அவரை வரவேற்க துறைமுகம் சென்றவர்களில் பெரும்பாலோர் ஏழை எளியவர்களே! ஏழைகளைக் கண்டதும், உள்ளம் தழைத்தார் அத்திருத்தொண்டர். மனம் பூரித்தார் அம்மிஷனெரியார். இதயம் குழைந்தார் அந்த இயேசுதாசர். கனவான்களை முதலாவது கண்டு கைகுலுக்காது, ஏழை எளியவர்களிடம், ஓடோடிச் சென்று அவர்களைக் கட்டி அணைத்துக் கொண்டார். இம்மட்டற்ற அன்பு படைத்த பக்த சிரோமணி! இக்கிறிஸ்தவ அன்புக் காந்தத்தால் எத்தனையோ இந்துக்களும் மகமதியர்களும் கிறிஸ்துவின் பால் இழுக்கப்பட்டார்கள்.

தற்காலத் திருச்சபையினருக்கு இத்தகைய ஆன்மத் தாகம் இல்லையே. பசி, தாகமற்ற சரீரம் நலிந்துபோவது போல், சுவிசேஷப் பசிதாகமற்ற திருச்சபையும் நலிந்து மெலிந்து போய்விடும். நமது முன்னோர்கள் கிறிஸ்துவைக் கண்டு, அவரைத் தங்கள் நாயகராக ஏற்றுக்கொண்டு, தங்கள் பூர்வீக இந்து முஸ்லீம், சீக்கிய மதங்களை உதறிவிட்டு, கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். ஆனால், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் ஏன் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்று கேட்பின், கிறிஸ்துவைத் தங்கள் சொந்தத் தெய்வ இரட்சகராக கண்டதினால் அல்ல, அவர்கள் பெற்றோரின் மதம் கிறிஸ்தவ மதமாக இருந்தபடியால்தான் அவர்கள் பேர்க் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆகவே தற்காலக் கிறிஸ்தவர்களுக்கு அத்தியாவசியம் கிறிஸ்து வேண்டும். அவர்களை உயிர்ப்பித்துப் பரிசுத்தமாக்கப் பரிசுத்தாவியானவர் வேண்டும். முதலாவது அவர்கள் இதயத்தில் கிறிஸ்து கோவில் கொள்வாராயின், பின்னர் அவர்கள் கிறிஸ்துவைப் பிறருக்கு வாரி வழங்குவதில் முனைந்து நிற்பார்கள். திருச்சபையின் தூக்கத்திற்குக் காரணம், அது கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களால் நிறைந்திருப்பதே. அன்பரே, உமது இருதயத்தில் கிறிஸ்து உண்டா? கிறிஸ்துவிடமிருந்து மகத்தான அதிசயங்களை விசுவாசத்தால் அள்ளி எடுத்துக் கொள்வோம். கிறிஸ்துவுக்காக மகத்தான காரியங்களைச் சாதித்து நிற்போம். நீ பிறருக்குக் கிறிஸ்துவை எவ்வளவுக்கெவ்வளவு வாரி வாரி வழங்குகின்றாயோ, அவ்வளவுக்கவ்வளவு உன் வாழ்க்கையின் பயன் வளம் கொழிக்கும்!

ஐந்தாம் அதிகாரம்

குஷ்டரோகிகளுக்குத் தொண்டு செய்தல்

கல்கத்தாவில் கோப்ரா என்னும் இடத்தில் ஆல்பர்ட் விக்டர் குஷ்டரோக வைத்தியசாலே குஷ்டரோகிகளுக்குச் சேவையாற்றி வந்தது. அங்கு இந்திய ஐரோப்பிய குஷ்ட ரோகிகள் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களுக்குள் திருப்பணியாற்ற ஆங்கில குருமார்கள் இல்லே. ஆகவே, பிரதம அத்தியட்சரான லெப்ராய் என்பவர் குஷ்டரோகிகள் மத்தியில் திருப்பணியாற்ற என்னே நியமித்தார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லே. குஷ்டம் என்ற பதத்தை உச்சரிப்பதற்கே அஞ்சி நடுங்குபவன் நான். குஷ்டரோகிகளுக்குச் சேவை செய்வதென்றால் என்னால் நினேத்து பார்க்கக்கூடப் பயங்கரமாய் இருந்தது. என் மனேவி இதுகேட்டு முதலாவது அஞ்சி ஒடுங்கிப் போனாள். ஆரம்பத்தில் எங்கள் இருவருக்கும் குஷ்டரோகச் சேவையை நினேத்தாலே குலே நடுங்கிவிடும். குஷ்டரோகம் என்னேப் பற்றிக்கொள்ளுமே என்ற பயத்தால் எழுந்த திகில்தான் அது. ஆனால், நான் நேசித்த இயேசு நாதர் குஷ்டரோகிகளேக் கண்டு அஞ்சி ஒதுங்கி ஓடவில்லேயே. அவர்கள் கிட்டவந்து, தொட்டு அவர்களுக்குச் சுகம் கொடுத்து அவர்களே மகிழ்ச்சி ஆக்கினாரே. பாவக் குஷ்டத்தில் நசித்துப் போய் இருந்த என்னே ஆண்டவர் தொட்டு ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டாரே. நான் ஏன் சரீரக் குஷ்டரோகிகளேக் கண்டு மிரண்டு ஓடவேண்டும். குஷ்டரோகிகளேத் தொட்டு, சுகமாக்கின கிறிஸ்துவை வழிபடும் கிறிஸ்தவக் குருவாகிய நானே குஷ்டரோகிகளுக்குச் சேவை செய்ய முன் வராவிட்டால், பின்னே வேறு யார் அவர்களேத் தீண்டுவார்கள் ?

"இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்'' என்று இயேசு நாதர் அறைகூவும் சத்தம் என் காதுகளில் தொனித்தது. சி.எம்.எஸ். காரியதரிசியாகிய கனோன் சாண்டிஸ் ஐயரவர்கள் மீண்டும் இத் தொண்டில் நான் ஈடுபடுமாறு தூண்டியபோது, நான் தயங்காது இத் திருத்தொண்டை ஏற்றுக்கொண்டேன். என் மனைவியும் இதற்கு மன உவப்புடன் இசைந்தாள். ஆண்டவர் எங்களோடு இருந்தார். இத் திருப்பணியை ஆசீர்வதித்தார்.

அக் காலத்தில் கோப்ராவில் உள்ள இந்தக் குஷ்ட ரோக மருத்துவச்சாலை ஒரு சிறைச்சாலை போல் இருந்தது. உள்ளே சிகிச்சை பெற்றுவந்த குஷ்டரோகிகள் ஜன சமுதாயத்தினின்று முற்றிலும் ஒதுக்கப்பட்டு, குஷ்டரோக வைத்தியசாலைக்குள் சிறைவாசம் செய்ய நேரிட்டது. அந்த மருத்துவசாலையைச்சுற்றி ஓர் உயரமான கோட்டை எழும்பி நின்றது. அக்கோட்டை வாயிலில் போலீஸ்காரர் இரவும் பகலும் காவற் பணியாற்றினர். உள்ளே அடைக்கப்பட்டிருந்த குஷ்டரோகிகளுக்கு எவ்விதஉரிமையும் அளிக்கப்படவில்லை. வெளியிலிருந்து அவர்களைத் தேடிப் போவாருமில்லை. அவர்களைத் தேற்றுவாருமில்லை. எவ்வித ஆறுதலுமற்ற அனாதைகள்போல அவர்கள் வறண்ட சிறைவாசம் செய்தனர். வாழ்வே இருண்டுபோய் இருந்தது. அவர்களுக்கு நம்பிக்கை ஒளியே இல்லையா? கிறிஸ்து ஒருவரே அவர்களுக்கு ஒரே ஒப்பற்ற நம்பிக்கையாவார். அவர்களுக்குக் கிறிஸ்துவை வழங்க ஆசித்தேன்.

அவர்கள் அடைபட்டிருந்த ஓங்கி உயர்ந்த மதிலைச் சற்றுக் குள்ளமாக்க முயன்றேன். போலீஸ் காவலை அகற்றிவிட ஒழுங்கு செய்தேன். ஒழுங்காகச் சென்று அவர்களைப் பார்வையிட்டு வந்தேன். ஐரோப்பிய பார்வையாளர்கள்

அமரும் அறையில் காலை ஆராதனையும் மாலை ஆராதனையும் நடத்திவந்தேன். ஆங்கிலம் வங்காளம் என்ற இரு மொழிகளிலும் கிறிஸ்தவ வழிபாடு நடத்திவந்தேன். அப்பொழுது அக் குஷ்டரோக மருத்துவசாலையில் ஒரு சிற்ருலயம்கூட இல்லை. வங்காள அரசாங்கத்திற்கு மனு செய்து, இங்கு ஒரு சிற்ருலயம் கட்டப்படுவதற்கு ஆவன செய்தேன். பிரதம அத்தியட்சர் இச் சிற்ருலயத்தைப் பிரதிஷ்டை செய்தார். அதன் பின்னர், அச் சிற்ருலயத்தில் கிறிஸ்தவ ஆராதனை ஒழுங்காக நடைபெற்று வந்தது.

குஷ்டரோக விடுதியிலுள்ள அறைகளைப் பார்வையிட்டுத் தனித் தனியாக ஒவ்வொரு குஷ்டரோகியையும் நான் விசாரித்து வந்தபொழுது அவர்கள் நம்பிக்கையற்றவர்களாக உற்சாகம் இழந்து, அனுதைகள்போல் காட்சியளித்தனர். கிறிஸ்துமஸ் சமீபத்தில் நடைபெற இருந்தும் கூட அவர்களுக்கு அப்பண்டிகை மகிழ்ச்சியாகவே இல்லை. சோர்ந்து கிடந்தார்கள். கிறிஸ்துமஸ்ஸையொட்டி அவர்களுக்கு ஒரு பண்டிகை விருந்து கொடுத்து, அவர்களை மகிழ்ச்சியாக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். இத் தீர்மானத்தைப் பற்றி என் மனைவியிடமும் சொன்னேன். இது எங்களுக்கு அதிகப் பிரியமாயிருந்த போதிலும் அதற்குப் போதிய பொருள் வசதியில்லாததைக் கண்டு வருந்தினேம். எனினும், எப்படியாவது கிறிஸ்துமஸ் விருந்து கொடுத்து, குஷ்டரோகிகளை மகிழ்ச்சியாக்க வேண்டுமென்று முடிவு கட்டினேம். இது காரியமாக இத்தாலிய ரொட்டிக் கடைக்காரர்களான பிர்போ கம்பெனியாரைச் சந்தித்துப் பேசச் சென்றிருந்தேன். இதற்கு எவ்வளவு பணம் ஆகுமென்று கம்பெனி முதலாளியான திரு. பிர்போ அவர்களைக் கேட்டபொழுது, அவர் தாம் எவ்விதப் பணமுமின்றி இலவசமாகவே குஷ்டரோகிகளுக்கு விருந்தளிக்க முன்வந்தார். அன்றிலிருந்து

இதுகாறும் ஆண்டுதோறும் இக் குஷ்டரோகிகளுக்கு இலவச விருந்து நடத்தி வருகின்ருர் திரு. பிர் போ அவர்கள். கிறிஸ்மஸ் விருந்தன்று குஷ்டரோகிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாட்டுக்கள் பல பாடி, கிறிஸ்மஸ் தாத்தா வேடம் பூண்டு, கிறிஸ்மஸ் வெகுமதிகள் கொடுத்து மகிழ் கொண்டாடுகின்ருர்கள். அவர்களே பஜனை நிகழ்த்துகின்ருர்கள். கண்ணிழந்த குஷ்டரோகியான மார்த்தாள் என்பவள் இனிமையாகப் பாடுவாள், பஜனை நடத்துவாள், பிரசங்கம் செய்வாள். அவளுடைய சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கை மூலமாகச் சில குஷ்டரோகிகள் கிறிஸ்தவர்கள் ஆனுர்கள்.

கிறிஸ்துமஸ் விருந்ினுக்குப் பின்னர் ஒவ்வொரு அறைக்கும் சென்று தனித் தனியாக ஒவ்வொருவருக்கும் நான் கிறிஸ்துமஸ் வாழ்த்து வணக்கம் செலுத்துவது வழக்கம். அவ்விதம் நான் அறை அறையாகச் சென்றுவிட்டு இன்னொரு அறைக்கு வந்தபொழுது, அக் குஷ்டரோகி குழந்தைபோல் விம்மி, விம்மி அழுது, தன்னையறியாமலே மகிழ்ச்சி உணர்ச்சி வயப்பட்டு என் கையைப் பிடித்துக் கொண்டு, "பிரேம்மானந் அவர்களே, நீங்கள் எங்கள் மத்தியில் வருங்கால், நாங்கள் அருவருக்கப்படத் தக்க குஷ்டரோகிகள் என்பதைக் கூட மறந்துவிடுகின்ருேம். எங்களை நேசிக்கும் கிறிஸ்து தெய்வம் எங்களோடு கூட இருக்கிருர் என்ற சத்தியத்தை உணர்ந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிடுகின்ருேம். ஆம், எங்களை யார் வெறுத்துத் தள்ளிஞலும், கிறிஸ்துநாதர் ஒருக்காலும் எங்களைப் புறக்கணித்துத் தள்ளமாட்டார். எங்களுக்குக் கிறிஸ்துவின் கிருபை போதும்" என்று கூறிஞன். அக்கூற்று என் உள்ளத்தை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. என் மனத்தை ஓர் அசை அசைத்துவிட்டது. நானும் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தேன். இயேசு நேசரின்

அன்பை என் அகத்தில் அடக்கிக்கொள்ள என்னால் முடிய வில்லை. நேரே வீட்டுக்குச் செல்லாமல் கோவிலுக்குச் சென்று, பரிசுத்த ஸ்தலத்தில் அடியற்ற மரம்போல் சாஷ் டாங்கமாக விழுந்து, இயேசு பகவானை என் இதய பூர்வ மாகத் தொழுதுகொண்டேன். கண்ணீர் பெருக்கெடுத்து ஓட, பக்தி பொங்கி வழிய, இயேசுவின் சிலுவைப் பாதத் தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு வெகு நேரம் கிறிஸ்து வின் அன்பில் ஆழ்ந்துவிட்டேன். நேரம் போனதே தெரிய வில்லை. இதுபோன்று குஷ்டரோகிகள் மத்தியில் மனங் கூசாது மாபெரும் மகத்தான கிறிஸ்தவ சேவையாற்ற வரம் தந்தருளல் வேண்டும் என்று கிறிஸ்துவைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டேன். கிறிஸ்துவின் தரிசனம் கண்டேன். அவருடைய தழும்புற்ற கைகளையும், கால்களையும், விலா வையும் கண்டேன். காயமுற்ற அக் கரம் சாஷ்டாங்கமாக விழுந்துகிடந்த என்னைத் தடவிக் கொடுத்தது. "மகனே, நான் உன்னோடேகூட இருக்கின்றேன். திடமனதாயிரு. குஷ்டரோகத்தால் அவதியுறும் இவர்களுக்கு என் நாமத்தி னால் செய்யும் சேவை எனக்கே செய்த சேவையாகும். இவர்கள் எக்காலமும் குஷ்ட ரோகத்தால் வருந்திக் கிடப் பது என் விருப்பம் அல்ல. நான் பரம வைத்தியர். என் னில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு அவ்வியாதியினின்றும் பரம சுகம் கிட்டும். என் நாமத்தினிமித்தம் இக் குஷ்ட ரோகிகளுக்கு எதைச் செய்கின்றாயோ அதை எனக்கே செய்கின்றாய்" என்று கூறினார்.

இயேசு நாதர் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்த என்னைத் தூக்கி நிறுத்தி, ஆசீர்வதித்தார். அத் தேவாசீர் வாதத்தோடு கண்களில் நீர் மல்க, நான் இல்லம் ஏகினேன். எனது மனைவியார் அயர்ந்த நித்திரையில் இருந்தார். மணி நடுச் சாமத்திற்கு மேல் ஆகியிருந்தது. மனுஷன் அப்பத் தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து வரும்

ஒவ்வொரு வார்த்தையினுலும் பிழைப்பான் என்பது எவ்வளவு உண்மை. அன்று எனக்கு உணவு உண்ண அவசியம் இருந்தது இல்லே. உணவு உண்ணுமலே பேரின்பம் பொங்க, படுக்கைக்குச் சென்றேன். கிறிஸ்துவே எனக்கு ஜீவ அப்பம். அவரே எனக்கு ஜீவ தண்ணீர் ஆனர். பரிசுத்தாவியானவர் என் இதயத்தினின்று ஊற்றெடுத்துப் பொங்கி வழிந்துகொண்டிருந்தார். குஷ்டரோகிகள் பால், எனக்கு ஒரு தனி அன்பு பிறந்தது. பழைய பயம் எல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோயிற்று. குஷ்டரோகத் தொண்டில் எனக்கு ஒரு தனி ஆர்வம் ஏற்பட்டது. என் வாழ்க்கையை அதற்கென்று அர்ப்பணம் செய்தேன்.

போப்ராவிலுள்ள ஆல்பர்ட் விக்டர் குஷ்டரோக விடுதியைத் தவிர்த்து, கல்கத்தா பட்டணமெங்கும் குஷ்டரோகிகளேக் கவனிப்பதற்கு வேெருரு மருத்துவச்சாலே இருந்ததில்லே. சேரிகளிலும், கோவில்கள் அருகிலும், கடையோரங்களிலும், சந்தை வீதிகளிலும் இன்னும் எவ்வளவோ குஷ்ட ரோகிகள் தேடுவாரற்றுக் கிடந்தனர். அவர்கள் பரம ஏழைகளாய் இருந்தபடியால், பிச்சையெடுத்து வயிறு வளர்த்தனர். யாசகம் தேடி அவர்கள் தெரு வீதிகளிலெல்லாம் அலேவர். மக்கள் கூடும் கூட்டங்களினின்றும் பிச்சை வாங்குவர். தடி கொண்டு நடந்தோ அல்லது முழங்காலாலும் கைகளாலும் நடந்தோ அல்லது தவழ்ந்து ஊர்ந்தோ அவர்கள் பிச்சை வாங்கித் திரிவர். பொதுமக்கள் இவர்களே வெறுத்துப் புறக்கணிப்பார்களே தவிர, இவர்கள் பொது நன்மைக்காகக் குஷ்ட நிவாரண விடுதிகள் நிறுவ முன்வந்தார்கள் இல்லே. இவர்களே மனிதர்கள்தாம் வெறுத்துத் தள்ளுகிருர்களே தவிர கடவுள் இவர்களே ஒருநாளும் புறக்கணியார். ஆகவே இயேசுவின் நேசத்தைப் பற்றி இவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறி அறிவிப்பான் வேண்டி, அவர்களுக்கு ஒரு

ஆராதனை நடத்தத் தீர்மானித்தேன். வேறெங்கும் தேவாராதனைக்குரிய இடம் இல்லாதுபோகவே, கனேன் சாண்டிஸ் ஐயரவர்களுடைய அன்பான அனுமதியின்பேரில் **மனித் தோலா** கல்லறைலுள்ள சி. எம். எஸ். சிற்றால யத்தைக் குஷ்டரோகிகளுக்கென்று விசேஷித்த ஆராதனை கள் எழும்புவதற்குப் பயன்படுத்தினேன். ஞாயிற்றுக் கிழமைதோறும் மத்தியான நேரத்தில் அக் கல்லறைத் தோட்டத்திலுள்ள தேவாலயத்தில் விசேஷித்த ஆராதனை கள் நடத்திவந்தேன். முதலாவது சில கிறிஸ்தவக் குஷ்ட ரோகிகள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். வர வர எண்ணிக்கை அதிகமானது. இந்துக் குஷ்டரோகிகளும் இவ் வாராதனைக்கு வர ஆரம்பித்தனர். இக்குஷ்ட ரோகிகளுக்கு வெறும் பிரசங்கம் மாத்திரம் செய்துவிட்டு, அவர்களை வெறுமனே அனுப்ப எனக்குப் பிரியமில்லாதிருந்தது. கிறிஸ்துவின் சிலுவை அன்பைப் பற்றி வாயால் பிரசங்கம் செய்யும் நான், எனது செயலாலும் அதை சாதிக்கவேண் டாமா? அவர்களுடைய குஷ்டரோகத்திற்கு என்னால் இயன்றவாறு மருத்துவம் செய்ய முயன்றேன். முதல் இரண்டாண்டுகளாகக் கல்கத்தா நகராண்மைக்கழகத்தினர் இக் குஷ்டரோக நிவாரணத் தொண்டில் சிறிதும் உதவி செய்யவில்லை. ஆகவே, 1923ம் ஆண்டு இறுதியில் அக் கல்லறைத் தோட்டத்து ஆலயத்திலுள்ள ஓர் அறையில் குஷ்டரோக சிகிச்சை செய்ய ஆரம்பித்தேன். எனது பள்ளிக்கூட நிர்வாகத்தினர் இம் மருந்துகளை வைப்பதற்கு ஒரு அலமாரி தந்தனர். பி. கே. பால் கம்பெனியார் நன் கொடையாக நல்ல மருந்துகள் தந்து உதவினர். ஒரு கிறிஸ்தவ டாக்டர் தாமே குஷ்டரோகியாகிவிட்டபடியால், குஷ்டரோகிகளுக்கு மருத்துவப் பணியாற்றத் தயங்காது முன்வந்தார். அவர் தனக்குச் சம்பளமே வேண்டாமென்று மறுத்துவிட்டார். இவ்வாறு அற்ப ஆரம்பமாக ஆரம்பிக்

கப்பட்ட அக் குஷ்டரோக சிகிச்சை சாலையை அப்பொழுது பிரதம அத்தியட்சராய் இருந்த பாஸ் வெஸ்ட் கார்ட் பிரதிஷ்டை செய்ய, 'தொடக்க விழா' நிகழ்த்திஞேம். அன்று 300 பிச்சைக்காரக் குஷ்டரோகிகள் அத் தொடக்கவிழாவில் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.

இதனைக் கண்கூடாகக் கண்ட ரோட்டரி குழுவினர் இத் தொண்டில் அதிக அக்கறை காட்ட ஆரம்பித்தனர். தினசரி பத்திரிகைகளும் இதில் அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்துவிட்டன. பிச்சைக்கார குஷ்டரோகிகள் எல்லாம் ஒன்று திரண்டு ஒரு கூட்டமாகச் சேர்ந்து போய்க் கல்கத்தா நகராட்சி மன்றத்தினர் குஷ்ட நிவாரண விடுதியை ஆதரிக்குமாறு முறையிட்டனர். அதன் பயனுக 1924ம் ஆண்டிலே இக் கல்லறை ஆலயத்தில் நிறுவப்பெற்றுள்ள குஷ்ட நிவாரண விடுதிக்கு உதவித் தொகையாகக் கல்கத்தா நகராண்மைக் கழகம் 3000 ரூபாய் சி. எம். எஸ். சங்கத்தாருக்கு நன்கொடை அளித்தது. சிகிச்சைச் சாலையின் வேலை நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவந்தது. நூற்றுக் கணக்கான குஷ்டரோகிகள் இங்குச் சிகிச்சை பெற்று வந்தனர். நூற்றுக்கும் மேலானவர்கள் ஆலய ஆராதனையில் ஒழுங்காகப் பங்கு பெற்று வந்தனர். ஆகவே, சிகிச்சைச் சாலையிலும், ஆலயத்திலும் இட நெருக்கடி ஏற்பட்டது. அதன் விளைவாகக் குஷ்டரோக சிகிச்சைச் சாலையை விரிவாக்கிஞேம். வங்காளக் கவர்னரும் கல்கத்தா நகராண்மைக் கழகமும் வங்காள வள்ளல்களும், இக்கட்டட நிதிக்குத் தாராளமாகப் பொருள் கொடுத்து உதவினர். ஒரு விஸ்தாரமான ஆலயமும் கட்டப்பட்டது.

கல்கத்தா மா நகரத்தின் தென் பாகத்திலுள்ள காளிகாட் கோவிலுக்குப் புண்ணிய யாத்திரை வருவோரிடம்

பிச்சையெடுத்துப் பிழைக்கும் அநேகக் குஷ்டரோகிகள் இருந்தனர். அவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை கொடுப்போர் இல்லை. ஆகவே, அந்தக் காலிகாட் கோவிலருகே இன்னொரு குஷ்டரோக நிவாரண விடுதி கட்டுவதற்குத் திட்டமிட்டேன். அதற்குக் கல்கத்தா நகராட்சிக் கழகம் அங்கீகாரமும் ஆதரவும் தந்தது. அத் தொண்டையும் ஆண்டவர் ஆசீர்வதித்தார். வங்காள அரசாங்கமும் இதற்குப் பொருளுதவி புரிந்து வந்தது. இதுபோன்ற தொண்டுகள் நகரமெங்கும், நாடெங்கும், பாரதம் எங்கணும் பரவி ஒரு குஷ்டரோகி கூட இல்லை என்ற உன்னத நிலை ஏற்படவேண்டுமென்பதே என் இதயத் துடிப்பு.

1936ம் ஆண்டிலே என் உடல்நிலை நலிய ஆரம்பித்து விட்டது. காரணம், ஓய்வு இல்லாத வேலைதான. நான் பட்டணத்திலுள்ள இரு திருச்சபைகளுக்குக் குருவாகப் பணியாற்றவேண்டும். திருப்பணி புரியவேண்டும். எட்டு பகல் இரவு பாடசாலைகளை மேற்பார்வையிடல் வேண்டும். தொழிலாளிகள் மிக்குள்ள ஒரு வட்டாரத்தில் சுவிசேஷத் தொண்டாற்றவேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் வேண்டிய நிதியும் திரட்டவேண்டும். கண் பார்வை மங்கிக் கொண்டே வந்த என் மனைவியைக் கவனித்து வீட்டுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். சிகிச்சை பெற்றுவந்த நாலாயிரம் குஷ்ட ரோகிகளுள் 250 பேர் கிறிஸ்தவர்களாயிருந்தனர் கிறிஸ்தவர்களுக்கு ஆலய ஆராதனை நடத்துவதோடு மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கவேண்டும். அல்லும் பகலும் நான் அயராது உழைத்த காரணத்தால் கடைசியில் என் சுகத்திற்குப் பங்கம் விளைந்தது. நான் ஓய்வு எடுக்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. ஆகவே எனது உடல்நிலையின் காரணமாக வேலையினின்று ஓய்வு பெறவேண்டும் என்று சி. எம். எஸ். சங்கத்தாருக்கு விண்ணப்பித்தேன். அவர்கள்

முதலில் எனது விண்ணப்பத்தை ஏற்கத் தயங்கியபோதிலும் எனது உடல் நிலையின் காரணமாகக் கடைசியில் எனது விண்ணப்பத்திற்கு இசைந்தனர். எனது சேவையைக் கௌரவித்து, அக் குஷ்டரோக நிவாரண விடுதிகளுக்கு, "பிரேம்மானந்தா குஷ்டரோக சிகிச்சைச் சாலைகள்" என்று பெயர் சூட்டினர். ஆக்ஸ்போர்டு மிஷன் சகோதர இயக்கத்தைச் சேர்ந்த தந்தை ஷோர், நான் இதுகாறும் செய்து வந்த குஷ்டரோகத் தொண்டுதனை மேற்பார்க்க மனமுவந்து, ஒப்புக்கொண்டார். சி. எம். எஸ். சங்கத்தார் இத் தொண்டுதனில் பெரிதும் பங்கு கொண்டனர். தந்தை ஷோர் என்பவரின் அரும் பெரும் முயற்சியால் குஷ்டரோக சிகிச்சைச் சாலை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. 1940ம் ஆண்டிலே அப்புதிய சிகிச்சைக் கட்டடம் பிரதிஷ்டை செய்யப்பட்டபொழுது, பிரேம்மானந்தும் அப்பெரு விழாவில் கலந்துகொண்டு ஒரு பரவசமான பேருரை பொழிந்தார். பிரேம்மானந்த் குஷ்டரோகிகள் மத்தியில் ஆற்றிய மாபெரும் மகத்தான திருப்பணியைப் பாராட்டி அவருக்குச் 'சக்கரவர்த்தியின் வெள்ளி விழாப் பதக்கமும், கெய்சர் இ ஹிந்த் விருதும் அளிக்கப்பட்டன. குஷ்டரோகிகள் மத்தியில் பிரேம்மானந்த் ஏற்றிய தீபம் இன்றும் அணையாது ஜில்லெனக் கொழுந்துவிட்டு எரிகின்றன!

ஆறும் அதிகாரம்

ஒய்வு பெறல்

இந்தி மிஷன் திருப்பணியையும், பிரேம்மானந் குஷ்டரோக சிகிச்சைச் சாலை வேலையையும் விட்டுவிட்டு ஒய்வு பெறுவான் வேண்டி 1937ம் ஆண்டு இராஞ்சி நகர் சென்ருேம். அநேகக் கிறிஸ்தவ நண்பர்களும், இந்து அன்பர் களும், முஸ்லீம் சிநேகிதர்களும், இன ஜனத்தாரும், கௌரா புகைவண்டி நிலையத்தில் எங்கட்குப் பிரியா விடை தந்தனர். ஒருகால் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் எனது உற்ருர் உறவினரையும் இழந்து தன்னந் தனியாக கிறிஸ்தவச் சமயத்தைத் தழுவிக்கொண்ட எனக்கு எண் ணுக்கடங்காத இந்துச் சகோதர சகோதரிகளும், தந்தை தாய்மார்களும், அன்பர்களும்நண்பர்களும் பெருகிவிட்டனர். புகைவண்டி புறப்படும் சமயத்தில் கண்களில் நீர் பெருக் கெடுத்தோட ஒருவரை யொருவர் கட்டித் தழுவி, முத்த மிட்டுப் பிரியும் காட்சி, எங்கள் உள்ளத்தையே உருக்கி விட்டது. கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் தந்தையை யாவது தாயையாவது சகோதர சகோதரியையாவது வீட்டு விட்டவன் இம்மையில் நூறத்தனையாகப் பெற்றுக்கொள் வான் என்று இயேசு நாதர் கூறிய தீர்க்கதரிசனம் அப் படியே என் வாழ்வில் பலித்துவிட்டது. பி. ஜி. சகரியா என்னும் கல்லூரிப் பேராசிரியரின் இளம் மனைவியார் எங் களோடு கூட இராஞ்சிக்கு வந்து அங்குச் சௌத்தியா கிராமத்தில் நாங்கள் கட்டியுள்ள பந்த நிபாஸ் என்ற இல்லத்தில் எங்களோடு கூடத் தங்கியிருந்து மூன்று மாதக் காலமாக எங்களுக்குப் பெரும் துணை புரிந்தாள். அப்பொழுதுதான் திருமணமாகியிருந்த இக் கிறிஸ்தவத் தம்பதிகளின் தியாகந்தான் என்னே! என்னே!! அந்த

அன்புச் சேவையை நாங்கள் ஒருக்காலும் மறக்கவே முடியாது.

ரெபெக்காள் கால்கோ என்ற கிறிஸ்தவப் பெண் எங்களுக்குச் சிறந்த பணியாற்றி வந்தாள். பதினெட்டு ஆண்டுகளாக இந்த ரெபெக்காள் எங்களுக்கு ஆற்றிவரும் தொண்டுதனை நாங்கள் உயிர் உள்ளளவும் நன்றியோடு பாராட்டாமல் இருக்க முடியாது.

எங்கள் வீட்டுக்கு அருகே புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானக் கடையால் எங்களுக்குப் பெருந்தொந்தரவு ஏற்பட்டது. எங்கட்குப் பெரும் இடையூருய் இருந்த இந்த மதுபானக் கடையை அவ்விடத்தினின்று அகற்றுவதற்கு நான் இரண்டாண்டுக் காலமாகப் பெரும் முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. காங்கிரஸ் ஆட்சியால் மதுவிலக்கு ஏற்பட்டமை பற்றி நாம் பெரிதும் மகிழ்ச்சி கொளல் வேண்டும்.

சௌத்தியா கிராமத்துப் பந்தநீபாஸ் வீட்டை விற்றுவிட்டு லால்பூரில் **'சந்தியா'** என்ற புது வீடு கட்டிக் குடியேறினேம். சந்தியா என்ற எங்கள் வீட்டுக்கு ஏராளமான விருந்தினர் வருவர். உவப்புடன் எங்களோடு விருந்துண்பர். உல்லாசமாக எங்களோடு உரையாடுவர். கிறிஸ்துவைப் பற்றிக் கேட்டுத் தெரிவர். சமுதாய முற்போக்கு நலனுக்கான திட்டங்களை எங்களோடு சேர்ந்து அமைப்பர். எங்கள் வீடு பக்தர்கள் அனைவரின் முக்தி வீடாகக் கருதப்பட்டது. இவ்வீட்டுக்கு அருகேயிருந்த சிற்ருலயத்தில் ஒழுங்காக இறை வழிபாடு செய்துவந்தேன். இயேசுவைப் பற்றிச் சிந்திப்பதும் அவரைப் போற்றிப் புகழ்தலும், எம் இல்லத்திற்கு வருபவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றிக் கூறலும் எங்கள் பொழுது போக்காக அமைந்தன.

1940-ம் ஆண்டில் எனது மனைவியாரின் கண் பார்வை மங்கிப்போகவே, கண் சிகிச்சைக்காக நாங்கள் கல்கத்தா சென்றோம். டென்கான் வொயிப், கருவான் ஆகிய இரு ஆங்கில கண் வைத்திய நிபுணர்களும் எனது துணைவியாருக்குச் சிறந்த சிகிச்சை அளித்தனர். எனினும், ஒரு காசு கூட எங்களிடம் வாங்க மறுத்துவிட்டனர். எங்கள் ஜெபமே அவர்களுக்குத் தேவையான மாபெரும் ஊதியம் என்று கருதினர். கிறிஸ்தவ அன்பின் மாட்சிதான் என்னே! என்னே!

மீண்டும் என் வாழ்க்கைத் துணைவியாருக்குச் சுகவீனம் ஏற்படவே எஸ். பி. ஜி. வைத்திய சாலையினர் அவளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துச் சிகிச்சையளித்து வந்தனர். எனினும் எனது மனைவியாரின் இறுதி நாள் நெருங்கி வந்தது. அடிக்கடி வைத்தியசாலை சென்று, என் துணைவியாருக்குப் பரிசுத்த நற்கருணை பரிமாறி வந்தேன். அவளது மரணத் தருவாயில் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபொழுது, "எனது கணவரே, உமது வாழ்க்கையை மீண்டும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து உம்மால் இயன்ற திருப்பணியாற்றி வாரும். ஏழைப் பெண்களுக்கு ஒரு இல்லம் அமைத்து அவர்களை இன்புறுத்த வேண்டும் என்பதே எனது இறுதி அவா," என்று கூறி, தான் ஆசித்து நேசித்து சேவித்த இயேசு பகவானின் மார்பில் சாய்ந்தாள். அவளுடைய முகம் ஜில்லென மலர்ந்திருந்தது. இந்துக்களும், கிறிஸ்தவர்களும், ரோமன் கத்தோலிக்கர்களும் ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர்களும், லுத்தரன் கிறிஸ்தவர்களும் ஆகிய எல்லாப் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் ஒன்று திரண்டு வந்து, தக்க மரியாதையுடன் அவளை நல் அடக்கம் செய்தனர். எனது அருமை மனைவியாரான அனுக்கிரிஹிதா 42 ஆண்டுகளாக எனக்கும், பிறருக்கும், கிறிஸ்துவுக்கும் செய்துள்ள சேவையை எண்ணிப்பார்த்தால் அவள் ஒரு

சிறந்த புண்ணியவதி என்றுதான் பாராட்டவேண்டும். அவள் ஒரு படியாத மேதை என்று போற்ற வேண்டும். பள்ளிக்கூடப் படிப்பு அவளுக்கு அதிகம் இல்லாதிருந்த போதிலும், ஆங்கிலம், உருது, இந்தி, வங்காளம் போன்ற மொழிகளில் நல்ல புலமை படைத்தவள். இந்த நான்கு மொழிகளிலும் அவள் நன்ருக உரையாட வல்லவள். ஈவிரக்கம் படைத்தவள். உபசாரம் மிக்கவள். அன்னியரை உபசரிப்பதில் ஈடு இணையற்றவள். கிறிஸ்தவ அன்பு அவள் இதயத்தினின்று எப்பொழுதும் பொங்கி வழிந்து கொண்டே இருக்கும். தன்னலங்கருதாப் பிறருக்குரியவள். பிறரது துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்பவள். பிறர் இடர்களைவதில் முனைந்து நிற்பவள். கிறிஸ்தவத் திருப்பணியைச் செய்வதையே தன் கடனுகக் கொண்டவள்.

மதுபானக் கடைகளுக்கு முன்சென்று, குடித்துக் குடித்து கெட்டழிய வேண்டாம் என் மக்களே, என்று எலும்புருகக் கூறுவாள். வெறித்துத் திரிய வேண்டாம், போர் வீரர்களே என்று அவர்களுக்கும் புத்தி சொல்லுவாள். சிறைவாசிகளுக்கும் ஆறுதல் கூறி, சுவிசேஷத்தை அறைகூவி நிற்பாள். சமுதாயச் சீர்திருத்தத்தில் பெரும் சிரத்தை எடுத்துக்கொள்வாள். மாதர் சங்கத்திற்குக் காரியதரிசியாக இருந்து, மாதர் மத்தியில் மகத்தான சேவையாற்றியுள்ளாள். குழந்தைகள் நலனுக்காகப் பெரிதும் பாடுபடுவாள். மேற்கு வங்காளத்தில் ஏற்பட்ட வெள்ள நிவாரண வேலையில் சர். பி. சி. ராயுடன் சேர்ந்து அவள் செய்துள்ள சேவையை வங்காளம் ஒருக்காலும் மறக்காது. அனுதை சாலைகளுக்கு ஆதரவு தருவதில் முந்திக்கொள்வாள். உபசார பொழிவுப் பணியில் பெரும் பங்கெடுத்துக் கொண்டாள். கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் மத்தியில் அவர்களுடைய உபதலைவராக ஒப்பற்ற தொண்டாற்றியுள்ளாள். ஏழை ஆசிரியர்களுக்கும், தாதிமார்களுக்கும், வீடு வாசல்

அற்றவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் அவள் செய்துள்ள சேவை போற்றற் பாலது. தனது வாழ்க்கையாலும், செயலாலும், அன்பாலும், பிரசங்கத்திலுைம், உபசாரத்திலுைம், அவள் அநேகரைக் கிறிஸ்தவர்களாக்கியுள்ளாள். திக்கற்றவர்களுக்கும், அனாதைகளுக்கும், பரம ஏழைகளுக்கும், ஒரு இன்ப நிலையம் நிறுவ வேண்டுமென்பதே அவளுடைய கடைசிகால ஆசை. அந்த ஆசையை நிறைவேற்ற என்னால் ஆவன செய்தேன்.

சந்தியா என்ற எனது இல்லத்தையே இதற்கென்று தருமமாக அளித்துவிட எண்ணினேன். ஆனால், இந்த இல்லம் ஒரு பொதுவான இடத்தில் இல்லாது, ஒரு ஒதுக்கமான இடத்தில் இருந்தமையின், இந்த இல்லம் இதற்கு ஏற்றதல்ல என்று அத்தியட்சர் ஆலோசனை அளித்தார். ஆகவே நான் இந்தச் சந்தியா இல்லத்தை விற்று, அப்பணத்தை வைத்து எஸ். பி. ஜி. மிஷன் நிலத்தில் ஒரு ஏழைகள் இன்ப நிலையம் நிறுவ முடிவு கட்டினேன். எனது நண்பர்களும், அன்பர்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும், குஷ்டரோக விடுதியிலுள்ளவர்களும்கூட இக்கட்டட நிதிக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து உதவினர். இருபதாயிரம் ரூபாய் செலவில் ஏழைகளுக்காக இன்ப நிலையம் கட்டப்பட்டது. எட்டாயிரம் ரூபாய் மூலதனமாக அளித்தேன். இம் மூலதனத்தின் வருவாயினின்று இந்நிலையத்தை நடத்தும் செலவுத் தொகை வந்துகொண்டே யிருக்கும்படியான ஒழுங்கு செய்தேன். அத்தியட்சாதீன மாதர் பணி மன்றத்தார் மேற்பார்வையின்கீழ் சில தருமக் கர்த்தாக்களின் கூட்டு ஆட்சியால் இன்ப நிலையம் கண்காணிக்கப்படவேண்டும். எனது வாழ்நாள் வரைக்கும் நான் வாழ்வதற்கு ஓர் இடமும், இங்கு எனக்கு அளிக்கப்பட்டது. அவ்வாறே எங்களுக்குச் சீரிய சேவை செய்

துள்ள ரெபெக்காளுக்கும் குடியிருக்க ஓர் இடம் இங்குத் தரப்பட்டது.

இன்ப நிலேயம், ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், அனதைகளுக்கும் ஒரு அடைக்கலப் பட்டணம்போல் பயன் பட்டு வருகின்றது. இந்நிலேயத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயம், இந்நிலேய வாசிகளுக்கு ஒரு பேரின்ப ஊற்றுப்போல் இருந்து வருகிறது. இப்புயல் மிக்க பூவுலகில் இத்தகைய அமைதியும், ஆறுதலும் வழிந்தோடும் ஆலயம் அத்தியாவசியத் தேவையாகும். பேரின்பத்திற்கு ஒரே ஒப்பற்ற ஊற்றுன வர் இயேசுநாதர் ஒருவரே. அவரை அண்டுகின்றவர்கள் பேரானந்தம் பெறுகின்றனர். ஏழைகளின் இன்ப நாடி, உயிர்த் துடிப்பு இயேசு பகவான்தான். இந் நிலேயத்தின் மூலம் ஏழைகள் மத்தியில் இயேசுவின் நாமம் மகிமைப்பட வேண்டும்.

நான் என் வாழ்வின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள் ளேன். மரண யோர்தானின் அலேகள் என்மீது மோதுவதைக் காண்கின்றேன். இந்த யோர்தானேக் கடந்து பரம கானனுக்குள் பிரவேசிக்க எனக்கு ஒத்தாசையாக பரம படகு எப்பொழுது வரும் என்று அதன் வருகைக்காகக் காத்திருக்கின்றேன். யோர்தானேக் கடக்க கடவுள் எனக்குப் படகு அனுப்பினவுடனே நான் பிரயாணம் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். பிரயாணத்திற்குரிய ஆயத்தம் செய்துவிட்டேன். மூட்டை முடிச்சுகளே யெல்லாம் கட்டிவிட்டேன். பரம கானனுக்குள் பிரவேசிக்கும் நாளே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் இதுகாறும் எனது இதயப்பூர்வமாக நேசித்து சேவித்த இயேசு பகவானே என் கண் குளிரக் காணும் நாள் எந்நாளோ!" ஆமென். கர்த்தராகிய இயேசுவே சீக்கிரமாய் வாரும். நான் இந்து மதத்தில் பிறந்தபோதி

லும், என்னைத் தடுத்தாட்கொண்டு எனது வாழ்க்கையெல்லாம் கிறிஸ்துவுக்காகத் தொண்டு செய்யும் பெரும் கருணையளித்த கிறிஸ்து பகவானுக்கு நன்றி. வணக்கம்.''

''ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலம் உள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக இயேசுவே, தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பும் ஆனார்.'' (1 கொரிந்தியர் 1 : 27, 29).

கர்த்தாவே, இயேசு பகவானே, என்னைத் தடுத்தாட்கொண்ட தெய்வமே, உமக்கே நன்றி கலந்த வணக்கம். என் வாழ்க்கையையும், இவ்வரலாற்று நூலையும் உமது பரிசுத்த நாம மகிமைக்காகப் பயன்படுத்திக்கொள்ளும், சுவாமி. இயேசுவைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகின்றேன். இயேசுவின் புனித நாமம் என்றும் வாழ்க.

முற்றிற்று.

ELS

BOOKS THAT RADIATE LIGHT

PREMANAND

An Autobiography

விலை : ரூ. 1 . 25

BAPUJI PRESS, MOUNT ROAD, MADRAS